தேகம்

சாரு நிவேதிதா

தேகம்

சாரு நிவேதிதா

தேகம்

சாரு நிவேதிதா

Thegam © 2019 Charu Nivedita

First Edition : 2010

First Edition by Ezutthu Prachuram February 2019

(An imprint of Zero Degree Publishing)

ISBN: 978 93 87707 39 9

Title No. EP: 47

Zero Degree Publishing
No. 55(7), R Block, 6th Avenue,
Anna Nagar,
Chennai – 600 040

Website : www.zerodegreepublishing.com
E Mail : zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

Layout: Creative Studio

செல்வ நயினாருக்கு...

கரங்களில்லாமலே பற்றுகிறாய்;
கால்களில்லாமலே விரைகிறாய்;
கண்களில்லாமலே பார்க்கிறாய்;
செவிகள் இல்லாமலே கேட்கிறாய்;
அறிவன எல்லாவற்றைறையும் அறிந்து கொள்கிறாய்;
ஆனால் எவராலும் அறிந்து கொள்ள முடியாததாய் இருக்கிறாய்.
நீயே ஆதியாக நீயே அண்டமாக
நீயே பூர்ணமாக இருக்கிறாய்.

ஸ்வேதாஸ்தர உபநிஷத்: அத்யாயம் 3, ஸ்லோகம் 19

தேஹமத்த்யே ப்ரம்ஹநாடீ ஸுஷும்னா ஸூர்ய ரூபிணீ
பூர்ணசந்த்ராபா வர்த்ததே
ஸா து மூலாதாரா—தாரப்ப்ய ப்ரஹ்மாந்த்ர—காமினீ பவதி
தன் மத்த்யே தடித்தோடி ஸமான காந்த்யா
ம்ருணால—ஸூத்ரவத் ஸுக்ஷாங்கீ குண்டலினீதி ப்ரஸித்தாஸ்தி
தாம் த்ருஷ்ட்வா மனஸைவ நர: ஸர்வபாப—விநாஷத்வாரா
முக்தோ பவதி

தேகத்தின் மத்தியில் பிரம்மநாடி என்கிற ஸுஷும்னா நாடி சூரியனைப் போல பிரகாசமாகவும், சந்திரனைப் போல குளிர்ச்சியாகவும் உள்ளது. அது மூலாதாரத்திலிருந்து தொடங்கி பிரம்ம மந்திரம் எனும் உச்சிக் குழி வரை செல்கிறது. அதன் நடுவிலே கோடி மின்னல் பிரகாசத்துடன் கூடிய தாமரை நூல் போல் மெல்லியதாகக் குண்டலினி உள்ளது. மனக்கண்ணால் அதைக் காணக்கூடிய மனிதன் சர்வ பாவங்களிலிருந்தும் விடுபடுவதன் மூலம் முக்தி அடைகிறான்.

அத்வயதாரகோபநிஷத்
அத்தியாயம் 1 ஸ்லோகம் 2

1

டார்ச்சர் செய்யும்போது தர்மா தன் முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிக்கொள்வது வழக்கம். அடையாளம் தெரிந்தால் உயிருக்கு ஆபத்து. டார்ச்சருக்கு ஆளானவர்கள் செத்துவிட்டால் பரவாயில்லை; ஆனால் அப்படி செத்துப் போனால் டார்ச்சரின் அடிப்படையே தகர்ந்துவிடும். டார்ச்சருக்கு ஆளானவர்கள் உயிரோடு திரும்ப வேண்டும் என்பதால்—தான் கொலையைவிட டார்ச்சர் உயர்வானதாகக் கருதப்படுகிறது. டார்ச்சர் செய்வதற்கு உடல் பலத்தோடுகூட ஆன்மபலமும் தேவை. டார்ச்சர் செய்யும்—போது அதற்கு ஆளாகிறவரின் கண்களைப் பார்த்தால் யாருக்கும் டார்ச்சர் செய்யத் தோன்றாது. ஆனால் தர்மாவுக்கு அதெல்லாம் பிரச்சினையே இல்லை. பாதிக்கப்பட்டவனின் வாயை மட்டுமே கட்டுவான். அதுகூட எதற்கென்றால், அந்தக் கொட்டடி எவ்வளவுதான் ஊருக்கு வெளியே இருந்தாலும், எவ்வளவு கத்தினாலும் வெளியே கேட்காது என்றாலும், தர்மாவுக்கு சத்தம் பிடிக்காது. ஆனாலும் சமயங்களில் வாய்க்கட்டை எடுத்துவிடுவான், அவர்களின் தாங்கும் சக்தி எவ்வளவு தூரம் போகிறது என்று பார்ப்பதற்காக.

சில பன்றிப் பயல்கள் பன்றிகளைப் போல் கத்துவான்கள். சின்ன வயதில் அவன் பன்றி பிடிக்கப் போவான். பன்றி வேட்டை என்றால் அன்றைய தினம் அவனுடைய சேரியில் கொண்டாட்டம். ஆனால் அந்த விஷயம் பன்றிகளுக்கு எப்படித்தான் தெரியுமோ, ஒரு பன்றியில்லாமல் ஓடி ஒளிந்துவிடும். வீட்டுப் பன்றி என்றால் கூப்பிட்டால் வந்துவிடும் என்பார்கள்; அதெல்லாம் வெளியூர் பன்றிகள்தான். இந்த ஊர் பன்றிகள் அப்படி அல்ல. நாயைவிட மோப்ப சக்தி அதிகமோ என்னவோ, சுளுக்கியில் சுருக்குக் பிற்றைக் கட்டிக்கொண்டு ஆறு ஏழு பேராகக் கிளம்பியதும் எல்லாம் சொல்லி வைத்துப் பதுங்கி விடும். பன்றி பிடிப்பது போன்ற ஒரு கஷ்டமான காரியம் இந்த உலகத்திலேயே கிடையாது. கருவேலங்காட்டுப் புதர்களுக்குள் சுளுக்கியை விட்டுக் குடாய்ந்தால் வீறிட்டுக்

கத்தியபடி நம் கவுட்டிக்குள் புகுந்து ஓடும். ஒரு பன்றியைப் பிடிக்க அரை நாள் ஆகும். முன்பெல்லாம் சுளுக்கியில் சுருக்கைப் போட்டு மரத்தின் அடியில் கட்டி வைத்து சூடாக பீயும் பேண்டு வைப்பார்களாம். ஆனால் இந்த ஊர் எமகாதகப் பன்றிகள் சுருக்குக் கயிற்றை சுற்றிக்—கொண்டு வந்து பீயைத் தின்றுவிட்டுப் போகுமாம். தர்மா அதைப் பார்த்ததில்லை. பெரியவர்கள் சொல்லிக் கேள்வி. அதனால்தான் இப்படி ஆறு ஏழு பேர் சுளுக்கியைத் தூக்கிக்கொண்டு அலைவது. உண்மையில் தர்மாவுக்கு அப்போது மிகப் பெரிய தத்துவார்த்தக் கேள்விகளெல்லாம் தோன்றும். நாம் நம்முடைய வயிற்றுக்காக பன்றியை வேட்டையாடுகிறோம். ஒவ்வொரு நாளும் பிச்சைக் கஞ்சியைக் குடித்துக் குடித்து வாய் செத்துப்போன நிலையில் மாதம் ஒருமுறையாவது வாய்க்கு ருசியாக பன்றிக்கறி சாப்பிட வேண்டியிருக்கிறது. நாள் பூராவும் தெருத் தெருவாக பீ அள்ளிவிட்டு சாயங்காலம் போய் அலுமினியக் குண்டானை நீட்டினால் “என்னடி இது, இவ்வளவு சின்ன பாத்திரமா எடுத்துக்கிட்டு வந்திருக்கே? நாலு படி அரிசில்ல வடிக்கணும் போல்ருக்கு” என்று கிண்டல் பண்ணிவிட்டு ஒரு கரண்டி சோற்றைப் போட்டு அதில் கொஞ்சம் குழம்போ ரசமோ விடுவார்கள். பிறகு அடுத்த வீடு. அங்கே ஒரு கரண்டி சோறு. முந்தாநாள் வைத்து ஊசிப்போன குழம்பு. இப்படி பத்து வீடுகளில் பிச்சை கேட்டால் வீட்டில் எல்லோருக்கும் சாப்பிட ஒரு கவளம் சோறு கிடைக்கும். சோறும் ஊசிப்போன குழம்பும் ரசமும் எல்லாம் சேர்த்த கலவையைச் சாப்பிட்டால் தர்மாவுக்கு வாந்தி வரும். எத்தனையோ தடவை அப்படி வாந்தி எடுத்திருக்கிறான். அப்போதெல்லாம் அம்மாவும் நைனாவும் “இவன் மட்டும் எப்படி இங்கே வந்து பிறந்தான்?” என்று திட்டுவார்கள். ஆனால் அந்தத் திட்டில் கொஞ்சம் பெருமையும் கலந்திருக்கும். நைனா பன்னிப் பீ அள்ளி, காயப் போட்டு உரமாக்கி விற்ற காசில் எப்போதாவது ரெண்டு இட்லி வாங்கிக் கொடுப்பார். அப்போதெல்லாம் தர்மாவுக்கு இட்லிதான் தெய்வம். பிற்காலத்தில் படிப்பின் மூலம் அந்தச் சேரியிலிருந்து வெளியே வந்து இந்திய மிடில் கிளாஸ் வெள்ளத்தில் கரைந்த பிறகும் இட்லி என்றால் அவன் 20 இட்லிகளை விழுங்குவது அந்தக் காரணத்தினால்தான். சேரியிலிருந்து வந்த இன்னொரு பழக்கம், சோற்றைப் போட்டு அதிலேயே

குழம்பு, ரசம், தயிர் எல்லாவற்றையும் விட்டு உருண்டை உருண்டையாக வெட்டி உள்ளே தள்ளுவது.

சுருக்கில் பன்றி மாட்டிய பிறகு அதற்கு நடக்கும் ஆக்கினைகளை ஒருவர் கண்கொண்டு பார்க்க வேண்டும். அதற்குமேல் அவர் தாவரங்களைத் தவிர வேறு எந்த ஜீவராசியையும் உண்ண மாட்டார். அதன் கால்களை இறுக்கிக் கட்டி விட்டு உலக்கையாலேயே அடித்துக் கொல்வார்கள். தர்மாவும் அடிப்பான். அந்தப் பன்றியைக் கொல்வது ஒன்றுதான் அவனுக்கு அப்போதைய சிந்தனையாக இருக்கும். அப்போது அது போடும் சத்தம் இருக்கிறதே, எட்டு ஊருக்குக் கேட்கும். அதற்காகவே மூக்கையும் வாயையும் சேர்த்துக் கட்டி விடுவார்கள். எப்படி என்று தெரியும்தானே? ஒரு மூக்கில் கயிற்றை விட்டு இன்னொரு மூக்கின் வழியே இழுத்து அப்படியே வாயைச் சுற்றிக் கட்டுவது. உலக்கையால் அடிக்கும்போது அந்தக் கட்டையும் மீறி அது போடும் உறுமலும் ஆட்டமும் இருக்கிறதே, கடவுள் என்று ஒருத்தன் இருந்தால் அவனை இதுபோல் அடித்துக் கொல்ல வேண்டும் என்று மறுநாள் யோசித்துப் பார்ப்பான் தர்மா. அப்போதுதான் அந்தத் தத்துவார்த்த சந்தேகமெல்லாம் அவனுக்கு வரும். தயவுசெய்து இதைப் படிப்பதை நிறுத்தி விட்டு அந்தக் காட்சியை உங்கள் மனக்கண்ணில் கொண்டு வாருங்கள். கோழியையோ ஆட்டையோ அறுப்பது ரொம்ப சுலபம். ஆனால் பன்றி அப்படி அல்ல. அதன் கழுத்து பெரிது. என்னதான் கால்களைக் கட்டினாலும் அதை உயிரோடு அறுப்பது அசாத்தியம். அதனால் உலக்கையால் அடித்துக் கொன்ற பிறகு அதை நெருப்பில் போட்டுத் தீய்ப்பார்கள். இந்த உலக்கை அடிக்கு யார் காரணம்? பன்றிதானே? அது பாட்டுக்கு கோழியையும் ஆட்டையும் போல் பிரச்சினை பண்ணாமல் காண்பித்தால் அதை ஏன் உலக்கையால் அடித்துக் கொல்கிறார்கள்? சுட்டுப் பொசுக்கி தென்னை ஓலை அல்லது வாழை இலை மேல் போட்டு ஆற வைத்து அதற்குப் பிறகுதான் கழுத்தை அறுப்பார்கள். மனித குலத்தில் பெண்ணடிமைத்தனம் பரவலாக இருக்கிறது என்றும், பெண்ணாகப் பிறப்பது துரதிர்ஷ்டமானது என்றும் பல பெண்ணியவாதிகளின் மூலம் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் பன்றிக் குலத்தில் ஆணாகப் பிறப்பதுதான் கொடுமை. என்ன காரணம் என்றால், இனப்பெருக்கம் நடக்காமல் இருப்பதற்காகக் ஆண் பன்றியின் கொட்டையை அறுத்து சாம்பலைத் தடவி

விடுவார்கள். அப்படிச் செய்யாவிட்டால் பன்றிகளின் எண்ணிக்கை மனித எண்ணிக்கையை விடக் கூடிவிடும். சாமிக்கு நேர்ந்துவிடும் சாமிப் பன்றிகளுக்கும் கொட்டையை அறுத்துவிடுவார்கள்.

கடவுள் என்ற ஒருவன் அல்லது ஒருத்தி இருந்தால் அந்தக் கடவுளிடம் தர்மா வேண்டுவதெல்லாம் எந்த ஜென்மத்திலும் பன்றியாகப் பிறந்துவிடக் கூடாது என்பதுதான். ஆனால் பன்றிக் கறியை மூக்கு முட்ட வெட்டிய பிறகு மறுநாள் உட்கார்ந்து யோசிப்பான் தர்மா. பன்றிக்கும் மனிதனுக்கும் என்ன வித்தியாசம்? பன்றி மட்டும் ஏன் மனிதனிடம் இப்படி வதைபட்டுச் சாக வேண்டும்? ஏன் மனிதன் பன்றிகளிடம் வதைபட்டுச் சாகக் கூடாது? இரண்டு குலத்துக்கும் உள்ள வித்தியாசங்களை யோசிப்பான். அறிவுதான் வித்தியாசம். பன்றிக்கும் சுளுக்கி செய்யத் தெரிந்திருந்தால் பன்றி மனிதனை சுட்டு சாப்பிட்டிருக்காதா? இதை ஒருநாள் தர்மா தன் அம்மாவிடம் கேட்டபோது அம்மா அவனை ஆச்சரியத்துடன் பார்த்து "மீருமா தேவரா" என்றார்கள். அதிலிருந்துதான் தர்மாவுக்கு இந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும் என்றும், அதற்கு ஒரே வழி அறிவைத் தேடுவதுதான் என்றும் தோன்றியது.

புடுக்கறுந்த பன்னி மாதிரி கத்துகிறான் என்று ஒரு சொலவடை உண்டல்லவா? அதற்கு அர்த்தம் கொட்டை அறுபட்ட பன்றிகள் போடும் சத்தம்தான். அதே போல் கத்துவான்கள் சிலபேர். தர்மாவிடம் ஒரு சட்டம் உண்டு. நீங்கள் எவ்வளவு சப்தமாகக் கத்துகிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு டார்ச்சர் அதிகமாகும். கத்தவே இல்லையானால் டார்ச்சர் கம்மி. இந்தப் பிரச்சினையெல்லாம் எதற்கு என்றுதான் அவர்களுடைய வாயைக் கட்டுவது.

மற்றவர்களின் தாங்கும் சக்தியைப் பார்ப்பதற்கு முன்னால் நம்முடைய தாங்கும் சக்தி எவ்வளவு தூரம் என்று பார்க்க வேண்டுமென நினைத்தான் தர்மா. நீதி சொன்னபடி தினமும் மாட்டு வால் சூப் சாப்பிட்டதில் அவனுடைய உடம்பு எவ்வளவு வலியைத் தாங்க முடியும் என்று தெரிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. நீதி சொன்னது உண்மையா? மாட்டு வால் சூப்பை சாப்பிட்டால் உடம்பு மாடு மாதிரி அடி தாங்கும் என்றான் அவன். மாட்டு வால் என்றால் அது சரியாக மாட்டின் வால் பகுதி அல்ல; வாலுக்கும் மேலே முதுகுத்தண்டு முடியும் பகுதி. ஏழு என்ற எண்ணின் வலது மூலை இருக்கிறதல்லவா, அந்த இடம். ஆனால் எல்லாவற்றுக்கும் ஒரு விலை இருக்கிறது என்பார்களே,

அதன்படி அடி தாங்கும் அளவுக்கு உடல் மரத்துப் போகும் என்பதால் பெண்களோடு உறவு கொள்ளும்போது உடலின் மொக்குகளில் இன்பம் முகிழ்ப்பதில்லை. மார்புக் காம்புகளில் எவளாவது நாவால் வருடினால் அது அவனுக்குள் எந்த சிலிர்ப்பையும் ஏற்படுத்துவதில்லை. கை கால் தொடை புட்டம் தோள் மார்பு எல்லாமே தங்களின் உணர்வு மொக்குகளை இழந்துவிட்டனவோ என்று தோன்றியது. ஆனாலும் அவனுடைய ஆண் குறி மட்டும் தன்னுடைய உணர்ச்சியின் ஒரு பாதியைத் தக்க வைத்துக் கொண்டது. ஓரல் செக்ஸ் என்றால் வேலை செய்த குறி யோனி செக்ஸ் என்றால் சலனமற்றுக் கிடந்தது. ம்ஹூம். அப்படியில்லை. விறைப்பு நிலையில் இருக்கும் குறி யோனியைத் தொடும்போது மட்டும் தொட்டாற் சுருங்கியாக படுத்துக்—கொண்டது. அதையும் மீறி சில பெண்கள் அவனுடைய ஆண்மையை எழுப்பும் திறமையுள்ளவர்களாக அமையும்போது அவர்கள் அன்று வாழ்நாளில் கண்டிராத உச்சங்களை அடைவது உறுதி. ஆனால் அப்படிப்பட்ட பெண்களை அவன் அரிதாகவே சந்திக்கிறான். மற்றபடி மாட்டு உடம்பாக மாறிய பின் பெண்களின் மேல் கையைப் போட்டால் 'ஐயோ, கையை எடு; மூச்சே நின்றுவிடும் போலிருக்கிறது' என்றார்கள். நெஞ்சின் மேல் கடப்பாரையைப் போட்டது போல் இருக்கிறதாம். ஒரு பெண் பாக்கியில்லாமல் எல்லோரும் இதையே சொன்னபோது ஆச்சரியமாக இருந்தது.

சரி, மாட்டு வால் சாப்பிட்டு மரத்துப் போனது வாஸ்தவம். ஆனால் எவ்வளவு தூரம் அடி தாங்கும் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்கு அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பஸ்ஸில் வழக்கம்போல் கூட்டம் அதிகமான ஒரு நேரத்தில் ஏறி, ஒத்துழைக்கக்கூடிய ஒரு பெண்ணின் பின்னால் நின்று தேய்த்துக்கொண்டிருந்தான். இதில் பல நுணுக்கங்கள் இருக்கின்றன, பார்த்துக் கொள்ளுங்கள். சில பெண்கள் நன்றாக ஒத்துழைக்கிறார்களே என்று நினைத்துப் பேராசை பிடித்து கையை பேண்டுக்குள் நுழைத்து உள்ளாடையிலிருந்து ஆண்மையை வெளியே விடுவித்துக்கொண்டு தேய்த்தால் விழித்துக்கொண்டு விரட்டி விடுவார்கள். ஆண்மை பேண்டுக்கு வெளியே தெரியாது என்றாலும், உள்ளாடையிலிருந்து விடுவிக்கப்பட்டு விடுவதால் குத்தீட்டி போல் நீட்டிக்கொண்டு நின்றால் புரிந்துவிடும்தானே? அதற்கு சில பெண்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஒரு அளவோடு வேலி

கட்டி —அதாவது, உள்ளாடைக்குள் இருந்தபடியே தேய்த்தால் ஆடி அடங்கும் வரை ஒத்துழைப்பு உத்தரவாதம்.

இன்னும் ஏகப்பட்ட விஷயம் இருக்கிறது. இருக்கையின் வெளி ஓரத்தில் அமர்ந்திருக்கும் பெண்ணின் தோள்பட்டையிலும் கையிலும் சேர்த்து தேய்க்கலாம். இதற்கு சில பெண்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்; சில பெண்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. அது அந்தந்த நேரத்தின் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. ஆனாலும் கடுமையான கள ஆய்வின் முடிவில் தர்மாவுக்கு சில விஷயங்கள் புலப்பட்டன. பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள்தான் இதற்கு அதிக ஒத்துழைப்பு நல்கினார்கள் என்று அவன் கண்டு கொண்டான். ஆனாலும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ரகம் என்று சொல்வதில் சந்தேகம் இல்லை. சில பெண்கள் ஒத்துழைப்பு கொடுத்துக்கொண்டே இருப்பார்கள்; ஆனால் கஞ்சி வரும் வேளையில் ஒதுங்கிக் கொண்டு முறைப்பார்கள்; அல்லது, திட்டுவார்கள். அது வரை ஏன்டி சும்மா இருந்தாய் என்று கேட்கத் தோன்றும். ஆனால் அவர்களுடைய பிரச்சினை என்னவோ; அது தெரியும் வரை அவர்களைக் குறை சொல்ல முடியாது. நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருக்கிறதே? ஆனால் சேடிஸத்தின் உச்சம் என்றால் அதுதான். கஞ்சி வரும் வரை ஒத்துழைப்பு கொடுத்துவிட்டு கஞ்சி வரும் வேளையில் கடுப்படித்துத் துரத்துவது. இவர்களை விட கையில் ஊசி வைத்துக்கொண்டு குத்தும் பெண்களும் ஹைஹீல்ஸினால் காலை நசுக்கி ரத்தக்களரி ஆக்கும் பெண்களும் பரவாயில்லையே? குறைந்தபட்சம், இந்த இடம் படியாது என்று தெரிந்துவிடுகிறது அல்லவா? (சமயங்களில் ஹீல்ஸ் காயம் ஆற அவனுக்குப் பல தினங்கள் ஆகியிருக்கின்றன).

சில சமயங்களில் வேறு சில அசம்பாவிதங்களும் ஏற்படுவதுண்டு. ஒருமுறை — அப்போது அவன் ஜேப்படி வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் — அவனுடைய கவனம் ஒருவனின் பாக்—கெட்டில் இருந்தது. அப்போது, கைலி கட்டிய இன்னொருத்தன் தன் ஆண்மையை வெளியே எடுத்து ஒரு பெண்ணின் புட்டத்தில் வைத்து ஆட்டிக் கொண்டிருந்தான். அதற்குத் தோதாக வேட்டியைப் போல் திறந்திருந்தது லுங்கி. பஸ்ஸில் கடும் கூட்டம். முழு கவனத்தையும் பர்ஸில் குவித்து வேலையை வெற்றிகரமாக முடித்திருந்தான் தர்மா. அதே

சமயத்தில், கைலி கட்டியவனுக்குப் புட்டத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த பெண் பஸ் நிறுத்தத்தில் இறங்குவதற்காக அவசரமாக வந்தாள். அப்போதுதான் அந்த அசிங்கம் நடந்தது. அந்தப் பரதேசிப் பயல் அவளுடைய புடவையிலேயே கஞ்சியைக் கொட்டி விட்டான் போல. அவ்வளவு கஞ்சியும் தர்மாவின் பேண்டில் பூசிவிட்டது. அடக்கடவுளே, செய்யாத வேலைக்கு அவமானம் சுமக்க வேண்டுமா என்று இவனும் சரசரவென்று அதே நிறுத்தத்தில் இறங்கினான். பேண்டின் முன்பக்கம் ஈஷியிருந்த கஞ்சி அப்பட்டமாகத் தெரிந்தது. அடக் கண்டார ஓளி, இப்படியா தேய்த்துவிட்டுப் போவாள்? ஆனால் அவளைச் சொல்லியும் குற்றமில்லை. அவள் என்ன செய்வாள் பாவம்? பக்கத்திலேயே குழாய் தேடிக் கழுவிக் கொண்டு ஆட்டோவில் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

இன்னொரு நாளும் அப்படி ஆட்டோவில் செல்ல நேர்ந்தது. உள்ளாடையிலிருந்து ஆண்மையை வெளியே எடுத்து — பேண்டுக்கு வெளியே அல்ல; உள்ளேதான் — தேய்த்ததில் கஞ்சி கொட்டிவிட்டது. அவனும் பஸ்ஸை விட்டு இறங்கி விட்டான். ஆனால் அவனுடைய துரதிர்ஷ்டம் மழை பிடித்துக்கொண்டது. கஞ்சியோடு தண்ணீர் சேர்ந்தால் இப்படியா சோப்பு நுரை போல் நுரைத்துக்கொண்டு பொங்கும்? கடவுளின் படைப்பில்தான் எப்படியெல்லாம் வினோதங்கள்!

மற்றொரு முறை, புட்டம் காட்டி ஒத்துழைத்த பெண்ணின் பின்னே நின்று தேய்த்துக்கொண்டிருந்த தர்மா, அந்த கைலிக்காரனின் பாதிப்பில் தன்னுடைய ஆண்மையை பேண்டுக்கு வெளியே எடுத்து விட்டுத் தேய்த்தான். ஆனால் அதிலிருந்த ஒரு நுட்பமான விஷயத்தை விட்டு விட்டானே? வேட்டி அல்லது மூட்டாத கைலி என்றால் யாராவது பார்த்தால் உடனே மறைத்துக்கொள்ளலாம். மூட்டிய கைலி என்றால் கூட சட்டென்று கீழே இறக்கிவிடலாம். ஆனால் தர்மாவோ பேண்ட் அணிந்திருந்தான். சட்டென்று ஜிப்புக்குள் போடுவது அவ்வளவு சுலபம் இல்லையே? அதனால்தானோ அல்லது அவனுடைய அன்றைய நாளின் ஊழ்வினையோ தெரியவில்லை; இதைக் கவனித்துவிட்ட வேறொரு பெண் குய்யோ முறையோ என்று கத்தி காரியத்தைக் கெடுத்துவிட்டாள்.

தர்ம அடி என்பதன் அர்த்தம் தர்மாவுக்கு அன்றுதான் புரிந்தது. ஆனால் வலிக்கவில்லை. இன்னொரு விஷயமும் இங்கே கவனிக்கத் தக்கது. தர்ம அடி வாங்கும் மற்றவர்களுக்கும் தர்மாவுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், அவன் தர்ம அடி வாங்கிய மறுநாள் ஒரு பெண் அவனுடைய முகத்திலிருந்த காயம் பற்றி விசாரித்துக்—கொண்டிருந்தாள். அந்தப் பெண் அந்த ஊரிலேயே மிகவும் செல்வாக்கான ஒரு கோடீஸ்வரனின் மகள். தர்மா ஒரு எழுத்தாளனாகவும் இருந்ததால் அந்த வகையில் அவனுக்குத் தோழியானவள்.

“ஒரு பிச்சைக்காரனாகிய என்னை நீ எப்படி நண்பனாக ஏற்றுக்—கொண்டாய்?”

“பணக்காரக் குடும்பத்தில் பிறந்துவிட்டதால் என்னை இதுவரை என் அம்மாவையும் அப்பாவையும் தவிர வேறு யாருமே ஒருமையில் அழைத்ததில்லை. நீங்கள் என்னை ஒருமையில் அழைத்தீர்கள்; அதுவும் முதல் சந்திப்பிலேயே. பள்ளிக்கூடப் பையைக் கூட நான் சுமந்ததில்லை” என்றாள்.

இந்தக் காட்சி தமிழ் சினிமாவில் வருவதுபோல் இருப்பதற்காக வாசகர்—கள் மன்னிக்க வேண்டும். தர்மாவின் வாழ்வில் என்னென்ன நடந்ததோ அதை அப்படி அப்படியே பதிவு செய்துகொண்டிருக்கிறேன். சும்மா ஒன்றும் விசாரிக்கவில்லை. தன் மலரினும் மெல்லிய விரல்களை அவன் நெற்றியில் ஒற்றியெடுத்து “ரொம்ப வலிக்குதா?” என்று கேட்ட அவளிடம் அவன் அப்போது வெர்லெய்னின் ‘என் இதயத்தில் விழுந்த கண்ணீர்' என்ற கவிதையைப் பாடினான்.

Tears fall in my heart
Rain falls on the town;
what is this numb hurt
that enters my heart?

Ah, the soft sound of rain
on roofs, on the ground!

To a dulled heart they came,
ah, the song of the rain!

Tears without reason
in the disheartened heart.
What? No trace of treason?
This grief's without reason.

It's far the worst pain
to never know why
without love or disdain
my heart has such pain!

அன்றுதான் முதல்முதலாக அவள் அவனை முத்தமிட்டாள். வெர்லெய்னுக்கு நன்றி.

அன்றைய இரவு அவன் ஒரு கவிதை எழுதினான். கலவிக்கும் டார்ச்சருக்கும் பிறகு கவிதை எழுதுவது அவன் வழக்கம்.

கனவும் வண்ணத்துப் பூச்சியும்

இதுவரை

என் கனவில்

வனங்களும்

வனமிருகங்களும்

மலையும்

நதியும்

நட்சத்திரக் கூட்டங்களும்

மழையும்

மின்னலும்

இன்னபிறவும்

வந்து போயுள்ளன
ஒருநாள்
வேட்கை கொண்ட
வெண்புரவியொன்று
எனைப் புணர்ந்தது
போல் கனாக்கண்டு
திடுக்கிட்டெழுந்ததும்
உண்டு
ஆனால்
மானுடர் எவரையும்
கண்டதில்லை காண்
ருதுவானபோது
அதை நான்
முதலில் சொல்லக் கேட்ட
என் தந்தை
சோறூட்டி சீராட்டி
வளர்த்த என் தாய்
விளையாட்டுத் தோழனான
சகோதரன்
சிநேகிதிகள்
சிநேகிதர்கள்
யாரும்
யாரும்
வந்ததில்லை

என் கனவில்

முதல்முதலாய்

வந்த

வனகுமாரன்

நீ

அம்மணமாயிருந்த உன்

ஆண்குறியில்

ஈட்டி ஒன்றைக்

குத்தியிருந்தாய்

அலறிக் கொண்

டெழுந்த போது

மாயமான உன்னைக்

குருதியின் தடம்

பற்றித்

தொடர்ந்தேன்

எதிர்ப்பட்ட பனிப்பாலையில்

வேட்டையாடிய மிருகமொன்றைத்

தின்று கொண்டிருந்தவன்

பல்லை இளித்துக்

காண்பித்தான்

அந்த இடத்தில்

குருதித் தடம்

முடியக் கண்டு

நினைவிழந்தேன்

கண்டது கனவா

கனவிலொரு கனவா

என மயங்கிய போது

வண்ணத்துப் பூச்சியொன்று

சிறகடித்துப்

பறந்து கொண்டிருந்தது.

2

ம ரணம் ஒரு புதிர். புதிர்கள் எப்போதும் உனக்கு பயத்தையே அளிக்கின்றன. அதன் காரணமாகவே மதத்தை ஏற்படுத்தினாய். மரணத்திலிருந்து தப்பவே முடியாது என்று தெரிந்தும், அதிலிருந்து தப்புவதற்காக நீ மதத்தின் பின்னாலும், கடவுளின் பின்னாலும் ஓடிக்கொண்டிருக்கிறாய்.

வாழ்வின் மீதான பயத்தினாலும் மரணத்தின் மீதான பீதியினாலுமே நீ கடவுளை வணங்குகிறாய்; அன்பினால் அல்ல.

மரணத்தைக் குறித்துக்கூட நீ பீதி கொள்வதில்லை. இந்த உலக வாழ்வின் மீதான பற்றுதலைக் குறித்தே பீதி கொள்கிறாய். சொத்து சுகங்களையும், சொந்த பந்தங்களையும் பிரிய வேண்டுமே என்ற பீதி.

பற்றை அறு;

இழப்பதற்கு ஏதுமற்றவனாக இரு;

மரணம் ஒரு கால்பந்தாக மாறும் ரசவாதத்தைக் காண்பாய்.

மந்தவெளி பஸ் ஸ்டாண்டுக்கு எதிரே அப்போது ஒரு திறந்தவெளி பார் இருந்தது. மேஜை நாற்காலியெல்லாம் கிடையாது. கீழே தரையில் ஆற்று மண் பரப்பி கல் போட்டிருப்பார்கள். வசதியாக உட்கார்ந்து குடிக்க ஏதுவான கல். தூணிலிருந்து பெயர்த்தது. பின்னால் சாய்ந்துகொள்ள முடியாது, அவ்வளவுதான். ஆனால் பார்க் ஓட்டலில் உள்ள லெதர் பாரிலும் அப்படித்தானே? அங்கே லெதர் ஸ்டூல். இங்கே கல்தூண். ஆனால் ஒரு வகையில் லெதர் பாரை விட இந்த இடம் தேவலாம். மேலே வெட்டவெளி. தனியாக வந்து குடிக்கலாம். லெதர் பாரில் பெண்ணோடு போனால்தான் உள்ளே விடுவான். எது எப்படிப் போனாலும் ஒவ்வொரு இடத்துக்கும் உள்ள

நல்லது கெட்டதுகள் இருக்கத்தான் செய்கிறது. இங்கே மந்தவெளி பாரில் சினிமா நடிகைகளைப் பார்க்க முடியாதே?

இந்த பாரில்தான் நீதி அவனுக்குப் பழக்கமானான். தனியாக உட்கார்ந்து தண்ணி அடித்துக்கொண்டிருந்த தர்மாவுக்கு எதிரே இருந்த கல்லில் ‘‘உட்காரலாமா?’’ என்று கேட்டுத் தயங்கிய அந்த மனிதனை ‘‘தாராளமாக உட்காருங்கள்’’ என்றான் தர்மா.

20 வயது இருக்கும். பாரில் மட்டுமே காண முடிகின்ற ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம், மனித நேயம் ஆகிய விவகாரங்களின்படி க்ஷணநேரத்தில் தர்மாவம் நீதியும் அத்யந்த நண்பர்களாகிவிட்டனர். நீதி வியாசர்பாடியைச் சேர்ந்தவன். அம்மா கஞ்சா வியாபாரி.

அப்போதுதான் தர்மா திடீரென்று கவனித்தான், நீதி தன் பக்கவாட்டில் வைத்திருந்த துணிப்பையிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. உற்றுப் பார்த்தபோது அந்தப் பையில் ஒரு அரிவாள் நீட்டிக்—கொண்டிருந்ததும் தெரிந்தது. மற்ற நேரமாக இருந்திருந்தால் அந்த இடத்தை விட்டு அப்படியே ஓடியிருப்பான் தர்மா.

அவன் அடிப்படையில் கோழை. தைரியம், துணிச்சல் என்பதெல்லாம் என்ன விலை என்று கேட்பான். அதனால்தான் அவனுக்குக் கம்யூனிசத்தின் மேல் மிகுந்த ஈடுபாடு இருந்தும் புரட்சிகர இயக்கங்களில் சேரவில்லை. தைரியம் மட்டும் இருந்திருந்தால் அவன் இந்த மந்தவெளி பாரில் வந்து உட்காரும்படி இருந்திருக்காது. இந்நேரம் ஏதாவது ஒரு தடை செய்யப்பட்ட புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்து வர்க்க எதிரிகளான போலீஸ் கான்ஸ்டபிள்கள் ஒன்றிரண்டு பேரையும், சில லோக்கல் மிராசுதார்களையும் போட்டுத் தள்ளி விட்டு தலைமறைவாகவோ அல்லது ஜெயிலிலோ இருந்திருப்பான். தைரியம் இல்லை. அதனால்தான் தமிழகத்தின் சே குவேராவாக அவனால் மாற முடியவில்லை. மற்றபடி தியரிட்டிக்கலாக அவன் ஒரு கிங். சே குவேராவின் பொலிவியன் நாட்குறிப்புகள் அவனுக்கு மனப்பாடம். அதை விட அவருடைய கெரில்லா வார்ஃபேர் என்ற புத்தகத்தில் அவர் முன்வைத்த திஷீநீஷீ தியரி பற்றி அவனால் மணிக்கணக்கில் உரை—யாற்ற முடியும். அந்த ஃபோக்கோ தியரியில் எந்தெந்த அம்சங்களைப் பின்பற்றாமல் சே பொலிவியக் காடுகளில்

அமெரிக்க ராணுவத்திடம் சிக்கினார் என்பதை அவன் மிக கவனமாக ஆராய்ந்திருக்கிறான். ஃபோக்கோ தியரியின் முக்கியமான அம்சம், நம்முடைய கெரில்லா பயணத்தின் போது யார் நம்முடைய வழியில் குறுக்கிட்டாலும்— அவர்கள் நம்முடைய ஆதரவாளர்களாகவே இருந்தாலும் கூட அவர்களைத் தீர்த்துக் கட்டிவிட்டே நம் பயணத்தைத் தொடர வேண்டும். ஆனால் சே அதைச் செய்யவில்லை. அவர் வழியில் குறுக்கிட்ட ஏழை விவசாயிகள் பலரை அவர் விட்டுவிட்டார். அவர்கள்தான் ராணுவத்துக்கு சே சென்ற வழியைத் தெரிவித்தவர்கள். அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. அவர்கள் என்ன வேண்டுமென்றா செய்தார்கள்? அவர்கள் சொல்லவில்லையானால் ராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகி இருப்பார்கள்.

தர்மாவுக்கு போலீஸின் மீது இருந்த பயத்தினால்தான் புரட்சிகர இயக்கங்களில் சேரவில்லை. அதில் சேர்ந்து போலீஸுக்குக் காட்டிக் கொடுப்பதை விட சேராமலே வெளியிலிருந்து தார்மீக ஆதரவை அளிப்போமே என்று நினைத்தான். போலீஸ் விசாரணையின் போது அவர்கள் கேட்பதற்கு முன்பே எல்லா தகவல்களையும் கொடுத்து விடக் கூடிய ஒருவன் எப்படிப் புரட்சிகர இயக்கத்தில் சேர முடியும்? இப்படியாகத்தான் அவனுடைய வாழ்நாள் கனவு நனவாகாமல் போனது. புரட்சியெல்லாம் இருக்கட்டும்; எங்கேயாவது அடிதடி என்றால்கூட முதலில் அந்த இடத்திலிருந்து ஓடுவது அவனாகத்தான் இருக்கும். அப்படிப்பட்டவன் ஜேப்படித் திருடனாக இருந்ததும் ஆச்சரியம்தான். எல்லாம் மனித வாழ்வின் முரண்பாடுகள், என்ன செய்ய?

ஜேப்படி அளவுக்குத்தான் தைரியம் இருந்ததே தவிர வெட்டு குத்து கொலையைப் பார்க்கும் அளவுக்கோ அம்மாதிரி ஆட்களிடம் பேசி உறவாடும் அளவுக்கோ அவனுக்கு தைரியம் இல்லை. கொஞ்சம் ஓல்ட் மாங்க் உள்ளே போயிருந்ததால் தைரியம் வந்திருந்தது. கேட்கலாம் என்று வாயெடுப்பதற்குள்ளேயே நீதி ‘‘இப்போதான் ஒர்த்தனை செஞ்சுட்டு வர்றோங்ணா’’ என்றான். சொல்லிவிட்டு பையிலிருந்து அந்த நீண்ட கத்தியை எடுத்துக் காண்பித்தான். இதுவரை அவன் பார்த்த கத்திகளிலிருந்து வேறுபட்டிருந்தது அது. இரண்டு பக்கமும் சீப்பைப் போல் கூர்மையான பற்கள் இருந்தன. ‘‘குத்தி வெளியே எடுக்கும்போது குடலையும் சேர்த்து எடுத்துக்கொண்டு வரும்’’ என்றான் நீதி.

ரத்தம் சொட்டும் கத்தியை வைத்துக்கொண்டு இப்படி சுதந்திரமாக உலவுவது ஆபத்து இல்லையா?

அவன் சொன்ன கதை இதுவரை தர்மா கேள்விப்பட்டிராததாக இருந்தது. யாரை செய்ய வேண்டும் என்று அவர்களுடைய தலைவர் சொல்லுவார். அன்னாரைப் போட்டுத் தள்ள வேண்டியது நீதி மற்றும் அவனுடைய சகாக்களின் வேலை. வேலையை முடிக்க கும்பலாகத்தான் செல்வது.

ஏன்?

“யாருக்கும் அவ்வளவு தில் கிடையாது. ரொம்பக் கோளைங்கோ. ஃபுல்லா மப்பு ஏத்திக்கிட்டுத்தான் போவோம். அப்போதான் குத்த முடியும். இல்லேன்னா பார்ட்டி கெஞ்சுறதப் பார்த்து மெர்ஸலாயிடுவோம். அதுலயும் யார் குத்துல பார்ட்டி செத்தான்னு எங்களுக்கே தெரியாது. அதுனாலதான் ஏழெட்டு பேரா போறது. இந்த ரவுடிப் பசங்களே ரொம்ப கோழைங்ணா... தனியா இருந்தா தொட கிடல்லாம் நடுங்கும். ஜெயில்ல கூட தனியா போட்ராதீங்கன்னு—தான் கெஞ்சுவோம்.”

கொலை பற்றிய செய்திகளை தினசரிகளில் படிப்பதற்கும் நேரில் கேட்பதற்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது. காண்பிக்கப்பட்ட ஆளை ‘செய்து’ முடித்த பிறகு அந்த ஏழெட்டு பேரும் போலீஸிடம் சரணடைந்து விடுவார்கள். ஆனால் அது சரண் மாதிரி தெரியாது. போலீஸே இந்த கோஷ்டியைத் தேடிக் கண்டுபிடித்த மாதிரி இருக்கும். கொலை நடந்த ஒரே வாரத்தில் கொலையாளிகளைப் பிடித்துவிட்ட போலீஸ் அதிகாரிக்கு விருது கிடைக்கும். ஆனால் நடப்பது என்ன—வென்றால் வேறு. இந்தக் கொலைக்குக் காரணமான ஆள் போலீஸை செமத்தியாக கவனித்து விடுவார். அதனால் போலீஸ் குற்றவாளிக்கு எதிராக பலவீனமான பிரிவுகளில் வழக்கைப் பதியும். அடுத்தது, அரசு வக்கீல்.

அவர்தான் குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டியவர். ஆனால் பார்ட்டியிடமிருந்து பைசா வாங்கிக் கொண்டு அவரும் குற்றவாளிக்கு எதிராக கடுமை காண்பிக்க மாட்டார். ஜாமீனில் எடுத்தால் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்; குற்றவாளியின் வக்கீல் உளறுவதைக் கண்டுகொள்ள மாட்டார்.

அதனால் அக்யூஸ்டு ஒன் அக்யூஸ்டு செவனாக மாறி ஜாமீனில் வெளியே வந்துவிடுவான்.

ஸ்டேஷனில் அடிக்காமல் இருப்பதற்காக ஏட்டுக்குக் காசு; குற்றவாளிக்கு பீடி சிகரெட் பான்பராக் டீயெல்லாம் வாங்கிக் கொடுக்க கான்ஸ்டபிளுக்குக் காசு; எஃப்பையாரை பலவீனமாகப் போடுவதற்கு சப் இன்ஸ்பெக்டருக்குக் காசு; அதை சப் இன்ஸ்பெக்டர் சொல்லிய வண்ணம் ஏட்டில் பதிவு செய்வதற்கு ரைட்டருக்குக் காசு; இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருப்பதற்கு அஸிஸ்டெண்ட் கமிஷனருக்குக் காசு; சிலர் காசு வாங்க மாட்டார்கள். அவர்களுக்கு வேறு மாதிரி கவனிப்பு. ஸ்டேஷனில் இருக்கும் குற்றவாளிகளை அவர்களுக்கு வேண்டியவர் பார்த்துப் பேசுவதற்கு பாராவுக்குக் காசு; இத்தனை நீள சங்கிலியில் எல்லாரையும் விட முக்கியமானவர் யார் தெரியுமா? எஸ்ஸய். அவர் நினைத்தால் எஸ்பியே சொன்னாலும் ‘போய்யா’ என்று சொல்லிவிட்டு எஃப்பையாரை எப்படி வேண்டுமானாலும் போடலாம். நீதிமன்றத்தில் அரசு வக்கீல் குற்றவாளியிடம் காசு வாங்கிக்கொண்டு சரியாக வாதாட—வில்லையானால் ‘இந்த வக்கீல் எங்களுக் வேண்டாம்; வேறு வக்கீல் வேண்டும்’ என்று நீதிபதியிடம் ஒரு சப் இன்ஸ்பெக்டர் கேட்கலாம். இல்லாவிட்டால் நீதிபதியே வக்கீலைப் பார்த்து ‘நீங்கள் என்ன அரசு வக்கீலா அல்லது அக்யூஸ்டு வக்கீலா?’ என்று கேட்டு அவரை மாற்றிவிட முடியும். அப்படிக் கேட்காமல் இருப்பதற்கு நீதிபதிக்கும் காசு கொடுக்க வேண்டும்.

‘‘சரி, யாரையெல்லாம் கொலை பண்ணுவார்கள்? எதற்குக் கொலை பண்ணுவார்கள்?’’

‘‘ஒரு கேசப் பாருங்ணா... ஒரு ஆளு அவனோட பொண்டாட்டியையும் அவளோட கள்ளக்காதலனையும் போட்டுத் தள்ளச் சொன்னான். என்ன ப்ராப்ளம்னா இவனோட ஃப்ரெண்ட ரொம்ப நம்பி வீட்ல எடம் கொடுத்துட்டான். பெட்ரூம் வரைக்கும் வருவானாம்; போவானாம். ஊர்ல அரசபுரசலா இவன் பொண்டாட்டியப் பத்தி பேச்சு வந்தப்ப அதையெல்லாம் நம்பாதே... நீதான் எனக்கு தெய்வம்னு சொல்லி கையெடுத்துக் கும்புடுறா... பத்தினின்னா அப்படி ஒரு பத்தினின்னு வேஷம் போடுறா... ஃப்ரெண்டு என்னா சொல்றான்... ‘டேய் நான் கடவுளை நம்புறவண்டா... நான் ஒனக்கு துரோகம் பண்ணுனா எனக்கு ரெண்டு வயசுல பொண் கொழந்தை இருக்கு... சாமி என் குடும்பத்தையே

அழிச்சுடும்டா. நான் ஒனக்கு துரோகம் பண்ணிட்டு நிம்மதியா இருந்துட முடியுமா..!' அப்படி இப்படின்னு டயலாக் அடிச்சிருக்கான்... இந்தக் கேணையனும் நம்பிட்டான். ஒருநாள் அவன் வெளியூர் போயிருந்தவன் திடுதிப்புனு திரும்பிட்டான். பார்த்தா ரெண்டு பேரும் பெட்டுல கூத்து. ஆனா அதனால கொல செய்ய சொல்லலேன்னான்.''

''பின்னே?''

''அவ அவளோட கள்ளப் புருஷன்ட்ட சொல்றாளாம். 'அந்தப் பய என்னைத் தொட்டாலே எனக்குக் கம்பளிப் பூச்சி ஊர்ற மாதிரி இருக்கு. அந்த நாதாரிப்பயல கொன்னுடலான்னா நீ கேக்க மாட்டேங்குறே... எப்படியும் வாராவாரம் தண்ணியடிச்சுட்டு வருவான். அப்ப தலவாணிய எடுத்து ஒரே அமுக்கு. ஓவரா தண்ணில செத்துட்டான்னு சொல்லிடுவோம். முடிஞ்சுது கத... நீதான் கேக்க மாட்டேங்கிறே... அந்த ஒம்போதுப் பயலோட இன்னம் எத்தனை நாளைக்குத்தான் நான் படுக்குறது...'ன்னு இன்னும் என்னென்னமோ சொல்லிருக்கா... பாத்தேன்னா கையெடுத்துக் கும்புட்லாம்... நம்ம குணா படத்துல கமல் கும்புடுவான அபிராமி அபிராமின்னு... அப்படி இருப்பா... இப்புடி ஒரு பொம்பளையைப் போயி ஏன் கொல்ல சொல்றேன்னு கேட்டப்ப அவன் சொன்ன கத இது. இன்னோரு தமாஷ் கேளு.. இவனோட சாமாம் போடும்போது 'ஒன்ன மாதிரி எவனாலயும் பண்ண முடியாதுடா, நீ மிருகண்டா'ன்னு அப்படியே வெறில மயங்கிப் போயி கத்துவாளாம்... 'நீ பக்கத்துல வந்தாலே எனக்கு ஈரமாயிடுது'ம்பாளாம்... 'கிட்டக்க வராத... ஒன்னோட வாசனையே என்னை பெட்டுக்குக் கூப்புடுதும்பாளாம்...' இன்னும் என்னென்னமோ... அப்புறம் பாத்தா கள்ளக் காதலன்ட்ட 'அந்த ஒம்போது கூட எவ்ளோ நாளு படுக்குறது... போட்டுத் தள்ளிடலாம்'ங்கிறா... ரெண்டு பேரையும் செஞ்சுடச் சொல்லிட்டான் அந்த ஆளு... ஏதோ கவுன்சிலரு... ஆளுக்கு முப்பதாயிரம் குடுத்தான்...''

''என்னது, முப்பதாயிரமா? ரெண்டு உயிரக் கொல்றதுக்கு வெறும் முப்பதாயிரம்தானா?''

''ஆமாங்ணா... நாங்க எட்டு பேரு.. நீயே கணக்குப் போடேன். ஆளுக்கு முப்பதாயிரம்னா மூணெட்டு இருவத்து நாலு... ரெண்டு லெட்சத்து

நாப்பதாயிரம்... அதுக்கு மேல எவ்ளோ செலவிருக்குது... முன்னால் சொன்னேன்ல... கான்ஸ்டபிள்லேர்ந்து ஆரம்பிச்சு ஜட்ஜ் வரைக்கும் தள்ளணும்... அது எப்படியும் பத்து லச்சத்துக்கிட்ட ஆயிடும்...''

நீதியின் நட்பு கிடைத்த பிறகு கொலை கேஸ்களின் மீது ஆர்வம் ஏற்பட்டு அதை ஆராய ஆரம்பித்தான் தர்மா.

கொலைக்கு முக்கியமான காரணங்களாக இருப்பவை செக்ஸும், மண்ணும்தான் என்று தெரிந்தது. இந்தக் கதையும் நீதி சொன்னது—தான். ஒரு ஆள் தன் அப்பாவின் வைப்பாட்டியின் மகனைத் தீர்த்துக் கட்டிவிட்டான். காரணம், சொத்துத் தகராறு. அவன் நீதியிடம் சொல்லியிருக்கிறான். ''அவ ஒரு தேவுடியா. கண்டவனோட போறவ. ஒருநா என்னோட ஃப்ரெண்டு ஒருத்தனே அவகிட்ட போய்ட்டு வந்தான்னா வேற என்ன வேணும்? ஆனா எங்க அப்பன் ராத்திரில் அவகிட்ட போறதுனால அவன்கிட்ட மட்டும்தான் படுக்கிறான்னு நெனைச்சுட்டான். நெனச்சுட்டு போவட்டும். ஆனா எங்களுக்கு சேர வேண்டிய சொத்துல பாதிய அந்தத் தேவடியா மவனுக்கு எளுதி வச்சுட்டு செத்துட்டான். அந்தப் பய எங்கப்பனுக்குப் பொறந்தவனே இல்ல. அவன் ஒரு பாய்க்கு பொறந்தவன். அவன் மொகத்தைப் பார்த்தாலே நல்லா தெரியும். எங்க சொத்து 12 கோடி இருக்கும். இப்போ அவனுக்கு 6 கோடி போய்ட்டதால அதை வச்சுக்கிட்டு எங்கள்ட்ட நக்கல் பண்ணிக்கிட்டு இருக்கான் அந்தத் தேவுடியாளுக்குப் பொறந்தவன். நாங்களே அண்ணன் தம்பி மூணு பேரு, தங்கச்சிங்க ரெண்டு பேரு, சொத்தை எப்படிப் பிரிக்கிறதுன்னு இங்கே தடுமாறிக்—கிட்டிருக்கிறப்ப 6 கோடி அந்தத் தேவுடியாப் பயலுக்குப் போய்டுச்சு... அதான் போட்டுரச் சொன்னேன்.''

ஒருநாள் மந்தவெளி பாரில் அமர்ந்து தர்மாவும் நீதியும் மது அருந்திக் கொண்டிருந்தபோது, நீதியின் சகா ஒருத்தன் வந்து அழைத்தபோது போதையில் இருந்த தர்மாவும் நீதியோடு கிளம்பினான். டாடா சூமோவில் ஏற்கனவே ஏழெட்டு பேர் இருந்தார்கள். அவர்களோடு இந்த இரண்டு பேரும் சேர்ந்து கொண்டார்கள். எல்லோருக்கும் வயது 18இலிருந்து 22 வரை இருக்கும். அதில் தலைவனைப் போல் இருந்தவனுக்கு மட்டும் 28 இருக்கலாம். நாய் பாஸ்கர். தர்மாவைப் பார்த்ததுமே யார் இது என்று கேட்டான். ''நீதியோட தோஸ்துபா'' என்றான் ஒருவன். தர்மாவை ஏற இறங்கப்

பார்த்துவிட்டு மற்றவர்களிடம் ‘‘படப்பைல ஒர்த்தன செய்யணுண்டா’’ என்றான். மணி அப்போது இரவு எட்டு. ‘‘ஆள் நெலத் தரகன். பதினோரு மணிக்கு தெனம் அவன் அந்த ஒத்தப் பாலத்தத் தாண்டுவான். செஞ்சுர்லாம்’’ என்றான் நாய் பாஸ்கர்.

‘‘இன்னிக்கு அவன் வர்லேன்னா நாளிக்குக் காலைல ஏல்ர மணிக்கு இதே எட்த்துக்கு வந்துடுங்கடா...’’

‘‘டெய்லி பதினோரு மணிக்கு வர்றவன் இன்னிக்கு வர மாட்டானா?’’ என்று சந்தேகத்துடன் கேட்டான் தர்மா.

‘‘அதான் இதுல மேட்டர். கரக்டா இன்னிக்குப் பாத்து வர மாட்டான். அதுக்குத்தான் கை மேல அடுத்த ப்ளான்.’’

நாய் பாஸ்கர் சொன்னபடியே அந்த ஆள் அன்றைய தினம் வரவில்லை. அதனால் காலையில் போகலாம் என்று முடிவு செய்யப்பட்டது. சொன்னபடி காலை ஆறு மணிக்கு வந்து தர்மாவின் அறைக் கதவைத் தட்டினான் நீதி. முதலில் தர்மாவுக்கு எதுவுமே புரியவில்லை . மப்பில் நடப்பது எதுவும் அவனுக்கு சுத்தமாக ஞாபகம் இருக்காது. பிறகு நீதியின் பேச்சிலிருந்து ஒருவாறாக விஷயத்தைப் புரிந்து கொண்டு ‘‘நான் எதற்கு?’’ என்று இழுத்தான். ‘‘நீதான் ரைட்டராச்சே; வந்து பாரு ஒரு மர்டரு. சூப்பரா இருக்கும்’’ என்று சொல்லி கையோடு அழைத்துப் போய்விட்டான் நீதி. ஆளுக்கு ஒரு குவார்ட்டர் ஓல்ட் மாங்க் கொடுத்தார்கள். ‘‘வேண்டாம்’’ என்று மறுத்தான் தர்மா. ‘‘அட குடி மாமு’’ என்று அவனிடம் ஒரு குவார்ட்டரைத் திணித்தான் ஒருவன். இவனுக்கு தண்ணீர் சேர்க்காமல் அப்படியே அடித்துப் பழக்கமில்லை. இருந்தாலும் அன்று மூச்சைப் பிடித்துக் கொண்டு குடித்து வைத்தான். தொண்டையிலிருந்து வயிற்றுக்குள் நெருப்பு இறங்குவதுபோல் இறங்கியது. தொட்டுக்கொள்ள ரவீஸ் தக்காளி ஊறுகாய் கிடைத்தது.

எதிர்பார்த்தபடியே சரியாக ஏழரை மணிக்கு ஒற்றைப் பாலத்தில் பைக்கில் வந்துகொண்டிருந்தான் அந்த ஆள். வயது 40 இருக்கும். தொப்பையும் தொந்தியுமாக வந்த அவனை வழிமறித்து ஆளுக்கு ஆள் குத்தித் தீர்த்தார்கள். எல்லாவற்றையும் டாடா சூமோவிலேயே அமர்ந்து பார்த்துக்

கொண்டிருந்த தர்மாவிடம் வந்து “நீ ஏம்பா இங்க குந்திக்கினு இருக்கே?” என்று கேட்டான் ஒருவன்.

“சும்மாதான்.”

“என்னது சும்மாவா? இங்க என்ன ஃபிலிமா காட்றாங்க. எறங்குபா, எறங்கி ஒரு போடு போடு? இந்தா புடி...”

அவன் கையிலிருந்த கத்தியில் ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. கொஞ்சம் குடலும் தொங்கியது.

வண்டியை விட்டு இறங்கி அவனிடமிருந்து கத்தியை வாங்கிய தர்மா அந்த ஆளின் அருகே சென்றான். இடுப்பிலிருந்து தலை வரை கன்னாபின்னாவென்று குத்தியிருந்தார்கள். தலைகுப்புற விழுந்து கிடந்தான். அவனுடைய குதத்தில் ஒரு குத்து குத்திவிட்டு எழுந்தான் தர்மா. திரும்பி வரும் போது “இந்தா பாஸூ பொணத்தைக் குத்துனதுனால உனக்கு அஞ்சுதான்” என்று சொல்லி தர்மாவின் கையில் ஐந்தாயிரத்தைத் திணித்தான் நாய் பாஸ்கர்.

3

நீயே நீலநிற வண்ணத்துப் பூச்சியாகவும்,
சிகப்பு நிறக் கண்களையுடைய பச்சைக் கிளியாகவும்,
இடியும் மின்னலுமாகவும் இருக்கிறாய்.
நீயே பருவங்களாகவும்,
சமுத்திரங்களாகவும் இருக்கிறாய்.
நீயே ஆரம்பம் இல்லாததாகவும்
எங்கும் நிறைந்திருப்பதாகவும் இருக்கிறாய்.
உன்னிடமிருந்தே
எல்லா உலகங்களும்
தோன்றுகின்றன.

ஸ்வேதாஸ்வதர உபநிஷத்:
அத்யாயம் 4, ஸ்லோகம் 4

அது ஒரு மாலை நேரம். ரிஷி யாக்ஞவல்கியன் அவனது இரண்டாவது பத்தினி மைத்ரேயியைப் பார்த்து ‘‘நான் இந்த உடலை விட்டுப் பிரியும் தருணம் வந்துவிட்டது’’ என்கிறான்.

மைத்ரேயி ஒரு சராசரிப் பெண் அல்ல என்றாலும் அவள் கண்களில் கண்ணீர் ததும்புகிறது. அவன் இல்லாமல் அவளால் எப்படி வாழ முடியும்? ‘‘லௌகீக வாழ்வுக்கு வேண்டிய அனைத்தையும் உனக்காக விட்டுவிட்டுப் போகிறேன் மைத்ரேயி.’’

‘‘அதுவா எனக்கு முக்கியம்? நான் நேசித்தது உங்கள் ஆத்மாவை அல்லவா?’’

‘‘அதையேதான் நானும் சொல்கிறேன். கர்ப்பவாசம், பிறப்பு, மூப்பு, இறப்பு முதலிய சம்சார பயத்திலிருந்து நம்மைத் தாண்டுவிக்கும் தாரக யோகத்தை

அறிந்த உன் கண்களா கண்ணீரைச் சிந்துகின்றன? நீ என்ன என் உடலையா நேசித்தாய்? என் ஆத்மாவுக்கு அழிவில்லை. என்றும் அழியாதது அது. மலர்களிலும் மலைகளிலும் காற்றிலும் கடலிலும் ஆகாசத்திலும் நட்சத்திரங்களிலும் நிலத்திலும் நிலவிலும் எங்குமாக வியாபித்திருக்—கிறது அது. அதை தியானி.''

ஸஹோவாச சாண்டில்ய: ஸத்யம் விஜ்ஞான—மனந்தம் ப்ரஹ்ம / யஸ்மின்னித—மோதம் ப்ரோதஞ்ச யஸ்மின்னிதம் ஸஞ்ச விசைதி ஸர்வம் யஸ்மின் விஜ்ஞாதே ஸர்வமிதம் விஜ்ஞாதம் பவதி / ததபாணி பாத—மசக்ஷு: ச்ரோத்ர—மஜிஹ்வ—மசரீர—மக்ராஹ்ய—மநிர்தேச்யம் // யதோ வாசோ நிவர்த்தந்தே / அப்ராப்ய மனஸா ஸஹ / யத்கேவலம் ஜ்ஞானகம்யம் / ஆகாசவத் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம் நிரஞ்ஜனம் நிஷ்க்ரியம் ஸன்மாத்ரம் சிதானந்தைகரஸம் சிவம் ப்ரசாந்த—மம்ருதம் தத்பரஞ்ச ப்ரஹ்ம / தத்த்வமஸி / தஜ்—ஜ்ஞானேன விஜானீஹி /

அதர்வணர் சாண்டில்யரிடம் கூறலானார்: ஸத்யம், விஜ்ஞானம், அனந்தம் எனப்படுவது பிரம்மம். இவ்வுலகம் அனைத்தும் அதில் குறுக்கும் நெடுக்குமாகக் கோர்க்கப்பட்டுள்ளது. இவ்வுலகமே அதில் நிலையுடையதாகி அதிலேயே முடிவில் மறைகிறது. அதை அறிந்துகொண்டால் எல்லாம் அறியப்பட்டதாகிறது. அதற்குக் கை இல்லை; கால் இல்லை; கண்ணில்லை; காதில்லை; நாவில்லை; உடலேதும் இல்லை; அது பிடிக்க முடியாதது; சுட்டிக் காட்ட முடியாதது; மனதாலும் வாக்கினாலும் எட்ட முடியாதது; ஞானத்தால் மட்டுமே அடையக் கூடியது. ஆகாயத்தைப் போல் எங்கும் பரவியது. ஸூக்ஷ்மமானது. கறைபடாதது. செயலற்றது. அறிவு மயமானது. சத்து சித்து ஆனந்தம் மூன்றும் கூடிய ஏகரஸம். மங்களம், சாந்தம் அம்ருதம்; அப்படிப்—பட்டது பரப்ரும்மம். அதுதான் நீ. அந்த ஞானத்தால் அதை உணர்ந்து கொள்வாயாக.

சாண்டில்யோபநிஷத்:

அத்தியாயம் 1, சூத்திரம் 2

அவன் ப்ரீ யூனிவர்ஸிட்டி கோர்ஸில் எல்லாப் பாடங்—களிலும் ஃபெயில் ஆனதும் அந்த ஊரில் எல்லா ஃபெயிலான இளைஞர்களையும் போல் கள்ளக் கடத்தல் தொழிலில் ஈடுபடலாம் என்று முடிவு செய்தான். ம்ஹூம். தவறு. முடிவெடுக்கும் வசதியெல்லாம் அவனிடம் இல்லை. அப்படியே நீர்வழிப்படும்புணையாய் அந்த ஊர் இளைஞர்கள் எதைச் செய்வார்களோ அந்த வழியில் அவனும் சென்றான். அதுவும் தவிர, அவனுக்கும் உள்ளூர அந்தத் தொழில் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயம் உருவாகி இருந்தது. காரணம், அந்த ஊரில் யாரெல்லாம் பணக்காரர்களாக இருந்தார்களோ அவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டவர்களாக இருந்தார்கள். இப்போது இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு சமயத்தில். பணத்தை நேர்வழியில் சம்பாதிக்கவே முடியாது என்று அவன் தன் அம்மாவையும், நைனாவையும் மற்றும் தன்னுடைய சேரி மனிதர்களையும் வைத்து எளிதில் புரிந்துகொண்டிருந்தான்.

கள்ளக் கடத்தலில் இருந்த ஒரே பிரச்சினை, அது சட்ட விரோதமாக இருந்ததுதான். எந்த நேரத்திலும் போலீஸிடம் அடி வாங்க வேண்டியிருக்கும். சிங்கப்பூருக்கு குருவியாகச்* சென்றால் மின்சார சாதனம், எலெக்ட்ரானிக் சாதனம், நட்சத்திர ஆமை போன்ற ஜுஜுபி பொருள்களைத்தான் கடத்த முடியும். ஆனால் கந்தவேலோடு சேர்ந்தால் கஞ்சா, அபீன், தங்கம் போன்ற பொருட்களைக் கடத்தி பெரும் பொருள் ஈட்டலாம். தர்மா கந்தவேல் கோஷ்டியில் சேர்ந்தான். முதல் இரண்டு பயணத்தில் கஞ்சா கடத்தியதில் நல்ல காசு கிடைத்தது. மூன்றாவது பயணத்தில்தான் வேலை உயர்வு கிடைத்து அபீன் கடத்தும் வாய்ப்பு கொடுத்தார்கள். இடையில் பாண்டிச்சேரி எல்லையைத் தாண்டும் போது போலீஸின் வழக்கமான சோதனையில் மாட்டிக் கொண்டுவிட்டான். பஸ்ஸின் உள்ளே நுழைந்து சாமான்கள் இருக்கும் இடத்தில் லத்தியால் ரெண்டு தட்டு தட்டிவிட்டுப் போய்—விடுவார்கள். அதுதான் பொதுவான வழக்கம். அவனுக்கு அப்போது பால் வடியும் முகம். அதனால், போலீஸ் சந்தேகப்பட வாய்ப்பில்லை. அதோடு அபீனை ஜட்டிக்குள்ளும் முதுகிலும்தான் வைத்து மறைத்திருந்தான். ஆனால் தர்மாவின் திருட்டு முழியையும், அனாவசியமான வேர்வை, உடல் நடுக்கம் போன்ற அறிகுறிகளையும் பார்த்து. இறங்கச் சொல்லிவிட்டார்கள். போலீஸைக்

கண்டதுமே அவன் உடல் வெடவெட என்று நடுங்க ஆரம்பித்துவிட்டது. எவ்வளவு முயற்சி செய்தும் நடுக்கத்தைக் குறைக்க முடியவில்லை. அவனுடைய உத்தரவையும் மீறி உடல் தன்னிச்சையாகவே நடுங்கியது. அவர்கள் கேட்பதற்கு முன்னாலேயே கந்தசாமியின் பெயரைச் சொல்லி—விட்டான். அதனால் அடி விழவில்லை. ஆனால் கந்தசாமி கோஷ்டி அவனை லாடம் கட்டிவிட்டது. நடந்தது நடந்தபடியே ஒன்றுவிடாமல் போலீஸ்காரர்கள் கந்தசாமியிடம் சொல்லியிருக்கிறார்கள். கந்தசாமியின் பெயரைச் சொன்னதில் தப்பில்லை. ஆனால் அவர்கள் கேட்பதற்கு முன்பே சொன்னதும், போலீஸின் அடியிலிருந்து தப்புவதற்காக கந்தசாமியை அவன் இவன் என்று பேசியதும்தான் கந்தசாமியைக் கோபப்படுத்தியிருந்தது. ஆனால் இப்போது யோசித்துப் பார்க்கும்போதுதான் தெரிகிறது, அந்த முட்டாள்களுக்கு ஒருவனை டார்ச்சர் செய்யவே தெரியவில்லை என்று. நிர்வாணமாகக் குப்புறப் படுக்க வைத்து அவனைப் பிரம்பால் அடித்தார்கள் மடையர்கள்.

அந்தச் சம்பவத்திலிருந்து கடத்தல் தொழிலுக்கும் தனக்கும் ஒத்துவராது என்று விலகிக்கொண்டான் தர்மா.

(குருவி: கடத்தல் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் சிறுவர்கள், இளைஞர்கள்)

4

கடவுள் என்னிடம் வந்து என்ன வரம் வேண்டும் என்று கேட்டால் ஒவ்வொரு நிமிடமும் உன்னைக் காதலித்துக் கொண்டே இருக்கும் வாழ்வைக் கேட்பேன். உன் அருகிலேயே நான் இருக்க வேண்டும். உனக்குக் காமத்தின் கதவுகளைத் திறந்து காண்பிக்க வேண்டும். நான் என்னவோ காமதேவதை மாதிரி பேசுகிறேன் அல்லவா? எனக்கு செக்ஸ் பற்றிய கூச்சங்கள் இருந்தாலும் என்னிடம் நீ ஆராதிக்கும் அழகு இருக்கிறது. அதைக் கொண்டு உன்னைப் போல் காமத்தைக் கொண்டாடும் மனம் கேட்பேன். காமத்தின் தடைகளைத் திறந்துவிடக் கேட்பேன்.

உன்னை நினைத்தாலே நிதம்ப நீர் கொட்டுகிறது தர்மா, என்ன செய்ய? மை காட், இதை எழுதும்போதே எனக்குள் போதை ஏறுகிறது.

Don't go away before fucking me once hard. You will never reach heaven for all the curse I would give you. அப்படிச் செய்தால் ஒரு பெண்ணை ஏமாற்றிய சாபம் உனக்கு வந்துவிடும்; ஜாக்கிரதை.

சீக்கிரம் உன்னைப் பார்க்கணும், ஓக்கணும்... உன்னை மாதிரியே பேச ஆரம்பித்துவிட்டேன் பார். அதற்குத்தான் பெரியவர்கள், அறிவாளி—களிடம் பேச வேண்டும், பழக வேண்டும் என்று சொன்னார்கள். Missing you bastard...

அந்த ஊரில் பியர்ஸிங் செய்துகொள்வது சகஜம். காதிலேயே பத்து இடத்தில் குத்திக்கொள்வார்கள். புருவம், தொப்புள், நாக்கு, ஆண்குறி, பெண்களாக இருந்தால் லபியா, க்ளிட்டோரிஸ் போன்ற இடங்களிலும் வளையம் மாட்டிக்கொள்வார்கள்.

ஆனால் ஆண்குறியில் எப்படி வளையம் மாட்டுவது ஆச்சரியமடைந்தான் தர்மா. பிறகு தெரிந்துகொண்டு, தானும் அப்படி மாட்டிக்கொள்ள விரும்பினான். விதையும் தண்டும் சேரும் இடத்திலிருந்து தொடங்கி சிறுநீரும் விந்துவும் வெளியேறும் முனைப்பகுதி வரை குறியின் அடிப்பக்கத்தில் காதுகளில்

வரிசையாக மாட்டுவது போல் வளையம் மாட்டிய புகைப்படங்களைப் பார்த்தான். அட்டகாசமாக இருந்தது. இன்னொரு வளையம்தான் கொஞ்சம் அச்சம் தந்தது. குறியின் முனைப்பகுதியில் அடிப் பக்கத்திலிருந்து வளையத்தைச் செலுத்தி அதை சிறுநீர் மற்றும் விந்து செல்லும் துளை வழியாக வெளியே எடுத்துக் கோர்த்துக் கட்டுகிறார்கள். எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இங்குள்ள தணிக்கை விதிகள் அனுமதிக்குமானால் அப்புகைப்படங்களில் ஒன்றையேனும் இந்த இடத்தில் வைத்து உங்களைக் கண் குளிர வைப்பேன். பார்ப்போம். கிருஷ்ணாதான் இந்த நாவலின் பதிப்பாளன். இது போதும். பின்னால் அவனும் ஒரு கதாபாத்திரமாக சேர்கிறானா இல்லையா என்பதை இந்த நாவலின் போக்கே முடிவு செய்யும்.

ஒருநாள் தர்மாவின் சகா ஒருவன் தர்மாவுக்கு நாக்கில் வளையம் மாட்டிவிடுகிறேன் என்றான். அதில் அவன் ஒரு வல்லுநனாம். பலருக்கும் மாட்டிவிட்டிருக்கிறானாம். நாக்கின் மத்தியில் ஒன்றரை குந்துமணி சைஸில் ஒரு துருப்பிடிக்காத இரும்பு மணி, அதே சைஸில் நாக்குக்குக் கீழேயும் ஒரு மணி. இரண்டையும் இணைக்கும் கம்பி நாக்குக்குள் இருக்கும். பேசுவதிலோ பல் துலக்குவதிலோ முத்தமிடுவதிலோ நாக்கு போடுவதிலோ எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று தர்மாவே கேள்விப்பட்டிருக்கிறான். சொல்லப் போனால், நாக்கில் வளையம் மாட்டிக்கொண்டு நாக்குப் போட்டால் பெண்கள் நமக்கு அடிமையாகிவிடுவார்கள் என்கிறார்கள் அனுபவ—சாலிகள். இருந்தாலும் அதற்கென்று இருக்கும் தொழில்முறை நபர்களிடம் போட்டுக்கொள்ளலாமே என்று நினைத்தான் தர்மா. ஆனால் நண்பனோ ‘தர்மா பயப்படுகிறான்’ என்றான். அதனால் கொஞ்சம் ரோஷமாகி ‘சரி, செய்’ என்று சொல்லும்படி ஆயிற்று. அந்த நண்பன் தர்மாவைப் போலவே ஒரு எழுத்தாளன் வேறு. எழுத்தாளர் கோஷ்டியில் மானம் போகக் கூடாது. ஏற்கனவே அந்த எழுத்தாளனிடம் தர்மாவின் மானம் போயிருக்கிறது. தர்மா ஹோமோசெக்ஸின் ஆதரவாளன் என்றபடியால் ஒருநாள் சபையில் வைத்து “வா, ரெண்டு பேரும் ரூம் போட்டு செய்வோம்” என்று சொல்லிவிட்டான் அந்த எழுத்தாளன். தர்மாவுக்கோ லஜ்ஜையும் அருவருப்புமாகிவிட்டது. “தார்மீக ரீதியான ஆதரவை இப்படி பௌதீக அளவுக்கு இறக்காதே” என்று சொல்லியும் அது

அங்கிருந்த யாருக்கும் புரியவில்லை. தர்மாவின் ஹோமோசெக்ஸ் ஆதரவு வெறும் மோஸ்தர் என்று அன்றைய மதுபான இரவில் நிரூபணம் ஆகியது. அதுபோன்ற ஒரு அவமானம் மறுபடியும் நிகழ்ந்து விடக்கூடாது என்றுதான் அந்த நாக்கு வளையத்துக்கு ஒத்துக் கொண்டான் தர்மா. ஆனால் இந்த முறை நண்பர்கள் ‘‘வேண்டாம்; ரிஸ்க் எடுக்காதே’’ என்று அவனுக்கு சார்பாகவே பேசினார்கள். ஆனாலும் தர்மாவுக்கு ஏற்கனவே அதில் ஆசை இருந்ததால் சம்மதித்துவிட்டான்.

செய்யும்போது அவ்வளவு வருத்தமில்லை. ஆனால் இரண்டாம் நாள் கொஞ்சம் வீங்கி வலிக்க ஆரம்பித்தது. மூன்றாம் நாள் ரத்தமே வந்து, வலி தாங்க முடியாததாகிவிட்டது. கிட்டத்தட்ட தற்கொலையே செய்துகொள்ளலாம் போல் வலித்தது. நண்பர்கள் வேறு ‘‘அப்போதே சொன்னோம்; கேட்டாயா?’’ என்று சொல்லி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினார்கள். அதோடு இன்னொரு கவலையும் சேர்ந்தது. நாக்கின் அடியில் இருந்த இரும்புக் குண்டையும் காணவில்லை. நண்பர்கள் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார்கள். ‘‘சரியாகக் குத்தாததால் நாக்கு தடித்து கீழே இருந்த குண்டு நாக்கின் உள்ளே சென்றுவிட்டது. இன்னும் கொஞ்சம் தாமதித்து இருந்தாலும் மரணம்தான்’’ என்றார் மருத்துவர். ஒருமாத தீவிர சிகிச்சைக்குப் பிறகு நாக்கு சரியாயிற்று. மற்றவர்களாக இருந்தால் அதோடு பியர்ஸிங் பக்கமே தலை வைத்திருக்க மாட்டார்கள். ஆனால் தர்மா முன்னெடுத்த காலை பின்வைப்பதாக இல்லை. மீண்டும் நாக்கில் துளை போட்டு மணிகளைக் குத்திக்கொண்டான். ஆனால் இந்த முறை ஜாக்கிரதையாக அந்த ஊரிலிருந்த தொழில்முறை ஆட்களிடம் சென்று போட்டுக்கொண்டான்.

அதற்குப் பிறகு அங்கிருந்து திரும்புவதற்கு முன்பு ஆண்குறியிலும் வளையம் மாட்டிக்கொண்டான். அடியில் ஐந்து வளையம், முனையில் ஒரு வளையம். கலவி கொள்ளும் போது அதீத இன்பம் கிடைப்பதற்கு அந்த வளையங்கள்தான் காரணம் என்று ஒருத்தி பாக்கியில்லாமல் சொன்னார்கள். ஆனால் அது வெறும் கற்பனை அல்லது நம்பிக்கை சார்ந்த விஷயம் என்று நினைத்தான் தர்மா.

5

“உன்னிடம் நான் ஆணுக்குரிய தன்மை எதையும் பார்த்ததில்லை. அதுதான் உன்னிடம் எனக்கு மிகவும் பிடித்தது. உன்னோடு இருக்கும்போது ஒரு ஆணின் பக்கத்தில் இருக்கிறோம் என்றே நான் உணர்ந்ததில்லை. நீ எப்போதும் இனிமை கொண்டிருக்கிறாய். உன்னிடம் எப்போதும் கருணையும் அன்பும் ததும்புகிறது. என்னை உனக்கு மட்டுமே உரியவள் என்று நீ நினைப்பதாக என்றுமே நான் உணர்ந்ததில்லை. அது தரும் சுதந்திர உணர்வே உன் மீதான அன்பை எனக்குள் அதிகப்படுத்துகிறது.”

முகத்தை மட்டும் மூடிக்கொள்வானே தவிர டார்ச்சர் செய்யும் —போது தன் உடலில் எந்த உடையும் இல்லாமல் நிர்வாணமாகத்தான் செய்வான். இன்னொரு உடலை டார்ச்சர் செய்யும்போது அவனுக்குள் காமக் கிளர்ச்சி ஏற்பட்டு ஆண்மை விரைத்துக் கொள்வதும் உண்டு.

தர்மா எல்லாரையும் டார்ச்சர் செய்ய மாட்டான். எழுத்தாளன் அல்லவா, பாதிக்கப்பட்டவனிடம் ஒரு கதை இருக்க வேண்டும். துரோகத்துக்குத்தான் முதல் இடம். அவனிடம் மாட்டிய முதல் ஆளின் கதை இது:

அவன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரின் மகன். கல்லூரியில் படிக்கும்போது தன் சக மாணவியிடம் சில்மிஷம் செய்திருக்கிறான். அவள் மசியவில்லை. தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் டார்ச்சர் கொடுத்திருக்கிறான். அவளுக்கு லெட்டர் கொடுப்பது, இரண்டு பேருக்கும் காதல் என்று கக்கூஸில் எழுதி வைப்பது, ஆஸிட் ஊற்றுவேன் என்று மிரட்டுவது. இன்னும் பல. ஆஸிட் ஊற்றுவேன் என்றதும் பெண் பயந்து போனாள். பல தினங்கள் கல்லூரிப் பக்கமே போகவில்லை. அவனை நினைத்தாலே அவளுக்குக் கை —காலெல்லாம் நடுங்கியது. எப்படியோ படித்து முடித்தாள். அதற்குப் பிறகும்

டார்ச்சர் நிற்கவில்லை. வீட்டுக்கு வந்தும் மிரட்டினான். ஒருநாள் அவள் நடந்து செல்லும்போது பைக்கில் வந்து மோதுவது போல் நிறுத்தி அவளை நிலைகுலையச் செய்தான். அதற்கு மேல் அவளால் பொறுக்க முடியவில்லை. தந்தையிடம் சொல்லி போலீஸில் புகார் செய்தாள். போலீஸில் புகாரை எடுத்துக்கொள்ளவில்லை. சக இன்ஸ்பெக்டரின் பையன் மீது இன்னொரு இன்ஸ்பெக்டர் எப்படி எஃப்.ஐ.ஆர். போடுவார்? அவள் தந்தை அரசாங்கத்தில் ஒரு சாதாரண குமாஸ்தா. என்ன செய்வார்? எஃப்.ஐ.ஆர். போடாததைக் குறிப்பிட்டு நேரடியாக கமிஷனரிடம் முறையிட்டார். முதல் மந்திரியின் 'மக்கள் குறை தீர்க்கும் மைய'த்துக்கு எழுதினார். எதிலும் பயனில்லை. அப்போதுதான் அவருக்குத் தன் மைத்துனனிடம் முறையிடலாம் என்று தோன்றியது. அவனோடு அவருக்குத் தொடர்பு விட்டுப்போய் பல காலம் ஆகிறது. போக்குவரத்து விதிகளை மீறுவதையே ஏதோ தேசத்துரோகக் குற்றம் மாதிரி கருதுபவர் ஒரு காண்ட்ராக்ட் கில்லரான அவனோடு எப்படித் தொடர்பு வைத்துக்கொள்வார்?

கடைசியில் வேறு வழியில்லாமல் தன் மைத்துனனான நாய் பாஸ்கரிடம் வந்து சொன்னார். பாஸ்கர் ஐஜி லெவலில் காரியம் செய்து கொடுப்பவன். தங்கள் துறையின் மூலமாக முடிக்க முடியாத வேலைகளை நாய் பாஸ்கர் போன்ற ஆட்களை வைத்துத்தான் முடித்துக்கொள்வது போலீஸ்காரர்களின் வழக்கம். அவ்வப்போது அரசியல்வாதிகளின் வேலைகளையும் கச்சிதமாக முடித்துக் கொடுப்பான். ஒரு அரசியல்—வாதிக்கு இன்னொரு அரசியல்வாதியின் அபாரமான வளர்ச்சியும் செல்வாக்கும் பிடிக்கவில்லை. நாய் பாஸ்கரிடம் சொன்னார். கச்சிதமாக முடித்தான்.

ஆள் காலையில் வாக்கிங் செல்லும்போது தீர்த்துவிட்டான். பேப்பரில் பரபரப்பாக செய்தி வந்தது. தினந்தோறும் பரபரப்பு—தானே? அதனால் யாரும் கண்டு கொள்ளவில்லை. பையன்கள் போய் சரணடைந்தார்—கள். கொஞ்ச நாள் கேஸ் நடந்தது. கொடுக்க வேண்டியவர்களுக்கு காசைக் கொடுத்ததில் எல்லாம் சுபம். பத்து எல் பாஸ்கருக்குக் கிடைத்தது. அப்படிப்பட்டவனுக்கு இதெல்லாம் ஜுஜுபி. இருந்தாலும் தன் அக்காள் பெண் என்பதால் பக்குவமாகச் செய்ய வேண்டும் என்று கவலை அடைந்தான். முதலில் பையனுக்கு போன் போட்டுப் பேசினான்.

பலனில்லை. அவன் பெயர் அந்தப் பையனிடம் எடுபடவில்லை. இன்ஸ்பெக்டரை நேரில் சந்தித்துப் பேசினான். விளைவு விபரீதம் ஆயிற்று. அந்தப் பெண் தனியாக இருக்கும்போது அவள் வீட்டுக்குப் போய் அவளைத் தொட்டு, முத்தமிட்டு மிரட்டியிருக்கிறான் அந்தப் பையன்.

‘‘இப்போதே உன்னை என்னால் கெடுத்துவிட முடியும். ஆனால் நான் உன்னைக் காதலிக்கிறேன். அதனால் உன்னுடைய சம்மதத்தின் பேரில்தான் நான் உன்னை அடைய வேண்டும். மறுபடியும் ரவுடிப் பயல்களை விட்டு மிரட்டினால் நான் பொறுக்க மாட்டேன். உன் சம்மதம் இல்லாமலேயே உன்னை அடைவேன்’’ என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான்.

மறுபடியும் இன்ஸ்பெக்டரைப் பார்த்து விஷயத்தைச் சொன்னான் பாஸ்கர். ‘‘டேய், என்னா போனாப் போவுதுன்னு பாத்தா மேல மேல ஏர்ற... என்கவுண்டர்னு சொல்லிப் போட்டுத் தள்ளிடுவேன்’’ என்று சொல்லி பாஸ்கரை விரட்டி அடித்தான் இன்ஸ்பெக்டர். அதற்குப் பிறகு அந்தப் பையனைக் கடத்திக்கொண்டு வந்து எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு மிரட்டி அனுப்பினான் பாஸ்கர். அதற்குப் பிறகுதான் அந்த அசம்பாவிதம் நடந்தது. அந்தப் பையன் அவன் சொன்னபடியே செய்தான். யாரும் இல்லாதபோது வீட்டுக்குச் சென்று அவளைக் கெடுத்து, முகத்தில் அமிலத்தையும் கொட்டிவிட்டான். சட்டத்தால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. சாட்சி சொல்ல வேண்டிய பெண் சுய நினைவிலேயே இல்லை. சுய நினைவு வர இன்னும் எத்தனை காலம் ஆகுமோ அல்லது வராமலே போய்விடுமோ தெரியவில்லை. பேச்சும் பிரக்ஞையும் அவளிடமிருந்து அகன்றுவிட்டது. பெற்ற தாயையும் தந்தையையும் கூட அவளால் அடையாளம் காண முடியவில்லை.

இதுதான் தர்மாவுக்கு முதல் டார்ச்சர். பாஸ்கருக்கு இவனால் முடியும் என்று நம்பிக்கை இல்லை. ‘‘செய்து காட்டுகிறேன்’’ என்றான் தர்மா.

முதல் நாள் தன் முகத்தை மூடிக்கொண்டுதான் செய்தான். செய்யச் செய்ய அதையும் ஒரு கலையாக மாற்றலாம் என்று தோன்றியது. எதைச் செய்தாலும் அதை ஒரு கலையாகப் பரிணமிக்க வைக்க வேண்டும் என்று நினைப்பவன் தர்மா. அதனால் டார்ச்சரையும் ஒரு கலாசிருஷ்டி மிகுந்த நாடகத்தைப் போல் செய்தான். என்ன... இது ஒரு துன்பியல் நாடகம். ஒரு பெண்ணின் அழிவுக்குப்

பழிவாங்கும் நாடகம். நாடகத்துக்காக ஒரு துருப்பிடித்த கோணி ஊசியும் நூலும், ஒரு உதவியாளும் கேட்டான். கொடுக்கப்பட்டது.

முகத்தைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு தன் ஆடை களைக் களைந்தான். பையனின் வாயை மட்டும் கட்டிவிட்டு அவனுடைய ஆடைகளையும் களைந்தான். அவனுக்கு வயது இருபத்தைந்துக்குள் இருக்கும். ‘‘இந்த சாமான்தானே அந்த வேலைய செஞ்சுது?’’ என்று கேட்டபடியே அவனுடைய ஆண்மையின் முனையின் கீழே ஊசியை விட்டு சிறுநீரும் விந்துவும் வெளியேறும் துளை வழியே இழுத்தான்.

பையனின் வாய்க்கட்டை மட்டும் அவிழ்த்திருந்தால் சின்ன வயதில் அவன் கேட்ட புடுக்கறுந்த பன்றிகளின் சத்தத்தையும் மிஞ்சியிருக்கும் அவன் கதறல். இப்போது அவ்வளவு வலியும் அவன் கண்களில் மட்டுமே தெரிந்தது. ‘விட்டு விடுங்கள், விட்டு விடுங்கள், நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறேன்’ என்று கதறியது பையனின் கண்கள். கோவைப்பழமாய் சிவந்த கண்களிலிருந்து நீர் கொட்டியது. வாய் கட்டியிருந்ததால் வலியின் உறுமல் மட்டுமே கேட்டது.

‘‘டேய் பன்னி மாதிரி உறுமுனே இன்னும் கண்டபடியெல்லாம் செய்வேன்’’ என்று சொல்லி டக்கென்று அவன் எதிர்பார்க்காத விதத்தில் ஊசியை அவன் மூக்கின் உள்ளே கீழிருந்து குத்தி மேலே எடுத்தான்.

‘‘தோ பாரு... ஒன்னை டார்ச்சர் பண்றது எனக்குப் புடிக்கல. உன்கிட்ட சொன்னோம்ல, அந்தப் பெண்ணை விட்டுடுன்னு... இப்போ பாரு நீ என்ன கதி ஆகப் போறேன்னு... டேய் பன்னி... உன்னை டார்ச்சர் பண்ணி முடிச்சிட்டு உன் தங்கச்சியைக் கடத்திக்கிட்டு வந்து அவ சாமானையும் இப்படித் தைக்கப் போறேன்டா...’’

சொல்லிக்கொண்டே மிக மெதுவாக கோணி ஊசியால் அவனுடைய ஆண்குறியில் துளையிட்டு வளையம் மாட்டத் தொடங்கினான்.

6

ச ந்தேகமே இல்லாமல் நீ ஒரு அற்புதமான ஆத்மா. நேற்று நீ சொன்ன வார்த்தைகள் என் உணர்வோடும் சரீரத்தோடும் கலந்துவிட்டதாகத் தோன்றுகிறது. நீ சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிந்துதான் சொன்னாயா?

நம் உறவு காலாதீதமாய்த் தொடர்கிறது என்று புரிந்து கொள்கிறேன். நம்மைப் பற்றி நினைக்கும்போது சமயங்களில், ஒரு ஆன்மீக உணர்வு உண்டாகிறது. ஏன் அப்படி—? தெரியவில்லை.

உன் கவிதை படித்தேன். வெறி கொண்ட புரவிகளின் கூட்டத்தைப் பார்ப்பதுபோல் இருந்தது. அந்தக் கணமே உன்னைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. என்ன செய்ய? நேற்று நாள் முழுதும் வகுப்பு இருந்தது. பேசக்கூட முடியவில்லை. என்னிடம் எப்போதாவது மாட்டத்தானே போகிறாய், அப்போது கவனித்துக் கொள்கிறேன்.

ஒ ரு டேப் ரிக்கார்டரை வரவழைத்து ரிச்சர்ட் ஸ்ட்ராஸின் Fire Famine என்ற ஆப்பராவைப் போட்டான் அவன். பையனின் ஆண்குறி சிதைந்து—போய் சதைக் கூழாகத் தெரிந்தது. மருந்து போட்டிருந்தது. ஆள் எந்தக் காரணம் கொண்டும் சாகக் கூடாது என்று சொல்லியிருந்தான் பாஸ்கர். பைத்தியம் பிடிக்கும் வரை டார்ச்சர் செய்து வெளியே அனுப்ப வேண்டும். சாட்சி இல்லாவிட்டாலும் பத்திரிகைகள் ‘அந்தப் பெண்ணின் மீது அமிலம் ஊற்றியது இன்ஸ்பெக்டரின் மகன்தான்' என்று எழுத ஆரம்பித்து விட்டன. பையன் காணாமல் போனதும் அதை உறுதிப்படுத்துவது போல் ஆனது. பையனை சுய நினைவோ பிரக்ஞையோ இல்லாதவனாக்கி விரைவில் வெளியே அனுப்பிவிட வேண்டும். பாஸ்கர் தனக்கு எதுவுமே தெரியாது என்று சாதித்து—விட்டான்.

பொதுவாக ரவுடிகள் கொலைதானே செய்வார்கள்? இந்த நிலையில் பையனின் பிரேதமும் கிடைக்கவில்லை.

‘‘கத்தாம இருக்கணும். சரியா?’’

‘சரி’ என்பது போல் தலையை ஆட்டினான் பையன்.

‘‘அப்போன்னா நான் அதை செக் பண்ணனும். டேய் பன்னி, எனக்கு உண்மைதான் புடிக்கும். பொய் புடிக்காது. உனக்கு என்ன புடிக்கும், உண்மையா பொய்யா?’’

என்னவோ தலையை ஆட்டினான்.

‘‘டேய் பன்னிக்குப் பொறந்தவனே, நீ தலய ஆட்றது புரிலடா... தோ பார். உண்மைன்னா ஒன்னு... பொய்யின்னா ரெண்டு. உனக்கு எது புடிக்கும்? ரெண்டு?’’

ஆமாம் என்பது போல் தலையை ஆட்டினான்.

‘‘டேய் பன்னி, எனக்கே தண்ணி காட்றியா? நானே உண்மைதான் புடிக்கும்ங்கிறேன். உனக்கு பொய் புடிக்கும்கிறியே, உனக்கு என்னா தெனாவட்டு இருக்கணும்? டேய்... நீ போலீஸ்காரன் பையனா இருக்கலாண்டா... ஆனா இந்த எடத்துல நான்தான் போலீஸ்... நீ திருடன். இது திருடன் போலீஸ் வெளையாட்டுடா... இப்போ சொல்லு... பொய்யின்னா ஒன்னு... உண்மைன்னா ரெண்டு... உனக்கு எது புடிக்கும்?’’

மற்ற விரல்களை மடக்கிக்கொண்டு தன் ஆள்காட்டி விரலை மட்டும் அவன் முகத்துக்கு எதிரே காட்டினான் தர்மா. இல்லை என்பதுபோல் தலையை ஆட்டினான் பையன். பிறகு இரண்டு விரலைக் காண்பித்தான். ஆமாம் என்பது போல் தலையை ஆட்டினான் பையன்.

‘‘குட் பாய்... இவ்ளோ கஷ்டத்துலயும் உன் மூளை நல்லா வேலை செய்யுது. ஆனா அதுதான் ப்ராப்ளமே... உன் மூளை எப்போ வேலை செய்றதை நிறுத்துதோ அப்பவே உனக்கு விடுதலை... இப்போ உனக்கு இன்னொரு டெஸ்ட். இந்த ஒன்னு ரெண்டு கணக்க எதுக்காக ஆரம்பிச்சோம் சொல்லு?’’

பையன் திகிலடைந்து விழித்தான்.

“வாய அவுத்து வுட்டா சொல்றியா?”

சரி என்பது போல் தலை ஆட்டினான் பையன்.

“டேய், உன்னை நம்பித்தான் வாயை அவுக்குறேன். நீ பாட்டுக்குக் கத்தி கித்தி வச்சு எங்கள மாட்டி வுட்டேன்னு வச்சுக்க, மவனே, உங்க குடும்பத்தையே காலி பண்ணிடுவோம்... சரியா?”

சொல்லிவிட்டு பையனின் வாய்க்கட்டை அவிழ்த்தான் தர்மா. தர்மாவுக்கு ஏமாற்றம்தான். அவன் எதிர்பார்த்தபடி பையன் கத்தவில்லை.

“டேய், நீ என்ன ஏமாத்திட்டடா... கத்துனா தப்பிச்சுடலாம்னு நெனச்சு கத்துவே, உன்ன இன்னம் மோசமா டார்ச்சர் பண்ணலாம்னு எதிர்பார்த்தன்டா... ம்ஹூம் நீ ஏமாத்திட்ட... சரி வுடு...”

“நீ நான். நான் நீ. என்ன பண்ணுவ என்னெ?”

பேசாமல் நின்றுகொண்டிருந்தான் பையன்.

“டேய்... இங்க நான்தான் போலீஸ்... நீ திருடன். இதையே உனக்கு எத்தன தடவடா சொல்றது? போலீஸ் கேள்வி கேட்டா திருடன் பதில் சொல்லாம இருக்கலாமாடா?”

“கூடாது” என்பதுபோல் தலையைப் பக்கவாட்டில் ஆட்டினான் பையன்.

“டேய் பன்னிக்குப் பொறந்தவனே, இங்க நீ என்ன டார்ச்சர் பண்றியா, இல்ல நான் உன்ன டார்ச்சர் பண்றனா? ம்?”

“நீங்கதான் என்ன டார்ச்சர் பண்றீங்க...”

“ம்... இப்ப வாயத் தொறக்கிறீல்ல... அப்ப ஏன்டா கேள்வி கேட்டப்ப வாயத் தொறக்காம தலய மட்டும் ஆட்டுனே?”

பேசாமல் முழித்துக்கொண்டிருந்தான் பையன். கண்களிலிருந்து தாரை—தாரையாக வழிந்துகொண்டிருந்தது கண்ணீர். மூக்கிலிருந்தும் ஒழுகிக்கொண்டிருந்தது.

“வாயைத் தொறந்து பதில் சொல்லுடா, பன்னிக்குப் பொறந்தவனே” என்றபடி செவுள் பிளக்க ஒரு அறை விட்டான் தர்மா.

“தெரியாம பண்ணிட்டேன் சார்.”

‘‘சரி, தெரியாம பண்ணிட்டே.... ஒத்துக்கிறேன். அந்தப் பொண்ணு மூஞ்சீல ஏன்டா ஆஸிட்ட வூத்துனே? அதுவும் தெரியாம பண்ணுனியா?’’

‘‘தெரியாம பண்ணிட்டேன் சார்... வுட்ருங்க சார்... உங்க கால்ல வுள்றேன் சார்..’’

‘‘சரி, ரொம்ப கரெக்ட். நாங்களும் உன் கால்லதான் வுழுந்தோம்... வுட்டுர்றா வுட்டுர்றான்னு உன் கால்ல வுழுந்துதானே கெஞ்சுனோம்? வுட்டியா நீ? உன் அப்பன் இருக்கான் பாரு... பன்னிக்குப் பொறந்தவன்... அவன் கால்லயும் வுழுந்தோம். ஆனா அவன் என்ன சொன்னான்? என்கவுண்டர்ல போட்டுத் தள்ளிடுவேன்னு சொன்னான்... போட்டுத் தள்ளுவியாடா... போட்டுத் தள்ளுடா... தோ பார்டா... என் மூஞ்சியவே காமிக்கிறேன். உன் அப்பன்ட்ட சொல்லி என்னெ என்கவுண்டர்ல போட்டுத் தள்ளுடா தேவுடியாளுக்குப் பொறந்தவனே...’’

கிட்டத்தட்ட புடுக்கறுந்த பன்றி மாதிரியே கத்தினான் தர்மா. கத்திவிட்டு தன் முகக்கட்டை அவிழ்த்து பையனுக்குத் தன் முகத்தைக் காண்பித்தான்.

‘‘என்னைத் தெரியுதாடா?’’

‘‘தெரிலைங்க... என்ன வுட்ருங்க...’’

‘‘டேய் குச்சுக்காரிக்குப் பொறந்தவனே.. கேட்ட கேள்விக்கு மட்டும்—தான்டா பதில் சொல்லணும்... ஆனா நீ அதுக்கும் மேல பேசுனது—னால இப்போ உனக்கு பச்ச மிளகா ட்ரீட் மெண்ட்.’’

பச்சை மிளகாயைத் தருவித்து ஒவ்வொன்றாகக் கடித்துத் தின்னச் சொன்னான். தின்னும்போது எண்ணிக் கொண்டே தின்ன வேண்டும். மொத்தம் 30 மிளகாய் தின்ன வேண்டும் தின்னத் தடுமாறிய—போதெல்லாம் சிகரெட்டால் ஒரு சூடு. விதைக்கொட்டை, மார்பு, கன்னம், உதடு, காது என்று எல்லா இடங்களிலும் சூடு வாங்கினான் பையன். இடையில் சிகரெட்டை அவனுடைய கண்ணுக்கு அருகே அருகே கொண்டு சென்று கண்களையும் சுடுவது போல் காண்பித்தான் தர்மா. ஆனால் சுடவில்லை.

மிளகாயைத் தின்று முடித்ததும் ‘‘சரி, உனக்கு தாகமா இருக்கும்; இந்தத் தண்ணியக் குடி’’ என்று சொல்லி மூத்திரத்தைப் பெய்து குடிக்கச்

சொன்னான்.

‘‘ஏன்டா பொறம்போக்கு... எத்தன தடவ கெஞ்சுனோம்... உன் கால்லயும் உன் அப்பன் கால்லயும் வுழுந்தோம்ல... அந்தப் பொண்ண வுட்ருங்க வுட்ருங்கன்னு கெஞ்சுனோம்ல... வுட்டியாடா? டேய், உன் அப்பன் எப்படியாபட்ட அப்பன்டா... அவன் ஒன்னைக் கண்டிக்கவே—மாட்டானா? ம்? அவனே ஒன்னத் தூண்டி வுட்ருப்பான் போல்ருக்கே? ஏன்டா இப்டி வந்து மாட்டிக்கிட்டே, தாயோளி...’’

‘‘உனக்கு உன் அம்மாவப் புடிக்குமாடா?’’

‘‘ம்...’’ என்று தலையாட்டினான் பையன்.

‘‘உன்கிட்ட நான் என்ன சொன்னேன் ? இது திருடன் போலீஸ் வௌயாட்டுன்னு சொன்னேன்ல?’’

‘‘ஆமா சார்.’’

‘‘அப்போ போலீஸ் கேட்டா திருடன் பதில் சொல்லணும்ல?’’

‘‘சொன்னேன் சார்...’’

‘‘பொய் பொய் பொய்’’ என்று அந்தக் கட்டிடமே இடிந்து விழுகிறாற்போல் கத்தினான் தர்மா. ‘‘பொய் சொல்லாதடா நாயே... இந்தத் திருடன் போலீஸ் வெளையாட்டுல சில ரூல்ஸ் இருக்கு... இந்த ரூல்ஸ நீயும் என்னை மாதிரி ஃபாலோ பண்ணனும்... நான் ஃபாலோ பண்ணலேன்னா நீ எனக்கு வளையம் மாட்டலாம்... நீ அடிக்கடி ரூல்ஸ் ப்ரேக் பண்றே... உனக்கு உன் அம்மாவப் புடிக்குமான்னு கேட்டா நீ என்னடா சொன்னே?’’

பையன் விழித்துக்கொண்டு விட்டான். ‘‘ம்னு தலையாட்டுனேன்.’’

‘‘இன்னுமே தலய ஆட்டாத... சரியா?" என்று சொல்லி விட்டு கோணி ஊசியை எடுத்து அவனுடைய மூக்குத் துளையின் வழியே கீழேயிருந்து குத்தி மேற்புறமாக வெளியே எடுத்தான். பையன் புடுக்கறுந்த பன்றி மாதிரியே கத்தினான்.

‘‘டேய் நீ வாய்ச்சாங்கொல்லி ஆட்டம் ஆடுறடா... நிமிஷத்துக்கு நிமிஷம் ஆட்டத்தோட ரூல்ஸ ப்ரேக் பண்றே... நீ கத்த மாட்டேன்னு சொன்னதுனாலதானே கட்ட அவுத்தேன். இப்போ பாரு, மறுபடியும் கட்டப்

போறேன். இனிமே நீ ரூல்ஸ ப்ரேக் பண்ணுனா பனிஷ்மெண்ட் இதை விட பயங்கரமா இருக்கும்'' என்று சொல்லிவிட்டு உதவியாளனை அழைத்து ஒரு டம்ளர் பால் வரவழைத்துக் குடித்தான். நேற்று இருந்த உதவியாளனுக்கு ஜுரம் கண்டுவிட்டது. இவன் இன்னொருத்தன். எல்லாம் எத்தனையோ கொலை செய்த பயல்கள். ஆனால் தர்மாவின் டார்ச்சரைப் பார்த்ததும் பயந்துவிட்டான்கள்.

''பால் எதுக்குன்னு பாக்குறியா? பால் குடிச்சாதான் எனக்கு வெளிக்கு வரும். வெளிக்கு வந்தாதான் அதக் கரைச்சு உனக்குக் குடுக்க முடியும். இவ்வளவும் நீயா வரவழச்சுக்கிட்டது. பாரு எனக்கு எவ்வளவு கஷ்டம்னு... நீ கத்த மாட்டேன்னு சொன்னே. நானும் அத நம்பி உன் வாய்க்கட்ட அவுத்து வுட்டேன். அப்புறம் கத்துறே. நீ எனக்குத் தொடர்ந்து நம்பிக்கைத் துரோகம் பண்ணிக்கிட்டே இருக்கடா நாய்க்குப் பொறந்தவனே...''

பையனுக்கு எதிரிலேயே ஒரு வாய் அகன்ற பேசினில் மலம் கழித்து அதில் சிறுநீரும் பெய்து ஒரு குச்சியால் கரைத்து, கரைசலை ஒரு மக்கில் ஊற்றி — இதையெல்லாம் மற்ற யாராலும் செய்ய முடியாது. தர்மா சின்ன வயதில் மலத்துடனே வாழ்ந்தவன் என்றபடியால் அவன் மலத்தையும் மூத்திரத்தையும் ஏதோ தோசை மாவு — கரைப்பது போல் கரைத்துக்கொண்டிருந்தான். பிறகு, மக்கை பையனின் வாயருகே எடுத்துச் சென்றான். கடும் நாற்றம் போலிருக்கிறது. பையன் உடனேயே வாந்தி எடுத்துவிட்டான்

''ஓ... கோக் குடித்து வளர்ந்தவன். உனக்கு இது பிடிக்காது'' என்று சொல்லிவிட்டு தூணில் கட்டப்பட்டிருந்த பையனை நாற்காலியில் வைத்துக் கட்டி அவன் வாயில் ஒரு ஃபனலை வைத்து அதன் வழியே அந்த மலக் கரைசலை ஊற்றினான். உதவியாளன் ஓங்கரித்துக்கொண்டு ஓடி விட்டான்.

''என்னடா இது, ரெண்டு பேரும் இப்படிப் பண்றீங்க? கிராமத்துல இதெல்லாம் சகஜன்டா... எத்தன காலம் எங்க வாயில ஊத்துனிங்க... இப்ப நீ குடி...''

பையன் தொடர்ந்து வாந்தி எடுத்துக்கொண்டே இருந்தான். பையனின் கை கால் கட்டுகளை அவிழ்த்துவிட்டான் தர்மா. ''சார், என்ன வுட்ருங்க'' என்று அலறிக்கொண்டே தர்மாவின் காலில் விழுந்தான் பையன்.

‘‘பாத்தியா... விளையாட்டோட ரூல்ஸ ஒவ்வொரு நிமிஷமும் ப்ரேக் பண்ணிக்கிட்டே இருந்தா நான் எப்படிடா உன்னை வெளியே விடுறது? நீ குட் பாயா நடந்துக்கிட்டா இந்த நிமிஷமே உன்னை வெளியே வுட்ருவேன். ஆனா நீ வெளியவே போகமாட்டே போல்ருக்கே? உன்னை யார்டா என் கால்ல விழச் சொன்னது? நான் சொன்னத மட்டும்தான்டா நீ செய்யணும். இங்க நான் போலீஸ். நீ திருடன். நம்ம ரெண்டு பேரும் திருடன் போலீஸ் விளையாட்டு விளையாடறோம். இதை எத்தன தடவ உன்கிட்ட சொல்றது? உனக்கு ஒரு பனிஷ்மெண்ட் குடுக்கணும்னுதான் கைகால அவுத்து வுட்டேன். ஒடனே இன்னொரு தப்பை பண்ணி இன்னொரு பனிஷ்மெண்ட் குடுக்க வைக்கிறியே? என்னை ரொம்ப கஷ்டப்படுத்தாதடா... நீ என்னை கஷ்டப்படுத்தப் படுத்த உனக்கு பனிஷ்மெண்ட் ஜாஸ்தி ஆய்ட்டே போவும். போலீஸ் சொல்றத மட்டும்தான் திருடன் கேக்கணும். சொல்லாதத செய்யவே கூடாது. புரியுதா?"

தலையாட்டினான்.

‘‘ஓகே. நீ திருந்த மாட்டே போல இருக்கு. நீ எடுத்த வாந்திய கழுவறதுக்—காகத்தான் உன் கட்டை அவுத்து வுட்டேன். அழகா அள்ளிட்டு வேலய முடிச்சிருக்கலாம். நீ கால்ல வுழுந்து கெடுத்துக்கிட்டே. இப்போ வாயத் தொறந்து பதில் சொல்லாம மறுபடியும் தலய ஆட்டுற. உன்னை இனிமே சும்மா விட முடியாது. இந்த வாந்தியை எல்லாம் அள்ளித் தின்னு... திங்கலேன்னா நான் இன்னொரு டம்ளர் பால் குடிக்க வேண்டியிருக்கும். என்னைக் கஷ்டப்படுத்தாதடா பன்னிப் பயலே...’’

பையனால் வாந்தியை அள்ளித் தின்ன முடியவில்லை. ஒரு வாய் தின்றுவிட்டு ஒன்பது வாய் வாந்தி எடுத்தான்.

‘‘சரி, உனக்கு வாட்டர் ட்ரீட்மெண்ட் குடுத்தாதான் சரிப்பட்டு வருவே. அதுலயே இந்த இடமும் சுத்தமாயிடும். இரு வர்றேன்’’ என்று சொல்லிவிட்டு ஒரு ரப்பர் குழாயை எடுத்து வந்து ஒரு முனையை பம்பில் மாட்டிவிட்டு இன்னொரு முனையை கையில் எடுத்துக்கொண்டான். கடும் வேகத்தில் பாய்ந்த தண்ணீரை பையனின் முகத்தில் நிறுத்தாமல் பாய்ச்சினான். மூச்சு முட்டி செத்துவிடும் தருணத்தில் குழாயை சில நொடிகள் நகர்த்தினான்.

அன்றைய செஷன் முடிந்ததும் “தேவம் தேவம்” என்று சொல்லி தர்மாவைக் கட்டிப் பிடித்துக்கொண்டான் நாய் பாஸ்கர். ஏற்கனவே நாய்களை முன்வத்து பாஸ்கருக்கும் தர்மாவுக்கும் ஒரு அத்யந்தமான நட்பு உருவாகி இருந்தது. முதல் முறையாக நாய் பாஸ்கரின் பண்ணை வீட்டுக்கு தர்மா சென்றபோது அவனை எதிர்கொண்டது பாஸ்கர் வளர்த்து வந்த செயிண்ட் பெர்னார்ட் நாய்தான். தர்மாவுக்கு நாய் பாஷை தெரியும் என்பதால் அந்த நாய் தர்மாவிடம் உடனடியாக ஒட்டிக்கொண்டது. நாய் பாஷை என்பது தனியே ஒரு புத்தகமாக எழுத வேண்டிய விஷயம். அது இந்த நாவலின் நோக்கமல்ல என்பதால் ஒரே அடிப்படை இலக்கணத்தை மட்டும் தெரிந்து கொள்வோம். முதலில் அந்த நாய்க்கு நாம் அதன் நண்பன்தான், எதிரி அல்ல என்பதைப் புரிய வைக்க வேண்டும். அதற்கு— சுமார் ஐம்பது வழிகள் உள்ளன. அதில் பிரபலமானது, நம் கை விரல்களை சற்றே மடக்கியபடி கையின் வெளிப்புறத்தை (உள்ளங்கை நம் வயிற்றை நோக்கி இருக்க வேண்டும்) நாயிடம் காண்பித்து, அதற்கு நம் வாசனையைப் பழக்க வேண்டும். இதையே தெரு நாயிடம் செய்தால் கடி குதறிவிடும். நான் சொல்வது, வீட்டு நாய். தெரு நாயும் வீட்டு நாயும் பார்ப்பதற்குத்தான் ஒன்றே போல் இருக்குமே தவிர அது வேறு; இது வேறு. நாய் என்று மட்டும் அல்ல, காட்டு யானைக்கும் வீட்டு யானைக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? அதேதான் நாய்க்கும். ஏன், மனித இனத்திலேயே இருக்கிறதே? பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சில பேரை இரும்புச் சங்கிலியால் பிணைத்துத் தனி அறையில் அடைத்திருப்பார்களே, அந்த மாதிரிதான்.

நாய் பாஸ்கருக்கு அந்த நாய் செயிண்ட் பெர்னார்ட் ரகம் என்பது மட்டுமே தெரிந்திருந்தது. ஐரோப்பாவில் அந்தக் காலத்தில் காட்டுவழியே செல்லும் பாதிரிகளுக்குத் துணையாக இருந்தவை அவை என்றான் தர்மா. அதனால்தான் அதற்கு ஞானி என்று பெயர்.

“ஓ, ஞானியும் ரவுடியுமா? நல்ல ஜோடி” என்றான் பாஸ்கர். அதிலிருந்துதான் இருவரும் மிகவும் நெருக்கமானார்கள்.

பாஸ்கர் அவனை “தேவம் தேவம்” என்று சொன்னது தர்மாவுக்கு முதலில் விளங்கவில்லை. பிறகுதான் அவனிடமே கேட்டு தேவம் என்றால் தெய்வம்

என்று தெரிந்து கொண்டான். அப்போது தர்மாவுக்குத் தன் அம்மா சொன்ன வாசகம் — மீரு மா தேவரா— ஞாபகம் வந்தது.

ஏன் தெய்வம் என்று கேட்டதற்கு இப்படியெல்லாம் டார்ச்சர் வகைகள் உண்டு என்பதைத் தன்னால் கற்பனையே செய்திருக்க முடியாது என்றும், மற்றவர்கள் சொன்னால் கூட நம்பியிருக்க மாட்டான் என்றும், இப்போது கண்ணெதிரிலேயே பார்ப்பதால்தான் நம்ப முடிகிறது என்றும், தன்னால் கொலை மட்டுமே செய்ய முடியும், இப்படியெல்லாம் டார்ச்சர் செய்ய முடியாது என்றும் சொன்னான் பாஸ்கர்.

பையனின் மூக்கிலிருந்து வழிந்த ரத்தம், வாயிலிருந்த வழிந்த கோழை, கண்ணீர் எல்லாம் சேர்ந்து அவன் முகமே ரத்தச் சகதியாக இருந்தது.

‘‘சரி சொல்லு... வாய்க்கட்டு இருக்கணும்னா ஒன்னு... இருக்க வேணாம்னா ரெண்டு... எது வேணும்?’’ என்று கேட்டு ஆட்காட்டி விரலைக் காட்டினான் தர்மா. ‘வேண்டாம்’ என்பதுபோல் தலையை ஆட்டினான் பையன்.

‘‘என்னது? கட்டை அவுக்க வேணாமா?’’

மீண்டும் வேண்டாம் என்றே தலையை ஆட்டினான் பையன்.

"சொன்னோம்லடா... எத்தன தடவ சொன்னோம். கேட்டியா? எவ்வளவு டீசன்டா சொன்னோம்? கேட்டியா? அது ஏன்டா டீசன்டா சொன்னா கேக்கவே மாட்டேங்கிறீங்க? ஏன்டா எங்களுக்குப் பிரச்சினை கொடுக்கிறீங்க? சொல்லுடா குச்சிக்காரிக்குப் பொறந்த பாடு... வாயைத் தொறந்து சொல்லுடா... ஏன்டா டீசன்டா சொன்னா உங்களுக்குப் புரியவே மாட்டேங்குது? இப்போ புரியுதாடா தேவுடியா பயலே?’’

‘‘டேய் கேக்குறேன்ல, புரியுதாடா? வாயத் தொறந்து சொல்லுடா...’’

தலையை வேகம் வேகமாக ஆட்டினான் பையன்.

‘‘வாயத் தொறந்து சொல்லுடா தாயோளி...’’

ம்ம... ம்ம்ம... என்று வாய்க் கட்டினூடே முக்கினான்.

7

நீ ஒரு மேஜிக் நிபுணன். உன் ஹிப்னாடிசம் மிக மிக மெதுவாக என் நாடி நரம்புகளிலெல்லாம் ஊடுருவுகிறது.

டியர் சாரு,

இதுவரை நீ எழுதி அனுப்பிய நாவலைப் படித்தேன். நாவலில் ஒரு சிறிய மாற்றம் செய்யலாம் என்று நினைக்கிறேன். இதன் பதிப்பாளன் என்ற முறையில் அல்ல; உன் நண்பனாக சில யோசனைகள். நீ விவரித்து வரும் வதைகள் நம்மைச் சுற்றிலும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் ஒரு பெண்ணுக்கு நடந்த கொடுமைக்காக சில ரவுடிகள் ஒருவனைப் பழிவாங்குவதாக அமைத்திருக்கிறாய். அதை விட இதை அரசியல் சம்பந்தப்பட்டதாக மாற்றினால் இந்த நாவலுக்கு ஒரு சமூகரீதியான அர்த்தம் கிடைக்கும். உதாரணமாக, ராணுவத்திடம் மாட்டிக் கொண்ட ஒரு புரட்சியாளன் அல்லது புரட்சியாளனிடம் மாட்டிக்கொண்ட யாரோ ஒரு எதிரி அல்லது மத அடிப்படை—வாதியிடம் மாட்டிக்கொண்டவன் என்று இதை மாற்றலாம். ஓரான் பாமுக்கின் ‘என் பெயர் சிவப்பு’வில் அப்படி ஒரு இடம் வருகிறதே அது போல.

கிருஷ்ணா.

டியர் கிருஷ்ணா,

நீ சொல்வது போல் மாற்றி வாசித்துக்கொள்ளும் உரிமையை நான் வாசகரிடமே விட்டுவிடுகிறேன். மனித வதை ஏன் நடக்கிறது என்பதை உளவியல் ரீதியாகப் புரிந்துகொள்ள முயற்சிப்பதே என் நோக்கம். 1947இல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கும் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் வந்த ரயில்களில் இருந்த ஆயிரமாயிரம் பிரேதங்கள் எந்த அடிப்படையில் கொல்லப்பட்டவை? ஒரு தேசத்திலிருந்த அத்தனை பேருமே— அவர்களில் கலைஞர்களும் கவிஞர்களும் புத்திஜீவிகளும் தத்துவவாதிகளும் அடக்கம் —

முன்னின்று 90 லட்சம் யூதர்களைக் கொன்றார்களே, அந்த இன அழித்தொழிப்பின் ஆதாரமாக இருந்தது எது என்று நினைக்கிறாய்?

பழி வாங்கும் உணர்வுதான்...

சாரு.

8

உன் கவிதைகளைப் படிக்கும்போது என் மனம், ஆத்மா உடல் எல்லாமே ஒரு பரவச நிலையில் சென்றுவிடுகின்றன. வனத்தினிடையே கிடைக்கும் ஒரு அமானுஷ்யமான அமைதி அதில் கிடைக்கிறது. வேறொரு சமயம் படித்தால் அது ஒரு நடனமாகவும் பாடலாகவும் தோன்கிறது.

It is a constant song
a constant dance
it is a continuum
river–like flow

ஒரு மலர் மொக்கவிழ்க்கும்போது சுகந்தம் பரவுகிறது. நீ எதைச் செய்தாலும் அந்த மணத்தையும் உன்னோடு கொண்டு வந்துவிடுகிறாய்.

அவனுக்கு தான் ஒரு முழுமையான ஆண் அல்ல என்பது அவனுடைய பதினைந்தாவது வயதில் எதிர்வீட்டு ஆங்கிலோ இந்தியக் கிழவியைப் புணர்ந்தபோது தெரிந்தது. எப்படி அவள் அந்தத் தொம்பச் சேரிக்கு வந்து சேர்ந்தாள் என்று தெரியவில்லை. 70 வயது இருக்கும். முகத்திலும் கைகளிலும் தோல் பட்டை பட்டையாகச் சுருங்கிக் கிடந்தது. எப்போதும் மாதா கோவிலில்தான் வாசம். அங்கே இல்லாவிட்டால் வீட்டில் இருப்பாள். யாரோ மாதாமாதம் அவளுக்குப் பணம் அனுப்புகிறார்கள். போஸ்ட்மேன் மணியார்டர் கொடுப்பதால் தெரியும். அந்தத் தொம்பச்சேரியில் அவள் வீடு மட்டும்தான் ஓட்டு வீடு. ஆனால் அங்கே இருக்கும் குடிசைகளை விட அந்த வீடு அசிங்கமாக இருக்கும். அவளும் அவனும் தனியாக இருக்கும்போது, அவன் அவளுடைய பார்வையில் படும்படி நின்றுகொண்டு கர மைதுனம் செய்வான். அவள் ஒன்றும் சொல்லாதிருக்கவே உறுப்பை வெளியே எடுத்து

செய்ய ஆரம்பித்தான். பார்த்துக்கொண்டே இருந்தவள் ஒருநாள் அவனை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள். வெறி பிடித்த மிருகத்தைப் போல் அவனைக் கசக்கினாள். ஆனால் அவனுடைய உறுப்பு எழும்பவே இல்லை. வாயால் சப்பினாள். கையால் உருட்டினாள். என்னென்னவோ செய்து பார்த்தாள். ஒன்றுமே நடக்கவில்லை. ஆனாலும் அவனுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. ஒருமுறை யாரும் இல்லாதபோது ஒரு பன்றிக் குட்டியைப் புணர்ந்து பார்த்தான். அப்போது அவன் நினைத்தது போலவே குறி நன்றாக வேலை செய்தது. பன்றிக் குட்டியிடம் ஒழுங்காக செய்த குறி ஏன் கிழவியிடம் மக்கர் பண்ணியது என்று யோசித்த போதுதான் தான் முழுமையான ஆண் அல்ல என்று அவன் கண்டுகொண்டான்.

அப்போதுதான் அவனுக்கு ஊரில் தன்னை கோசா கோசா என்று மற்றவர்கள் கேலி பேசியதன் அர்த்தம் புரிந்தது. எப்படி இவர்களோடு வாழ்வது என்று கவலையுடன் யோசித்துக் கொண்டிருந்தபோது அந்த ஊருக்கு ஒரு கோசா கூட்டம் வந்தது. அவர்களோடு அவனும் சேர்ந்துகொண்டான். எங்கெங்கோ சுற்றினார்கள். கடைசியில் ஒருநாள் ஆண்குறியை அறுப்பதற்கான சடங்குகள் நடந்த போது பன்றி பயம் ஏற்பட்டு தப்பியோடி வந்துவிட்டான். கொட்டையை அறுக்கும்போது எட்டு ஊருக்குக் கேட்கும்படி கத்துமே அந்த ஆண் பன்றிகளின் ஞாபகம் வந்தது அவனுக்கு. அந்த வலியை விட ஆயுள் பூராவும் இப்போது இருப்பது போலவே இருந்துவிடலாம் என்று தோன்றியது.

9

நீ என்னோடு காற்றைப் போல் சுதந்திரமாக இருக்கலாம்

There are so many strong historical facts that prove the beauty, the grandeur, the spirituality, the height of the love of a woman. Man has failed but the woman has not.

செக்ஸிலேயே அதியற்புதமான விஷயம் ப்ளோஜாப் என்பது அவனுடைய கருத்து. ஆண்களை ரகசியமாக பேட்டி எடுத்தால் எல்லோருமே ஒத்துக்கொள்வார்கள்.

அந்தப் பெரிய ஊரில் நாகராஜனைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அவ்வளவு பிரபலமானவர். இந்தி பேசும் ஊரில் ஒரு தமிழரான நாகராஜன் இவ்வளவு பிரபலமாக இருப்பது ஆச்சரியம்தான். அவ்வளவு பணக்காரரும் அல்ல. ஆனால் விருந்தோம்பலில் அவரை அடித்துக்கொள்ள யாராலும் முடியாது. தமிழ்நாட்டில் உள்ள நடிகர்கள், கலைஞர்கள், பிரபலமானவர்கள் யார் அந்த ஊருக்குச் சென்றாலும் நாகராஜன் வீட்டுக்குச் சென்று ஒரு வாய் தீர்த்தம் அருந்தாமல் திரும்ப மாட்டார்கள். அவ்வளவு பிரசித்தமான பார் அவருடையது. உலகில் உள்ள அத்தனை பிரபலமான மது வகைகளும் அங்கே இருக்கும். மிகவும் அரிதான சரக்குகள் கூட.

ஒருமுறை அங்கே தென்னிந்தியாவின் பிரபலமான நடிகர்கள் பலர் குழுமியிருந்தார்கள். யாரோ ஒரு நடிகரின் பிறந்தநாள் அன்றைய தினம் நாகராஜன் வீட்டில் கொண்டாடப்பட்டது. அப்போது 'எந்த நடிகை கலவிக்குச் சிறந்தவள்?' என்று ஒரு வாக்கெடுப்பு நடத்தலாம் என்று முடிவாயிற்று. எல்லோரும் ஒரு தாளில் நடிகையின் பெயரை எழுதி ஒரு பெட்டியில் போட வேண்டும்; இதன் மூலம் அவர்கள் தங்கள் அடையாளத்தை வெளியே காண்பித்துக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது. எல்லோரும் எழுதிப்போட்ட பிறகு அவர்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஒருத்தர் பாக்கியில்லாமல் ஒரே நடிகையின் பெயரையே எழுதியிருந்தார்கள். காரணம், அந்த நடிகை ப்ளோஜாபில் அவ்வளவு நிபுணி.

அவன் கலா என்ற துணை நடிகையோடு பழகிக்கொண்டிருந்தபோது அவளுக்கு ப்ளோஜாப் செய்யத் தெரியவில்லை என்பது அவனுக்கு ஆச்சரியமாகவும் விசனமாகவும் இருந்தது. அவனுக்கும் அதில் அவ்வளவாக அனுபவம் இல்லை. தில்லியில் ஒரு பையனோடு செக்ஸ் வைத்துக் கொண்டிருந்தபோது அந்தப் பையன் ‘‘நீ செய்தால் நான் செய்கிறேன்’’ என்று சொல்லிவிட்டபடியால் அந்த வாய்ப்பும் நழுவிப் போனது. பிறகு அவன் catamite—ஆக இருந்த காலத்திலும் புட்டத்தைக் கொடுப்பதோடு சரி; வாய் போடுவதில்லை. பல பேருக்கு அந்த இடம் நாறுகிறது என்பதுதான் காரணம். கொஞ்ச நாள் கிகலோவாக இருந்தபோது பிரமாதமாக நாக்கு போட்டிருக்கிறான். அதில் அவன் நிபுணன் என்றுகூட சொல்லலாம். அவனை வைத்து ஆண்களுக்குத் திருமணத்துக்கு முன் இதில் ஒரு பயிற்சி கொடுத்தால் இந்தியாவில் விவாகரத்து விகிதமே குறைந்துவிடும்.

சரண்யாவை சந்திக்கும் வரை அவனுக்கு ப்ளோஜாபின் அதிசயங்கள் பற்றி அதிகம் தெரிந்திருக்கவில்லை. அவள் செய்யும்போது நாடி நரம்பெல்லாம் சிலிர்த்து ஆனந்தப் பரவசம் உண்டானது... காமத்தின் உச்சம் என்று தோன்றியது.

‘‘இவ்வளவு செய்கிறேனே... என்ன நீ, ஜடம் மாதிரி படுத்தி—ருக்கிறாய்?’’ என்பாள்.

‘‘உள்ளே எரிமலை வெடிக்கிறது.’’

"ஆனால் உணர்ச்சியே இல்லாத கல் மாதிரியல்லவா படுத்திருக் கிறாய்?"

ஆமாம்; பார்ப்பதற்கு ஒரு பிரேதத்தைப் போலவே படுத்திருப்பான். அல்லது, ஜென் முனி என்றும் சொல்லலாம். இளம் வயதில் கற்றுக்கொண்ட ஹட யோகம் காரணமாக இருக்கலாம்; அல்லது, முன்தோலை அகற்றி விட்டதால் இருக்கலாமோ என்னவோ, தெரியவில்லை.

‘‘உன்னுடைய எழுத்தை அலுவலகத்தில் வைத்துப் படிக்க முடிய—வில்லை; ஒவ்வொரு வாக்கியத்துக்கும் சிரிக்க வேண்டியிருப்பதால் சக ஊழியர்கள் ஆச்சரியத்துடன் கவனிக்கிறார்கள்’’ என்று அடிக்கடி சொல்வாள் சரண்யா. ஆனால் எழுத்தில் அவ்வளவு நையாண்டியும், எள்ளலும், துள்ளலுமாக இருப்பவன் நேரில் இப்படி அசமஞ்சமாக இருப்பது அவளுக்குப் பெரிய

ஆச்சரியம். ஒருநாள் அவனுடைய கவிதை வாசிப்பின் விடியோவைப் பார்த்தபோது அவனுக்கே கேவலமாகத்தான் இருந்தது. ஏதோ வயிற்று வலி வந்தவனைப் போல் அமர்ந்திருந்தான்; கவிதை வாசித்தான். நடக்கும்போதும் சரீர பாகங்களை அசைக்கும் போதும் ஏதோ புவியீர்ப்பு விசை இல்லாத இடத்தில் இருப்பவனை போல் தெரிந்தன அவனுடைய அசைவுகள்.

அவனுக்குத் தோன்றும், தன்னுடைய ஆண்குறி மட்டும் ஒழுங்காக எல்லோரையும் போல் வேலை செய்திருந்தால் இப்படி செக்ஸ் பற்றியே எழுதி ஒரு செக்ஸ் எழுத்தாளன் என்ற பெயரை வாங்காமல் இருந்திருக்கலாமே என்று.

10

Rising in love

வாகனங்களுக்கு அனுமதி இல்லை என்று திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கும் குதிரை வீரர்கள். சூரிய வெளிச்சம் தேகத்தில் படாமல் குடையைப் பக்கவாட்டில் சாய்த்துப் பிடித்தபடி செல்லும் இளம்பெண். பயிற்சிக்காக காற்றில் குத்திக்கொண்டிருக்கும் குத்துச் சண்டை வீரர்கள். ஸ்கேட்டிங் பயிலும் குழந்தைகளை மிரட்டி நேர்ப்படுத்தும் பயிற்சியாளன். தேக நலனுக்காக சிரித்துக் கொண்டிருக்கும் சிரிப்பு நிவாரணக் கட்சிக்காரர்கள். PLAY HARD என்று எழுதப்பட்ட டீ ஷர்ட்டை அணிந்து நடைப் பயிற்சி செய்துகொண்டிருக்கும் பெருத்த முலைக்காரி. இன்னும் உறங்கிக்கொண்டிருக்கும் மனிதக்கூட்டத்தில் ஏறி விடாதபடி வாகனத்தை ஓட்டி மணல்வெளியில் இறைந்திருக்கும் குப்பைகளை நீக்கிக்கொண்டிருக்கும் துப்புரவுத் தொழிலாளி. அருகம்புல் மற்றும் பல இயற்கை உணவுச்சாறுகளை விற்றுக்கொண்டிருப்பவர்களை மொய்த்துக்கொண்டிருக்கும் மத்திய வயதுக்காரர்கள். எண்ணித் தீராத அலைகளால் கரையைத் தொட்டுத் தொட்டுத் திரும்பும் கடல். புராதனங்களின் கதை கொண்டிருக்கும் மணல் துகள்கள். லட்சக்கணக்கான மீன்களின் மரணத் துயரம் படிந்த படகுகள்.

மேகக் கூட்டத்தின் பின்னே எழுந்துகொண்டிருக்கும் உறக்கம் கலையாத சூரியனை என்றாவது பார்த்துவிட முடியுமா என தியானித்திருக்கும் அவன்...

1885 ஆம் ஆண்டு செய்ன் நதியில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட அந்தப் பெயர் தெரியாத 16 வயது பெண்ணைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள் செலின். LÕInconnue de la Seine* (*பாரிஸ் நகரின் பிணவறைக் காப்பாளராக இருந்த ஒரு மருத்துவர் அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்து வியந்து அவளுடைய முகத்தை பிளாஸ்டர் ஆ்ஃப் பாரிசால் மோல்ட் செய்து வைத்தார். அந்த முகம் இன்றளவும் பல ஓவியர்களால் வரையப்பட்டு வருகிறது.) என்று அழைக்கப்பட்டு ரில்கேவிலிருந்து ஆல்பர்

கம்யூ வரை எல்லோருடைய எழுத்திலும் இடம்பெற்ற அந்த அழகான பெண்ணின் புன்முறுவலின் அர்த்தம் என்ன? அவள் ஏன் தற்கொலை செய்துகொண்டாள்? தற்கொலை செய்துகொள்ளும் போது புன்முறுவல் செய்ய முடியுமா? அவள் கதையை இந்த செய்ன் நதி அறியுமா?

பாரிஸை இளவேனில் பருவத்தில் பார்ப்பது அழகு என்பார்கள். ஆனால் செலினுக்கு அதைக் குளிர்காலத்தில் பார்ப்பதுதான் பிடித்திருந்தது. கடுமை—யான குளிர். ப்ளத்தான் இலைகள் விழுந்து கிடக்கும் கூட்டமில்லாத வீதிகள். இந்தக் குளிரில் பாரிஸிலுள்ள தேவாலயங்களில் அமர்ந்திருப்பது அவளுக்குப் பிடித்தமான விஷயங்களில் ஒன்று. நாத்ர் தேமில் வெளியூர்ப் பயணிகளின் கூட்டம் இருக்கும். Sacre Coeur பரவாயில்லை. Montmartre குன்றை ஏறி வர வேண்டும் என்பதால் கூட்டம் அதிகம் இருக்காது. மாலை நான்கு மணிக்குச் சென்றால் ஏழு மணி வரை நேரம் போவதே தெரியாமல் அங்கே அமர்ந்திருப்பாள்.

செலினுக்கும் அவனுக்கும் சிநேகம் ஏற்பட்டதே செலினின் பெயரை வைத்துத்தான். ஒரு நண்பர்கள் கூட்டத்தில் அவன் லூயி ஃபெர்தினாந் செலினைப் பற்றி விரிவாகப் பேசிக்கொண்டிருந்தபோது செலின் அவனிடம் வந்து ''உங்களோடு தனியாகப் பேச வேண்டும்'' என்று அழைத்தாள். அவனுடைய புத்தகங்களை ஒன்று விடாமல் படித்திருந்தாள். ஏதோ வசியத்தில் சிக்குண்டவளைப் போல் அவனுடைய எழுத்தைப் பற்றிப் பேசினாள். அவள் வீடு பாரிஸை விட்டுத் தள்ளி யோன் நதியும் செய்ன் நதியும் சேரும் இடத்தில் மாந்த்தரூ என்ற ஊரில் யோன் நதிக்கரையில் இருந்தது. வீட்டுக்குப் பின்னே கைக்கெட்டும் தூரத்தில் யோன் நதி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது. அதில் நீந்திச் செல்லும் அன்னப் பறவைகளுக்கு க்ருவாஸோ(ங்) ரொட்டியைப் பிய்த்துப் பிய்த்துப் போட்டுக் கொண்டே லூயி ஃபெர்தினாந் செலினுக்கும் ஜெனேவுக்குமான வித்தியாசத்தைப் பற்றி அவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் செலின்.

சொர்க்கம் என்று தோன்றியது அந்த இடம். ஆனால் அந்த ஆடம்பரமான வீட்டில் அவள் மட்டுமே தங்கியிருந்தது வினோதமாக இருந்தது. வீட்டில் ஒரு

சிறிய நீச்சல் குளமும் இருந்ததைப் பார்த்து அவன் ஆர்வம் கூடியது. ஒரு 20 வயதுப் பெண் — அதுவும் தமிழ்ப் பெண் — பாரிஸிலிருந்து 180 கி.மீ. தள்ளி இவ்வளவு பெரிய வீட்டில் எப்படித் தனியாக இருக்க முடியும்? ஆனால் யார் என்ன என்று எதுவுமே சொல்ல மறுத்துவிட்டாள். மறுத்தாள் என்பது சரியல்ல; ஒருவிதமாக அதைத் தவிர்த்தாள். கொஞ்சம் வலியுறுத்திக் கேட்டால் "அது எதற்கு?" என்றாள். ஸோர்போனில் தத்துவம் படிக்கிறாள் என்பது மட்டுமே அவள் தெரிவித்த விபரம்.

"நீ சீலே தேசத்துப் பெண்ணைப் போல் இருக்கிறாய்" என்று ஒருநாள் அவளிடம் சொன்னான். அவள் சிலே சென்றபோது அவளுக்கும் அப்படித்தான் தோன்றியதாகச் சொன்னாள்.

அவன் அவளுடன் தங்கியிருந்த பத்து நாட்களில் அது எப்படி நடந்தது, எப்போது நடந்தது என்று தெரியவில்லை. எவ்வளவு யோசித்தும் புரியவில்லை. ஒரு மலர் மலர்வதைப் போல அவ்வளவு ரகசியமாக மலர்ந்தது அந்த உறவு. முதல் செக்ஸ் என்றாள். தெரிந்தது.

ஆனால் மூன்று நூற்றாண்டுகளுக்கு முந்திய பெண்ணைப் போல் கூச்சப்பட்டாள். முத்தம்கூட கொடுக்க முடியவில்லை. பாரிஸில் இப்படி ஒரு பெண்ணா?

"என்ன செய்வது, நான் அப்படித்தான்?"

"ஏன், என் வாய் நாறுகிறதா?"

"சே, சே... மணக்கிறது. ஆனாலும் எனக்குத்தான் முத்தம் என்றால் என்னவோ போல் இருக்கிறது."

"நாம் ஒருமுறை கூட முத்தமிட்டுக் கொண்டதில்லை தெரியுமா?" என்றான் ஒருநாள்.

"இல்லையே? அன்றைக்கு ஒருநாள் முத்தம் கொடுத்துக் கொண்டோமே?"

"அடப்பாவி, இப்படி சென்ற நூற்றாண்டு சம்பவம் நினைவு கூர்வதைப் போல் கொடுத்துக்கொள்வதா முத்தம்."

முத்தம் கொடுத்தால் அது கலவியில்தான் முடிய வேண்டும். இல்லாவிட்டால் ரொம்பப் பிரச்சினையாக இருக்கிறது."

“என்ன பிரச்சினை?”

“உடம்புதான். விளக்கிச் சொல்ல வேண்டுமா?”

“நீ டில்டோ பயன்படுத்துவதில்லையா?”

“சேச்சே...”

“விரல்?”

“நெவர். டி.வி.யில் சமையல் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தால் பசி ஆறுமா? எனக்கு எல்லாமே ஸ்தூலமாக வேண்டும்.”

“சரி, அதனால் என்ன? இப்போது நாம் தனியாகத்தானே இருக்கிறோம்? பசியாறலாமே?”

பதில் இல்லை.

“உன் பார்வையிலேயே எனக்கு ஆர்கஸம் வந்து விடுகிறது. பார்வையா அது? போடா... ஏன் நீ என் வாழ்வில் வந்தாய்?”

“நம் உறவு என் வாழ்வில் சில அதிசயங்களைக் கொண்டு வந்திருக்கிறது. நீ உன்னோடு கொண்டுவரும் ஒளியும் மணமும் என்னை வசீகரிக்கிறது."

“நீ முத்தமிட்டால் அப்புறம் என் சரீரத்தின் தீவிரத்தை உன்னால் தாங்க முடியாது..."

“டேய் பொறுக்கி... உன்னைப் புணர்ந்துகொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது.”

ஆனால் புணர்ச்சியில் அவன் பலவீனமாக இருந்தான். எந்த ஒத்துழைப்பும் இல்லாமல் அவனுக்குப் புணர்ச்சி வரவில்லை. அதனால் ஒவ்வொரு முறையும் அவளிடம் தோல்வியடைந்தான்.

“நீ என்ன சொதப்பினாலும் பிடிக்கிறதே; அதனால்தான் உன்னைக் கொல்ல வேண்டும் போல் இருக்கிறது.”

“ஏன் என்னைக் கொல்ல வேண்டும் என்கிறாய்? இப்போது ஒவ்வொரு நிமிடமும் அதுதானே நடந்து கொண்டிருக்கிறது?”

ஒருநாள் ஏதோ ஒரு பாப் பாடகியைப் போல் முடிக் கற்றைகளை சுருளாக்கிக் கொண்டு வந்து ‘‘உனக்காகத்தான்’’ என்றாள். சுருள் முடி என்றால் அவனுக்குப் பிடிக்கும். அவளுக்கு அது முன்னை விட அழகாக இருந்தது.

‘‘என் மனதையும் அதன் போக்கையும் இந்த உலகத்தில் யாராலுமே மாற்ற முடிந்ததில்லை. நான் என்ன விரும்பினேனோ அதை மட்டுமே இதுவரை செய்து வந்திருக்கிறேன். வீட்டிலும் நான் ஒரு கலகக்கார பெண்ணாகவே இருந்திருக்கிறேன். என்னைப் பார்க்கும்போது நீ அதை கவனித்திருப்பாய். ஆனால் இப்போது நான் நினைப்பதை என்னால் செய்ய முடியவில்லை. என் இஷ்டப்படி இருக்க முடியவில்லை. உன்னைப் பற்றியே எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். உனக்கு அது தெரியாது. உன் நினைவாலேயே நான் செத்துவிடுவேன் போலிருக்கிறது. இதனாலேயே உன்னை வெறுக்கிறேன். என்னையும் வெறுக்கிறேன்.’’

‘‘உனக்கு நான் ரொம்பவே நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். உன் ஞானத்தையும், பிரார்த்தனையையும், காதலையும் சந்தோஷத்தையும், குதூகலத்தையும் என்னோடு நீ பகிர்ந்து கொண்டாய்.’’

‘‘என்னிடம் ஏதோ மாறி இருக்கிறது. அதை என்னால் உணர முடிகிறது. பார்க்க முடிகிறது. அந்த மாற்றம் பிடித்திருக்கிறது. ஆனால் அதன் உள்ளேயே மூழ்கிவிடுவதால் அதைப் பற்றி விவரிக்க முடியவில்லை. விவரிக்க ஆரம்பித்தால் ஒருவித தயக்கமும் பயமும் ஏற்படுகிறது.’’

"The freedom of the unknown, the innocence, the spontaneity that is bound to happen with unknown and can only happen with unknown."

‘‘நம் கூடல்களைப் பற்றி யோசிக்கும்போதெல்லாம் அங்கே இந்தியாவுக்கு ஓடி வந்துவிட வேண்டும் போல் இருக்கிறது. நம் கூடல்களெல்லாம் ஒருவித காமச் சடங்குகள் போலவே நடந்ததல்லவா? லாவோ ஷூ சொல்கிறார்: பெரும் காற்றில் பெரிய விருட்சங்கள் காற்றை எதிர்த்துப் போராடி விழுந்துவிடுகின்றன என்று. ஆனால் புல் எதிர்ப்பதில்லை; வெறுமனே தலையை மட்டும் சாய்க்கிறது. அதற்கு ஒன்றும் ஆவதில்லை.’’

கிட்டத்தட்ட தினந்தோறும் அவளிடமிருந்து இதுபோல் ஒரு கடிதம் வரும். காதலில் விழுந்தவர்களின் வழக்கமான பிதற்றல்கள். எப்படி இருக்கிறாய்? எனக்கு எப்போதும் உன் நினைவாகவே இருக்கிறது... காதலிக்கும் கலையை நீ எங்கிருந்து கற்றுக்கொண்டாய்? இத்யாதி... இத்யாதி...

அவனுக்கும் அவள் நினைவாகவே இருந்தது. காதல் ஒரு அற்புதம்தான் என்று தோன்றியது. இந்த அற்புதம் நம் கை நழுவிப் போய்விடுமோ என்ற பதற்றம் துன்பத்தைக் கொடுத்தது. ஆனால் காதல் என்பது கடைசியில் வெறும் செக்ஸ்தானே என்ற இன்னொரு எண்ணமும் தோன்றியது. செக்ஸுக்காக இவ்வளவு பெரிய விலையைக் கொடுக்க வேண்டுமா? ஆனால் காதல் என்பது செக்ஸ் மட்டும்தானா என்பதும் குழப்பமாகவே இருந்தது.

“உன்னுடைய ஒவ்வொரு கடிதமும் ஒரு நாவலின் அத்தியாயத்தைப் படிப்பது போல் இருக்கிறது.”

“சடங்குகள் மிகுந்த நம் கலவியை நினைக்கும்போது அதெல்லாம் ஏதோ கனவு போல் தோன்றுகிறது.”

‘‘உன் கடிதமெல்லாம் கவிதையாக இருக்கிறது. ஆங்கிலத்தில் எழுதும்போது நீ கவியாகிவிடுகிறாய். காற்றைப் போல் நான் உன்னுடன் சுதந்திரமாக இருக்கலாம் என்று எழுதியிருக்கிறாய். நன்றி கண்ணே. இதனால்தான் உன்னிடம் அடிமையாய்க் கிடக்கிறேன். உன் காதலையும் உன் பிரியத்தையும் போல் என் வாழ்வில் அனுபவித்ததில்லை.’’

“பொய் பேசாதேடா பொறுக்கி. இப்படித்தான் நீ ஒவ்வொரு பெண்ணிடமும் சொல்லி மயக்கிக்கொண்டிருக்கிறாய் என்று எனக்கு நன்றாகவே தெரியும். உன் எழுத்தைப் படித்து உன்னிடம் வந்தவள் நான் என்பதை மறந்து விடாதே...’’

“எல்லாமே மறைந்து சூனியமான பிறகும் நீ அந்த சூனியத்தின் உள்ளே மறைந்திருக்கிறாய்...”

‘‘இந்தத் தருணத்திலிருந்து இதுவரை நீ பார்த்திராத மலர்கள் உனக்குள் பூத்துக் குலுங்கும்...’’

‘‘என்ன மணம் இது? எப்படி இதை விவரிப்பேன்? மழை போல் நீ வந்தாய். மழை இந்த மண்ணையும் பூமியையும் குளிர்விப்பதைப் போல் நீ என்னைக் குளிர்வித்தாய். மழை போய்விட்டது, அதன் மணத்தை என்னிடம் விட்டு விட்டு.’’

“உன் ஜன்னலுக்கு வெளியே இளவேனில் காலம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இளவேனிலைக் கொண்டாட எத்தனையோ வழிகள் இருக்கின்றன... நீ என் இளவேனில்...”

‘‘என் ஆயுள் உள்ளளவும் நீதான் எனக்கு என்று சொல்கிறாய். இந்தத் தருணத்தில் அது உண்மை. எதிர்காலம் பற்றி நமக்கு என்ன தெரியும்? நான் கடிதம் எழுதாவிட்டால் என்ன; மறக்கக் கூடியதா நம் உறவு? இதயத்தோடு இதயம் பேசிக்கொண்டிருக்கும்போது கடிதம் என்னடா கடிதம்?’’

“நம் உறவு விசேஷமானது. இதில் பொறாமை, கோபம், வெறுப்பு, பொஸஸிவ்னஸ் போன்ற காதலின் பொதுத் தன்மைகள் எதுவும் இல்லை.’’

‘‘நீ என்னை ஸ்பர்ஸித்த பிறகு என்னால் பழையபடி இருக்க முடியவில்லை. இது ஒரு வலியாய்ப் பரவுகிறது. எங்கே போய் முடியுமோ தெரியவில்லை...’’

‘‘நீர் வீழ்ச்சியாய்க் கொட்டும் உன் கவிதையின் மூலம் கடவுளைக் கண்ட பிறகு மீண்டும் எதார்த்த உலகை நோக்கிச் செல்ல முடியும் என்றா நினைக்கிறாய்?’’

‘‘என்ன நடந்துகொண்டிருக்கிறது? நீயே என் குரு; ஏனென்றால், ஒரு குருவானவர் நம்முடைய மூளைக்குள் சென்று அதை சுத்தம் செய்கிறார். உன் கவிதையைப் படிக்கும்போது அது என்னை tabula rasa—வுக்குள் கொண்டு சென்றுவிடுகிறது. எதுவும் என்னுள் எழுதப்பட்டிருக்கவில்லை. எதுவுமாகவே இல்லாத ஓர் தனித்த பிரக்ஞை நிலை இது...’’

“உன் அருகாமையில் நான் ஒரு குழந்தையாய் உணர்கிறேன்...”

‘‘யானியைக் கேட்கும்போது கடற்கரையில் நான் மட்டுமே உன்னுடன் நடந்து போவது போல் இருக்கிறது. ஆனாலும் இப்போது உன்னை ஸ்பர்ஸிக்க முடியாததால் அது ஒரு சூனியத்துக்குள் என்னைத் தள்ளுகிறது...’’

‘‘நீ மறுபடியும் என் கனவில் வந்தாய். உன்னை நேரில் பார்க்கும் போது சொல்கிறேன். அதனால்தான் உன்னை எப்போதுமே என் அருகில் உணர்கிறேன். நீ இவ்வளவு தூரத்தில் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை.’’

‘‘நான் எப்போதும் உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கி—றேன். அது ஒரு தவறான அறிகுறி. ஆனால் இதுபோன்ற சின்ன சின்ன விஷயங்களையெல்லாம் உனக்கு எழுதி உன்னுடைய நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. உன் மீது காதலை விட எனக்கு மரியாதையும் மதிப்பும்தான் அதிகமாக இருக்கிறது. நீ என் குரு. அடுத்து மதறாஸ் வரும்போது உன்னுடன் பல விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.’’

‘‘காதல்தான் வாழ்க்கையில் ஒரு ஈர்ப்பையும் உத்வேகத்தையும் ஏற்படுத்துகிறது. அந்த வகையில் உன் காதல் என் வாழ்வில் கிடைத்த அரியதொரு பொக்கிஷம். இதை அடைவதற்கு இப்போது எனக்கு எத்தனையோ தடங்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும் நீதான் என் வாழ்வின் என்றென்றைக்குமான பரவசம்."

‘‘காதலிக்கும்போது நீ உன்னைப் பற்றிய எல்லா தீர்மானங்களையும் விட்டுவிட வேண்டியிருக்கிறது. உன்னுடைய ஈகோ உன்னை விட்டு அகன்றுவிடுகிறது. ஈகோவை விட முடியவில்லை என்றால் அங்கே காதல் சாத்தியமில்லை. அதனால்தான் உலகத்தில் அன்பு காணாமல் போய் விட்டது. அதனால்தான் உலகம் வெறுப்பில் மூழ்கிக் கிடக்கிறது. With love, the ego drops but the soul arises. This is why I feel ours is ‘rising in loveÕ dear.’’

‘‘உன்னோடு போனில் பேச முடியாமல் இருப்பதற்குக் கோபிக் காதே. உன்னோடு பேசும்போது என் அருகில் யார் இருந்தாலும் எனக்குப் பிடிக்காது.’’

‘‘சிலர் கவிதை எழுதுவார்களே தவிர அதைப் பற்றிப் பேசத் தெரியாது. நீ அருமையாகப் பேசினாய். You are simply amazing dear. When you talked about your poetry, I saw a blessed soul nothing but of sheer joy... mmm... wanted to hug you...’’

‘‘இந்த உலகத்துக்கு எந்தத் தீமைகளுமே இல்லாத அற்புதமான கவிதையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த உலகம் இன்னும் சற்று சந்தோஷமாக இருக்க உன் கவிதை காரணமாக இருக்கும்.''

"I have never come across a single lover, man or woman created poetry, for the simple reason that they are so contented."

"ஏன் போன் பண்ணவில்லை என்று கேட்டிருக்கிறாய் நம் இருவராலும் கொஞ்ச நேரம் பேசுவதென்பது சாத்தியமில்லாமல் இருக்கிறது. மணிக்கணக்கில் பேசி வார்த்தைகளில் நம் சக்தியை வீணடிக்கிறோம்.''

"There is not a single moment to enter into existence. Though we are not seeing or talking, that feeling of grounding in whole being will do man."

"உன் கவிதைகளைப் படிக்கும்போது நீ கடவுளால் அசீர்வதிக்கப் பட்டவன் என்று தோன்றுகிறது. பரவச உணர்வைத் தவிர வேறு எதையுமே நான் உணரவில்லை. உன்னை அணைத்துக்கொள்ள வேண்டும் போல் தோன்றியது. துவேஷத்தினால் சூழப்பட்ட இந்த உலகில் அன்பைத் தவிர வேறு எதையுமே அறியாத சிருஷ்டிகளை நீ வழங்கிக் கொண்டிருக்கிறாய்...''

"உன் கடிதங்களைப் படிக்கும்போது 'நீ என்னைப் பற்றி நினைக்கும்போதெல்லாம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு விடுகிறாய்' என்று தெரிகிறது. அந்தத் துன்பம் வேண்டாமே... எனக்கு உன் நினைவு அப்படியில்லை. என் கனவில் கூட நீ வந்துவிடுகிறாய். அதனால்தான் நீ என்னுடன் இல்லாததையே என்னால் உணர முடியவில்லை. எப்போதும் நீ என் அருகில் இருப்பது போலவே உணர்கிறேன்.''

"நம் வாழ்விலிருந்து ஒருவர் காணாமல் போனால் அந்த இடத்தை வேறு யாராலும் இட்டு நிரப்ப முடியாது. அந்த இடம் எப்போதும் வெற்றிடமாகவே இருக்கும்.''

"இங்கே கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் தொடங்கி விட்டன. சென்ற ஆண்டைப் போல் இந்த ஆண்டும் பனி விழும் என்ற நம்பிக்கையோடு மக்கள் காத்திருக்கிறார்கள்...''

11

ஒரு இரவு நேரத்தில் அடர்ந்த கானகம் ஒன்றினுள் சென்றுகொண்டிருந்த அவனை பயம் பீடித்துக் கொண்டது. இலைகள் சலசலத்தால் பயம். காற்றின் சப்தம் பயம். மான் துள்ளி ஓடினால் பயம். உடனே அவன் பகல் பொழுதுகளில் தியானம் செய்துவிட்டு இரவு நேரங்களில் மட்டுமே பயணம் செய்யத் துவங்கினான். ‘‘பயத்தைக் கண்டு பயந்து ஓடுவதை விட அதை நேரடியாகச் சந்தித்துப் பார்க்கலாம் என்று நினைத்தேன்; அதன்படியே தொடர்ந்து இரவிலேயே பயணம் செய்து, எனது பயத்தை நேரடியாக எதிர்கொண்டு அதிலிருந்து விடுபட்டேன்’’ என்று பின்னாளில் தனது சீடர்களிடம் கூறினான் ததாதகன்.

‘‘எனக்காக நீ ஒரு குழந்தை பெற்றுக்கொள்வாயா?’’ என்று கேட்டதும் திடீரென்று பாரிஸிலிருந்து வந்து நின்றாள் செலின். அவனால் நம்பவே முடியவில்லை. இப்படியுமா இருப்பாள் ஒரு பெண்? ‘‘ஒரு குழந்தை என்ன; ஒன்பது குழந்தை கூடப் பெற்றுக்கொள்ளலாம்’’ என்றாள்.

‘‘இரண்டு அதீதங்களின் சேர்க்கை அற்புதத்தையே நிகழ்த்தும் என்று உனக்குத் தெரியுமா? அதனால்தான் நீ குழந்தை வேண்டும் என்று கேட்டதும் ஓடி வந்துவிட்டேன்.’’

அப்போது மந்தவெளியில் ஒரு புறாக்கூண்டு போன்ற அறையில் குடியிருந்தான் அவன். அவள் இன்னமும் அப்படியேதான் இருந்தாள். ஒரு முத்தத்திற்காக ஏதோ வன்புணர்ச்சி செய்வது போல் அவளுடன் போராட வேண்டியிருந்தது.

‘‘முத்தத்துக்குப் பேர் பெற்ற ஃப்ரான்ஸில் வளர்ந்த நீயா இப்படி இருக்கிறாய்? என்னிடம் அப்படி என்ன உனக்குக் கூச்சமும் வெட்கமும்?’’

‘‘இதே கேள்வியை நீ பாரிஸில் கேட்டபோது நான் பதில் சொல்லவில்லை. இப்போது சொல்கிறேன். முத்தம் கொடுத்தால் அது கலவியில் முடிய

வேண்டும். அதற்கு நீ உத்தரவாதம் தர முடியுமா?''

அது இன்னொரு பிரச்சினை. அவளுடைய முழுமையான ஒத்துழைப்பு இல்லாமல் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. வேலை செய்ய வேண்டிய நேரத்தில் அவனுடைய சாதனம் வேலை செய்ய மறுத்தது. அவளுக்கும் அந்த எலிப்பொந்து பெரும் துன்பமாக இருந்தது. எலிப்பொந்து என்றால் அளவில் மட்டும் அல்ல; அங்கே வாழும் நூற்றுக்கணக்கான எலிகளும் காரணம். சின்ன சைஸில் எக்கச்சக்கமான சுண்டெலிகள் அவனைப் பற்றியோ அவனைப் பார்க்க வரும் நண்பர்களைப் பற்றியோ எந்தக் கவலையும் இல்லாமல் அந்த அறையில் சர்வ சகஜமாக ஓடி விளையாடிக்கொண்டிருந்தன. அவன் படுத்திருக்கும்போதே அவன் கை மீதும் கால் மீதும் ஏறி அமர்க்களம் செய்தன.

எலிப்பொந்தில் ஒன்றும் முடியவில்லை என்று ஒருநாள் இருவரும் ஒரு நட்சத்திர ஓட்டலுக்குச் சென்றார்கள். ஒரு ஓட்டலில் கூட அவர்களுக்கு அறை கிடைக்கவில்லை. பிறகு வேறு மாதிரி திட்டமிட்டார்கள்: முதலில் அவன் போய் அறை எடுத்துக்கொள்ள வேண்டியது. சிறிது நேரம் கழித்து செலின் போய்ச் சேர்ந்துகொள்வது. அதன்படியே செலின் அறைக்கு வந்தாள். அந்த ஊரின் மிகப் பெரிய ஐந்து நட்சத்திர ஓட்டல். அவள் வந்து சேர்ந்ததும் அறையின் மின்சாரம் தடைப்பட்டு விளக்குகள் அணைந்தன. ஆனால் வெளியே வந்து பார்த்தால் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. வரவேற்பறைக்கு போன் செய்தான். உடனே ஒரு ஆள் வந்து என்னவோ செய்தான். மின்சாரம் வந்தது.

ஆனால் அந்த ஆள் சென்று ஐந்து நிமிடத்துக்கெல்லாம் வரவேற்பறை—யிலிருந்து அவனுக்கு போன் வந்தது. அவன் அறை எடுத்தது அவன் ஒருவனுக்காக. ஆனால் இப்போது அங்கே ஒரு பெண் இருக்கிறார். அதற்கு அனுமதி இல்லை. காரணம், அப்போது இரவு எட்டு மணி.

''அப்படியானால் பகல் எட்டு மணி என்றால் வரலாமா?'' என்று கோபத்துடன் கேட்டபோது ''தாராளமாக'' என்று வெட்கமில்லாமல் சொன்னான் அந்த வரவேற்பாளன்.

''என்னை என்ன ப்ராத்தல் என்று நினைத்து விட்டானா?'' —என்று கத்தியபடி வெளியேறிவிட்டாள் செலின். எலிப் பொந்துக்குத் திரும்பியதும் ''பேசாமல்

நானே ஒரு ரிஸார்ட்டை வாங்கிவிடலாம் என்று பார்க்கிறேன்'' என்றாள். அவளாவது ஓட்டலில் தங்கியிருப்பாள் என்று பார்த்தால் திருவான்மியூரில் ஒரு வீட்டில் இருந்தாள். வீட்டில் வேறு யார் இருக்கிறார்கள்? ம்ஹூம், மூச். அவளைப் பற்றி எந்த விபரமும் தெரியவில்லை.

எல்லாவற்றுக்கும் அவள் வங்கி அட்டைக்குப் பதிலாக பணமாகக் கொடுத்துக் கொண்டிருந்ததும் ஓட்டல்காரர்களின் சந்தேகத்துக்கு ஒரு காரணமாக இருக்கலாம். அவனுடன் சுற்றும்போது ஆகும் செலவு அவ்வளவுக்கும் பணமாகவே கொடுத்தாள். இதற்கெல்லாம் வங்கி அட்டையைப் பயன்படுத்த முடியாது என்று சொல்லிவிட்டாள்.

ஒருநாள் அந்த ஊரின் பிரபலமான பீச் ரிஸார்ட்டில் எக்கச்சக்க—மான வாடகையில் அறை எடுத்துக்கொண்டு சென்றார்கள். அங்கேயும் ஒன்றும் நடக்கவில்லை என்றதும் இருவருமே சோர்ந்து போனார்கள். பேரழகியாக இருந்த அவள் படுக்கையில் சிறு குழந்தையைப் போல் இருந்தாள். வன்புணர்ச்சி செய்வதுபோல் செக்ஸ் வைத்துக்கொள்ள முடியுமா என்ன? மட்டுமல்லாமல், செக்ஸில் அவன் எப்போதும் வாங்குபவனாக மட்டுமே இருந்திருக்கிறானே ஒழிய வழங்குபவனாக இருந்ததில்லை. காம தேவதையைப் போல் இருந்த அவளைப் புணர்வதற்கு ஆயத்தமாவான்.

ஆனால் அவன் சிறு வயதிலிருந்தே பார்த்துப் பார்த்து சலித்துப்போன தமிழ் சினிமா கற்பழிப்புக் காட்சிகளைப் போல் அவளைத் துகிலுரிந்து, அவளுடைய வெட்கம் களைந்து, ஆட்டத்துக்குக் கொண்டுவருவதற்குள் அவனுடைய உறுப்பு தளர்ந்து போனது.

அதுவாவது பரவாயில்லை; பெண்ணும் பெண்ணும் உறவு கொண்டு உச்சம் காணவில்லையா; அதுபோல் ஆணுறுப்புக்குப் பதிலாக நாக்கையோ விரலையோ பயன்படுத்தலாம் என்றால் அதையெல்லாம் கிட்டவே சேர்க்க மாட்டேன் என்று சொல்லி மறுத்தாள். யாரிடமும் சொன்னால் நம்பக்கூட மாட்டார்களே என்று தோன்றியது அவனுக்கு. ஒவ்வொரு முறையும் அடிவயிற்று வலியோடு அரைகுறையாக முடிந்தது அவர்களின் கலவி முயற்சி.

ஒருநாள் 'எஸ்கேப்' என்ற பாருக்கு அவளோடு சென்று வெறும் கோக்கை மட்டுமே குடித்துக்கொண்டிருந்தான். அந்த ஊரின் மூலையில் இருந்த

நட்சத்திர ஓட்டலில் இருந்தது அந்த பார். ஜோடிகளுக்கு இருட்டான ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு மூலையைத் தேர்ந்தெடுத்து அமர்ந்துகொண்டார்கள். வெறும் குளிர்பானங்கள் மட்டும் எடுத்து வரச் சொன்னான். முதலிலேயே சிப்பந்திக்கு 200 ரூ. டிப்ஸ் கொடுத்ததும் அதற்கு மேல் அவன் அந்தப் பக்கமே வரவில்லை. ஆனால் புகை பிடிப்பவர்களுக்கான பகுதிக்குச் செல்ல அவர்களைக் கடந்துதான் செல்ல வேண்டும். ஆனால் அதிர்ஷ்டவசமாக யாரும் அவர்களைக் கண்டுகொள்ளவில்லை. சினிமா ஆட்கள் வரும் இடம் என்பதால் கூட இருக்கலாம்.

‘‘நீ குடிக்காமல் இருப்பதற்கு ரொம்ப நன்றி’’ என்றாள்.

‘‘உன் பக்கத்தில் இருப்பதே போதை; பிறகு எதற்கு இன்னொரு போதை?’’

மறுநாள் வேறொரு பப்பில் சந்தித்தபோது சொன்னாள், முந்தின இரவு வலி கொன்றுவிட்டது என்று. தூண்டப்பட்ட காமத்துக்கு வடிகால் இல்லாவிட்டால் பெண்களுக்கு அடி வயிறும் ஆண்களுக்கு விதைக் கொட்டையும் வலிக்கும். அடிக்கடி அவன் அனுபவிப்பதுதான். ஆனால் பெண்களுக்கும் வலிக்கும் என்று அவள் சொல்லித்தான் தெரிந்தது.

ஒருநாள்கூட அவள் எதற்காக வந்தாளோ அதைச் செய்ய வாய்க்க—வில்லை. ஒன்று, அவனுடைய எலிப்பொந்தில் அவள் எலிகளுக்குப் பயந்தாள். அல்லது, ஓட்டல்காரர்கள் — ஜோடியைப் பார்த்து பயந்தார்கள். மாறாக, எல்லாம் ஒழுங்காக அமைந்தால் அவனுடைய சாதனம் மக்கர் பண்ணியது.

‘‘இந்த ஊர் ஒரு தண்டம். நீ பாரிஸுக்கு வா, கொண்டாடலாம்’’ என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

பதிலுக்கு அவன் ஒன்றும் பேசவில்லை. எப்போதும் பர்ஸில் கத்தை கத்தையாக பணத்தை வைத்திருக்கும் இவள் யார்? 20 வயதுப் பெண்ணுக்கு ஏது இவ்வளவு பணம்? ஒருமுறை இவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு ‘‘இந்த ஊரில் வெளியே செல்வது ஆபத்து’’ என்றான் அவன். பதில் ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள். ‘நான் யார் தெரியுமா?’ என்று கேட்பது போல் இருந்தது அவள் சிரிப்பு.

யார் இவள்? இந்த ஊர் என்றால் ஏதோ ஒரு அரசியல்வாதியின் மகள் என்று நினைக்கலாம். இவளோ பாரிஸ். ஒருவேளை யாராவது மா·ஃபியா ஆளின் மகளா? அதெல்லாம் தென்னமெரிக்காவில்தானே? ·ஃப்ரான்ஸ் போன்ற தேசத்தில் அதெல்லாம் உண்டா? இப்படியெல்லாம் யோசித்துப் பார்த்து விட்டு பிறகு அது பற்றி நினைப்பதையே விட்டு விட்டான்.

அவள் பாரிஸ் கிளம்பிச் சென்றதும் அவன் எழுதிய கவிதை இது:

நூற்றாண்டுகளின் பசி

இரைக்காகக் காத்துக்கொண்டிருக்கும்

வனமிருகம் நான்

நூற்றாண்டுகளின் பசி

என் தேகமெங்கும் தீயாய்

கனன்று கொண்டிருக்கிறது

இரவும் பகலும்

பருவ காலங்களும்

வந்து போகின்றன

என் மௌன உறுமலில்

வனவிருட்சங்கள்

நடுக்கமுற்று சிலிர்க்க

பட்சிகள் ஓலமிடுகின்றன

என் இரை

என்னை நோக்கி

வந்துகொண்டிருப்பது

எனக்குத் தெரியும்

இரையின்

மாமிச வாடை

நாசியைத் துளைக்கிறது

இரையே

விரைந்து வா

உன் குரல்வளையில்

என் பற்கள் பதியும் போது

உன் கண்களில் தெரியும்

பீதியும் உயிர்த்தாபமும்

கண்டு நான்

பரவசம்

கொள்ள வேண்டும்

உன் குருதி நக்கி

என் விடாய் தீர வேண்டும்

உன் மாமிச ருசியின்

ஞாபகம் கொண்டு

வனதேவதைகளிடமும்

விருட்சங்களிடமும்

புலம்புகின்றேன்

அதைக் கேட்டு

வனதேவதைகளிலொன்று

சொன்னது நான்தான் உன்

இரையென

உன் மாமிச வாடையறிந்த

எனக்கா தெரியாது

தேவதைகளின் தந்திரம்

அவ்விடம் அகன்று

மலையடிவாரம் வந்தேன்

நட்சத்திரங்களுக்குக் கதை

சொல்லிக்கொண்டிருந்த

ஆதிக்கிழவியொருத்தி

என்னை நிறுத்தி

என் முன் ஜென்மத்து

ஞாபகப் படுக்கையில்

கிடத்தினாள்

கடும்பாலையில்

தனிமை கொண்டிருக்கும்

சர்ப்பம்

வானிலிருந்து வீழுமொரு

தாரகை

செம்பருத்தி மலர்

எருமையின் முதுகுப் புண்ணில்

நெளியும் புழு

தர்மனைத் தொடரும் நாய்

தீர்க்கதரிசியை முத்தமிட்டுக்

காட்டிக் கொடுப்பவன்

மகனால் ஆண் குறி அறுத்தெறியப்பட்டுக்

கதறும் ஒரனோஸ்

ராணி புணர்ந்த புரவி

ஆனை அடித்த பாகன்

சமரிலே புறமுதுகிட்டு ஓடும்

படைவீரன்

கலவியறியாத நிதம்பம்

உறங்கியறியாத அக்கினி

பெயர் அறியாத பித்தனென

எத்தனையெத்தனையோ!

கண்டு வீறிட்டலறி

ஞாபக இரைச்சல்

துரத்தி வர

மாறுவேடம் பூண்டு

வனத்தின் இருளில்

கரையலானேன்

இரையே

என்னை அடையாளம்

கண்டு கொள்

என் மணம் சுவாசித்து...

(கிரேக்க புராணத்தில் ஆகாயத்தின் கடவுளாக விளங்குபவன் Ouranos. இவன் பூமியின் கடவுளான Gaiaவின் மகள் கணவனுமாவான். இவனுக்கு கெயாவின் மூலம் பிறந்த குழந்தைகள் டைடன்கள். இந்த டைடன்களில் இளையவனான க்ரொனோஸ் தன் தந்தை ஒரனோஸின் ஆண்குறியை அறுத்தெறிந்து தன் தாயின் சபதத்தைப் பூர்த்தி செய்கிறான்.)

12

எதையெல்லாம் சம்பாதித்தேனோ அதெல்லாம் என்னிடம் இல்லை; நான் எதையெல்லாம் கொடுத்தேனோ அது என்னிடமே இருக்கிறது.

— குர்ஜீஃப்

அந்த ஊரில் அவனுக்கு ஒருமுறை டைஃபாய்ட் காய்ச்சல் கண்டது. அந்தக் காய்ச்சலிலும் அவன் அரை டஜன் கவிதைகளை எழுதித் தபாலில் அனுப்பி வைத்தான். தபாலாபீஸ் போய் வருவதற்குள்ளேயே அவனுக்கு மயக்கம் வந்துவிட்டது. அந்தக் கவிதைகளைப் படித்துவிட்டு அவள் அவனுக்கு இப்படி எழுதினாள்:

முதலில் உன்னைக் கட்டிப் பிடித்து ஒரு முத்தம் தருகிறேன். உனக்கா டைஃபாய்ட்? எங்கே இருந்து வருகிறது உனக்கு இத்தனை சக்தி? உன் எழுத்தைப் படித்தாலே உற்சாகம் தானாகப் பொங்குகிறது.

உற்சாக மிகுதியோ என்னவோ, அடுத்த கடிதம் அவளுடைய திருமணச் செய்தியைத் தாங்கியிருந்தது.

மன்னித்து விடு... தவிர்க்க முடியவில்லை. என் வாழ்க்கை இரண்டு வெவ்வேறு தளங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விரைவில் உன்னைச் சந்திக்க வருகிறேன். Hope you will have a taste of unknown.''

''என்ன இது மன்னிப்பு அது இது என்று. நீ என் சுவாசத்தோடு கலந்தவள் ஆயிற்றே?'' என்று பதில் போட்டாலும் அதற்குப் பிறகு அவனால் அவளோடு பழையபடி இருக்க முடியவில்லை.

''என் திருமணத்தால் நமக்கு என்ன பிரச்சினை என்று நீ இவ்வளவு பதற்றமடைகிறாய்? ஒரு பெண்ணின் உறவைப் பற்றித் தெரிந்து கொள்பவர்களின் பட்டியலில் கடைசியில் இருப்பது அவள் கணவனின் பெயர்தான் என்று உனக்குத் தெரியாதா? நீ ஒன்றும் என் கணவன் அல்லவே?''

அவள் சொன்னபடியே ஆறு மாதம் சென்று இந்தியா வந்தாள். அப்போதும் அவன் மந்தவெளியில் எலிப்பொந்தில்தான் இருந்தான். அப்படி வந்தவள் ஒருநாள்— சொல்லாமல் கொள்ளாமல் காணாமல் போனாள்.

கிருஷ்ணா,

பொதுவாக கதாபாத்திரங்களை நாவலின் இறுதிப் பகுதிகளில் கொன்று விடுவதுதான் என் வழக்கம் என்று உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இந்த முறை அப்படி நடக்கவில்லை. செலின் தானாகவே காணாமல் போனாள். ஒரு நாள் பீச்சுக்குச் சென்று வருகிறேன் என்று சென்றவள் அதற்குப் பிறகு திரும்பவே இல்லை. எப்போதும் போல் காலையில் ஐந்து மணிக்கு எழுந்து மெரினாவுக்குச் செல்வது இருவரின் வழக்கம். ஆனால் முந்தின இரவு நீண்ட நேரம் கண் விழித்து எழுதியதால் கொஞ்சம் அசந்து விட்டான். அவனது செவிமடல்களில் அவள் முத்தமிட்டுச் சென்றது மட்டும் கனவு போல் இருந்தது.

வழக்கம்போல் ஏழு மணிக்குத் திரும்ப வேண்டும். ஒன்பது ஆகியும் திரும்பவில்லை. மெரினாவுக்கு ஓடிப் போய் மதியம் வரை தேடினான். யாரிடம் சொல்வது என்றும் தெரியவில்லை. போலீஸுக்கும் போக முடியாது. அவன் ஒரு கிரிமினல், பெண்களைக் கற்பழித்துக் கொன்று விடுபவன், ஒரு காமக் கொடூரன், சைக்கோ என்றெல்லாம் அவனைப் பற்றிய செய்திகளை அவனுடைய நலம் விரும்பிகள் பரப்பியிருந்ததால் இப்போது இதற்காக போலீஸிடம் சென்றால் அவனைத்தான் கைது செய்து உள்ளே தள்ளுவார்கள். அவனுடைய எழுத்தே அவனுக்கு எதிராக சாட்சி சொல்லும். அதுவும் சமீபத்தில்தான் அவன் இதே போன்ற ஒரு கதையை எழுதியிருந்தான். அவனுடைய வாழ்வின் மிகப் பெரிய சிக்கல் என்னவென்றால், அவன் ஒரு விஷயத்தை முன்கூட்டியே எழுதி விடுகிறான் என்பதுதான். பிறகு அதே கதை கொஞ்சம் ஏற்ற இறக்கங்களுடன் அவனுடைய வாழ்விலும் நடந்து தொலையும். இந்தப் பெண்ணின் வயது வேறு சரியாகத் தெரியவில்லை. இருபதா, பதினெட்டா அல்லது அதற்கும் குறைச்சலா? சில பப்களில் அவளை ‘அண்டர் ஏஜ்' என்று சொல்லி அனுமதி மறுத்ததும் அவனுக்கு ஞாபகம் வந்தது. பதினெட்டுக்குக் குறைச்சல் என்றால் தொலைந்தான். 16 வயதுப் பெண்ணுக்கும் 56 வயது ஆணுக்கும் இடையிலான ஒரு காதல் பற்றி

சமீபத்தில் அவன் எழுதியிருந்த கதையைப் படித்துவிட்டு 'பீடஃபைல் பீடஃபைல்' என்று கத்திக்கொண்டிருக்கும் மனித நேய விமர்சகர்களுக்கு இதை விட தக்க தருணம் வாய்க்கப் போவதில்லை. பழகும்போது வயதுச் சான்றிதழைப் பார்த்து விட்டா ஒரு பெண்ணுடன் பழக முடியும்? இந்தப் பெண் வேறு தன்னைப் பற்றி எந்தத் தகவலையும் அவனிடம் சொன்னதில்லை.

“உன் அப்பா யார்?”

“அதைப் பற்றி உனக்கு என்ன? அதைத் தெரிந்துகொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?”

இரண்டு மூன்று நாட்கள் பீச்சிலேயே பழியாய்க் கிடந்தான் தர்மா. ஒன்றுமே புரியவில்லை. யாராவது அவளை வன்கலவி செய்து கொன்று போட்டுவிட்டார்களோ என்றும் பயமாக இருந்தது. அதெல்லாம் டெல்லியில்தானே நடக்கும், இன்னும் இந்த ஊர் அந்த அளவு ஆகவில்லையே என்றும் நினைத்துக்கொண்டான். அல்லது, பணத்துக்காக அவளைக் கடத்திவிட்டார்களா? அப்படியிருந்தால் பணத்தை அபகரித்துக்கொண்டு அவளைக் கொன்று விடுவார்களே? அந்தக் கவலை வந்ததும் இரண்டு மூன்று நாட்கள் லோக்கல் தினசரிகளை வாங்கிப் பார்த்தான். ஒரு அழுகிய பிணம், பாலிதீன் பேப்பரில் சுருட்டி வீசப்பட்ட ஒரு பிணம் என்று இரண்டு செய்திகள் கிடைத்தன. படித்ததில் அது செலின் அல்ல என்று தெரிந்தது. இரண்டுமே பெண்களின் பிணங்கள்தான் என்றாலும், 30 வயதைத் தாண்டியவையாக இருந்தன. நிம்மதி.

அப்புறம் திடீரென்று ஞாபகம் வந்து அவளுடைய பையில் பாஸ்போர்ட்டைத் தேடினான். பர்ஸ், கைப்பை, பாஸ்போர்ட் மூன்றுமே இல்லை என்றதும்தான் ஆசுவாசம் அடைந்தான். ஆனால் ஏன் இப்படி சொல்லாமல் ஓடினாள் என்று திகைப்பாக இருந்தது. அவளுடைய முகவரிக்குப் பல கடிதங்கள் எழுதினான். பாரிஸில் அவனுக்குக் தெரிந்த இரண்டு மூன்று நண்பர்களை விசாரித்தான். அவர்களுக்கு அவளைத் தெரிந்திருக்கவில்லை.

எனவே என்னுடைய வழக்கப்படி நாவலின் கடைசியில் அல்லாமல் இப்போதே இந்தக் கேரக்டர் காணாமல் போனதற்கு இதன் ஆசிரியனாகிய நான் காரணம் அல்ல. ஆனால் தர்மா செலினின் உடலிலும் செலின் தர்மாவின் உடலிலும்

மாற்றி மாற்றி எழுதிய கவிதைகளை இதோடு இணைத்துவிட்டேன். நீ சொல்லியபடி கவிதைகளை தனித் தொகுதியாகப் போட வேண்டாம். ஏனென்றால் காம குரோதங்களையும் எண்ணிக்கையில் அடங்கா ஆசாபாசங்களையும் கொண்ட மனித உயிர் கடைசியில் ஒரு பிடி சாம்பலாக மாறிவிடுவதைப் போல் இரண்டு மனித உயிர்களின் காதல் இப்படி சில கவிதைகளாக எஞ்சிவிட்டது. அவற்றை செலினின் கதையோடு சேர்ப்பது தான் நியாயம்.

சாரு

வனகுமாரனே வா...

உன்னை

உன் எழுத்துக்களில் தேடினேன்

வனத்தின் குரலாக இருக்கிறேன்

என்றொருமுறை

என்னிடம் சொல்லியிருந்தாய்

வனமோ நிசப்தமாயிருந்தது

பிறகு

மலையடிவாரங்களிலும்

நதிப்படுகைகளிலும்

கடலின் ஆழங்களிலும்

தேடிக் களைத்தேன்

நிலவில் நீ இருப்பதாய்

சொப்பனந்தோன்ற

நிலவைத் தேடியலைந்தேன்

இரைச்சலும் புழுதியும்

சூழ

வன மிருகங்களும்

சர்ப்பங்களும்

துரத்த

பயங்கொண்டு ஓடினேன்

கோட்டைச் சுவர்களும்

மதில்களும் எதிர்ப்பட

காலப் பெருவெளியில்

இலக்கற்றுத் தேடினேன்

நிலவை மறந்தேன்

உன்னையும் மறந்தேன்

உன்மத்தம் பிடித்து

ஊரூராய்ச் சென்றபோது

ஒளித்துகளாய் எதிர்ப்பட்ட நீ

நிலவைத் தேடியவளே

என அழைத்து

நான் நிலவின் பின்னாலே இருக்கிறேன்

என்றாய்

முற்பிறவிகளின் ஞாபகம் தொற்ற

நிலவுத் தேடல்

தொடங்கியது மீண்டும்

வழியிலொரு

குட்டையில் தென்பட்டது நிலவு

குட்டையில் தேடாதே

ஆகாயத்தில் இருக்கிறது நீ தேடிய நிலவு
என்றான் ஒரு பாரசீக
வழிப்போக்கன்
நிலவின் பின்னாலிருந்து
உன் நகைப்பொலி கேட்க
சிரத்தை உயர்த்திப்
பார்க்கலானேன்.

***

கடற்கரை

கடற்கரையில்அமர்ந்திருக்கிறது
காதல் ஜோடி
சுண்டல் வாங்கச் சொல்லி
அந்த அக்காவைக் கெஞ்சுகிறான்
சுண்டல்காரச் சிறுவன்
சுண்டலைத் தொடர்ந்து
மல்லிப்பூ வாங்கச் சொல்லி
வாக்குவாதம் செய்கிறாள் பூக்காரி
அவளை அனுப்பிவிட்டுக்
கொஞ்சமாய் முத்தத்தில் நுழைந்த போது
சோளி சோசியம் சொல்ல
வந்தவள் ஒரு மத்திம வயதுக்காரி
அடுத்து வந்தது

அரவானி ஆறுபேர்

அதில் ஒருத்தி

ஆங்காரமாய் கை நீட்ட

அம்பது போட்டான் ஆடவன்

ஆங்காரம் அடங்காதது கண்டு

மேலும் அம்பது

போட்டதும் நகர்ந்தது

கூட்டம்

போலீஸ்காரன் வருவதற்குள்

போய் விடலாம் வா

என்று எழுந்தபோது

அவர்களின் பின்னே

அவ்வளவு நேரம்

கமுக்கமாய் இருந்த

ஆமையைக் கண்டு

அதிர்ச்சியில் அலறினாள்

அவள்.

***

வனமோகினியின் வாதை

இந்தக் கானகத்தில்

என் கால்தடம் பதியாத

இடமுண்டோ சொல்

என்று

செருக்குடன் கேட்ட

நீ

கொடுத்துத் தீராத

உன் முத்தங்களின்

ஈரம் காய்வதற்குள்

சென்று விட்டாய்

வனமோகினியின்

நாபிச் சுழியை

மறந்து விட்டு...

***

காலங்காலமாய்

காத்திருக்கும்

இந்த வனமோகினியின்

வாதை

தெரியுமா உனக்கு

***

காமாக்னியில்

வெந்து தணிகிறது

வனம்

***

இளநுங்கின் சுவை கூடிய

என் நிதம்பத்தில்

ஆயிரம் சூரியனின்

காமம் தகிக்கும்

உன் நாவினால் தீண்டு

என் மாமிசத்தின்

அடி ஆழங்களில்

உன்னை

இன்னும் ஆழமாய் செலுத்து

***

நாய்கள்

கலவி கொள்ளலாமா

எனக் கேட்டாள்

இதுவரை

பேசியிராத

அந்தப்

பக்கத்து வீட்டுப்

பெண்

பித்தமோ

சித்தம் கலங்கியதோ

என வியந்தேன்

பிறகுதான்

தெரிந்தது

அவளுடைய

பெண் நாய்

என்னுடைய

ஆண் நாயுடன்

கலவி கொள்ளலாமா

எனக் கேட்டாளென்று

நாய்கள் கொடுத்து வைத்தவை

***

ஏற்கனவே சொல்லப்பட்டது

வனமோகினியின் வாதை

இருக்கட்டும்

வனகுமாரனுக்கு ஒன்றும்

ஆகவில்லையா

எனக் கேட்டாள்.

‘நீ என்னுள் இருக்கிறாய்.'

அது ஏற்கனவே சொல்லப்பட்டது.

‘என் காதலைச் சொல்ல

எந்த மொழியிலும் வார்த்தையில்லை.'

அதுவும் ஏற்கனவே சொல்லப்பட்டது.

‘நீயே என் சொல்லாகவும்

மாமிசமாகவும்

சுவாசமாகவும்

இருக்கின்றாய்.'

அதுவும் ஏற்கனவே சொல்லப்பட்டது.

‘உனது நிர்வாண வெளியில்

திக்கற்று நடக்கின்றேன்

கனவிலும் நீ

நனவிலும் நீ தான்.'

எல்லாமே ஏற்கனவே சொல்லப்பட்டது.

'மலர் கடல் ஆகாயம்

நட்சத்திரம் குளம் குட்டை

மேகக்கூட்டம்

புல்லின் பனித்துளி

தவளைச் சத்தம்

பசுவின் குரல்

நத்தை

சிப்பி

காளான்

இரவு பகல்

நிலவின் தன்மை

வண்ணத்துப் பூச்சியின் காமம்

மான் மயில்

மரம் செடி கொடி

உடுக்கை எல்லாம்

எல்லாம் எல்லாம்

எல்லாம் நீயாக...'

அதுவும் ஏற்கனவே சொல்லப்பட்டது

'உன் மௌனம்

பெருங்கடல்களின் பேரிரைச்சல்

உன் ஒரு சொல்

கடல்பாறைப் படிவுகளின்

நூற்றாண்டுகளின் மௌனம்.'

இதுவும் சொல்லப்பட்டதே...

வார்த்தைகளில் தோல்வியுற்ற

வனகுமாரன்

கல்லாய் சமைந்துவிட்டான்

உன் பாதத்துளி பட்டு

உயிர் பெற்று எழ...

***

பற்றி எரிந்து கொண்டிருக்கிறது

கடல்

மரங்களும்...

பட்சிகளைக் காணவில்லை

***

உன்னை நினைக்கும்போது

ஒரு பாடல்

ஒரு நடனம்

முடிவில்லாக் கொண்டாட்டம்

***

என்றார் தபால்காரர்

கதவு தட்டப்பட்டது

ஜன்னலைத் திறந்து

யார் என்றேன்

தபால் என்றார்

தபால்காரர்

அலுப்புடன் சென்றேன்

அணில் கடித்த மாம்பழங்கள்

காக்கை போட்ட

இட்டிலித் துண்டு

மீன் முள்

மதில் மேல்

உறங்கும் பூனை

கலாவுக்குத் தபால்

என்றார் தபால்காரர்

கலா என்று

யாரும் இல்லையே

என்றேன் கலா

என்று யாரும் இல்லையா

என்றார்

பதில் சொல்லாமல் திரும்பினேன்

***

உன்னை

என் கவிதையாக

மொழிபெயர்த்துக்

கொண்டிருக்கிறேன்.

***

தியானம்

சாப்பிடப் போகலாமா என்று

கேட்டேன்

சரி என்றான் நவீன்

இரவு எட்டரைக்கு

சிட்டி செண்டர் வாசலில்

சந்தித்துக்கொண்டோம்

எலிவேட்டரில்

சங்கர ராம சுப்ரமணியன்

ஹலோ சொல்லி

கை கொடுத்தார்

பக்கத்தில் ஒருவர்

ஈழத்து எழுத்தாளர் என்றார்

பெயர் சொன்னார்

பெயர் பதியவில்லை

இன்னொரு முறையும்

சொன்னார்

ரொம்ப அந்நியமாகத்

தெரிந்தார் சங்கர ராம

சுப்ரமணியன்

எலிவேட்டரில் ஏறி

அராபியக் குடில் சென்று

இரண்டு சார்க்கோல் சிக்கன்
சொன்னேன்
பத்து நிமிடம் ஆகும்
இடம் தேடி அமர்ந்தோம்
பெண்களை நோட்டமிட்டேன்
ஒல்லிப் பிச்சான் பெண்கள்
தடித்த பெண்கள்
உயரமான பெண்கள்
குள்ளமான பெண்கள்
முலை பெருத்த பெண்கள்
முலை சிறுத்த பெண்கள்
பெண்கள் பெண்கள்
பெண்கள் பெண்கள்
கோடை விடுமுறையில்
கூட்டம் அதிகம்
குடில்காரர் கை அசைக்க
எழுந்து போய் வாங்கி
வந்தார் நவீன்
மறுபடியும் போய் இரண்டு
பெப்ஸி வாங்கி வந்தார்
மறுபடியும் போய் டிஷ்யூ
பேப்பர் எடுத்து வந்தார்
மின் சிக்கனத்தில்
புழுங்கி வியர்த்தது

சாப்பிட்டு எழுந்தபோது

புன்னகைத்தார் ஒருவர்

எங்கோ பார்த்த முகம்

ஞாபகத்தில் தேடினேன்

தமிழ்ப்பட இயக்குனர்

வெளியே வந்து

பைக்கை எடுத்தார் நவீன்

ஆட்டோ பிடித்து

வீட்டை எட்டியபோது

நினைவில் தட்டியது

ஒரு மணி நேரமாய்

ஒரு வார்த்தை

பேசவில்லை

நவீனிடம்

***

கடற்கரையில்

எதிர்வந்த

இளம்பெண்ணை

தாகித்தது மனம்

பக்கத்தில் ஒரு

மூதாட்டி

மாமிச தாகம்

மாமிசத்தாலே

அடங்கியது

***

நீ இருந்தாய்

என்றே நினைத்துக்

கொண்டிருந்தாய்

இருந்தாயா நீ

***

காமப் பரவசம்

கண்களில் மின்னித்

தெறிக்க நீ

பிதற்றிய வார்த்தைகள்

இன்னும் எழுதி

முடிக்கப்படாத

கவிதை

***

கண்விழித்

தெழுந்தபோது

காணவில்லை

நீ

***

தினந்தோறும்

காலை ஐந்தரை மணிக்கு

மெரினா காந்தி சிலைக்குப்
பக்கத்தில்
பார்க்கின்றேன் அந்த நடிகரை
சந்தித்ததில்லை கண்கள்
இன்று சந்தித்த வேளையில்
நெற்றி வியர்வை துடைக்க
உயர்த்திய கையை
வணக்கமென்றெண்ணி
அவரும் கை உயர்த்த
கையைத் தாழ்த்திக்கொண்டு
நகர்ந்தேன் பதற்றமாய்
எதிரே வந்த வேறொருவர்
கை உயர்த்தினார்
அவருக்கும் வியர்வைதான்
என்றெண்ணி வேகமாய் நடந்த —————
என்னையழைத்தது
அவர் குரல்
இந்த வணக்கம்
எனக்கான வணக்கம்
காந்தி சிலையில்
அமர்ந்திருந்த காக்கைகளுக்கு
வணக்கம் சொல்வதில்
இவ்வளவு பிரச்சினை இருக்குமோ?

13

“எனக்கான ஆகாரம் எது?” என்று கேட்டான் அவன். அதற்கு அவர்கள் “நாய்களுக்கும் பட்சிகளுக்கும் என்னவெல்லாம் உணவாகக் கிடைக்கிறதோ அதெல்லாம் உனக்கும் உணவாகும்” என்றார்கள்.

சாண்டோக்ய உபநிஷத்:

அத்தியாயம் 5, ஸ்லோகம் 2

சில தினங்கள் சக எழுத்தாளர்களிடமிருந்து கடன் வாங்கி சாப்பிட்டதில் கழிந்தது. அதற்குப் பிறகு அவனை அவர்கள் அவனைப் பார்த்ததுமே பதுங்க ஆரம்பித்தார்கள். கையில் காசு கிடைக்கும்போது தக்காளிப் பழங்களை வாங்கி வைத்துக் கொண்டான். பசி தாங்க முடியாமல் போகும்போது அந்த அழுகல் தக்காளிகளை சாப்பிட்டு சமாளித்தான்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்கிறார்கள். ஆனால் அவனுக்கு அப்படிப் போகவில்லை. பசியோடு காமமும் கொழுந்துவிட்டு எரிந்தது. அவனுடைய எலிப் பொந்துக்குக் கீழ் வீட்டில் இரண்டு பருவக் குமரிகள் இருந்தார்கள். ஒரு குமரி பள்ளியில் படித்துக் கொண்டிருந்—தாள். இன்னொருத்தி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். இரண்டு பேரும் குளித்துவிட்டு ஒவ்வொருத்தியாக மாடிக்கு வந்து துணிமணிகளை உலர்த்துவார்கள். மெட்ராஸ் வெயிலில் எல்லாத் துணிகளும் மதியமே காய்ந்து விடும். அதற்குமேல் மறுநாள் காலையில் புதுத்துணிகள் போடும் போதுதான் இந்தத் துணிகளை எடுப்பாள்கள். தர்மாவுக்கு இது பெரிதும் வசதியாக இருந்தது, மாடிக்குச் சென்று அவள்களின் பேண்ட்டீஸை எடுத்து வந்து அதைக் கொண்டு கரமைதுனம் செய்து பேண்டீஸிலேயே பீய்ச்சி அடிப்பான். தினந்தோறும் இப்படி நடந்து கொண்டிருந்தது. இதைத்தானே போடுவாள்கள், எப்படித் தெரியாமல் போகிறது என்று அவனுக்குப் புதிராக

இருந்தது. எந்தக் கவலையும் இல்லாமல் மாடியில் தொடர்ந்து காய்ந்து கொண்டிருந்தன பேண்டீஸ்கள்.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டிருந்தது. ஒவ்வொருத்தியும் துணி உலர்த்துவதற்காக மாடியேறி வரும்போது நிர்வாணமாக நின்றபடி விறைத்து நீட்டிக் கொண்டிருக்கும் ஆண்மையை ஆட்டி ஆட்டி கரமைதுனம் செய்தான். அந்த இரண்டு பெண்களிடமிருந்தும் இதுகுறித்து எந்த எதிர்வினையும் இல்லை. இப்படிச் செய்தால் சில பெண்கள் காறித் துப்புவார்கள். இவர்கள் அப்படி எதுவுமே செய்யவில்லை. என்ன நினைக்கிறார்கள் என்றே தெரியாதபடி மர்மமான முகபாவனை தெரிந்தது. —மாணவியின் கண்களில் மட்டும் லேசான குறுகுறுப்பு இருந்தாற் போல் இருந்தது. ஒருவேளை அது அவனுடைய கற்பனையாகக்கூட இருக்கலாம்.

ஒருநாள் பனகல் பார்க்கில் அமர்ந்திருந்தான். சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகியிருக்கும். சக எழுத்தாளன்களிடம் பணம் கேட்டு வாங்கித் தின்று அந்த ஒரு வழியும் அடைந்து விட்டது. எல்லோரும் இவனைக் கண்டாலே ஓடுகிறார்கள். காப்பாற்ற வந்த காதலியும் காணாமல் போய் விட்டாள். பசியில் வயிறு வலித்தது. கண்களில் பூச்சிகள் ஓடின. தளர்ந்துபோய் படுத்துவிட்டான். அப்போது அவன் முகத்துக்குப் பக்கத்திலிருந்த காய்ந்துபோன புற்களை எடுத்துமென்று தின்ன ஆரம்பித்தான். மூத்திர நாற்றம் வந்தது. வாந்தி எடுத்தான். குடித்திருந்த தண்ணீர் வாந்தியாக வந்தது. கூடவே ரத்தமும் வந்தது.

பக்கத்தில் ஒரு சொறிநாய் காய்ந்து போன மனித மலத்தை நறுக் புறுக்கென்று சாப்பிட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த போது மனதில் ஓர் எண்ணம் தோன்றியது.

கூட்டமான பஸ் ஒன்றில் ஏறினான். ஸ்கூல் விட்ட நேரம். சீருடையுடன் மாணவிகள் கூட்டம் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது. ஃபுட் போர்டிலும் சில மாணவிகள் தொங்கிக்கொண்டிருந்தார்கள். நெருக்கியடித்து உள்ளே போனான். 50 வயது மதிக்கத்தக்க ஒருவன் ஒரு மாணவியை வசமாக வளைத்துக் கட்டி தேய்த்துக்கொண்டிருந்தான். தர்மா அவன் பக்கத்தில் போய் நின்றான். அந்த மாணவியின் முகத்தில் எந்த பாவமும் இல்லை. இவன்

இடியிடி என்று இடுப்பை ஆட்டித் தாக்கிக்கொண்டிருந்தான். அவளோ எதுவுமே நடக்காத மாதிரி எங்கோ பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த ஆள் சுற்றுப் புறத்தையே மறந்து ஏதோ ஒரு உலகத்தில் இருந்தான்

அந்த பர்ஸிலிருந்து நானூற்று சொச்சம் ரூபாய் கிடைத்தது. ஓல்ட் மாங்க் ரம்மும் சிக்கன் பிரியாணியுமாக நாலைந்து நாட்கள் கழிந்தன. காசு தீர்ந்ததும் அடுத்த முறை புதிய பனாமா பிளேடோடு சென்றான். ஓரிரு முயற்சிகளிலேயே தொழில் அனாயாசமாகக் கை வந்தது. ஒருநாள் வேறொரு திருடன் தர்மாவின் பேண்ட் பாக்கெட்டில் கை போட்டான். லேசாக குறுகுறுவென்று இருந்ததுமே அவன் கையைக் கெட்டியாகப் பிடித்தான் தர்மா. “இன்னாபா இப்டி கய்யப் புடிக்கிறே.... கய்ய எடு... பஸ்ல என்னா கூட்டம் பாரு” என்று முணுமுணுத்தபடியே கையை இவனிடமிருந்து உதறிக்கொண்டு பஸ்ஸில் வேகமாக முன்னேறிச் சென்றான் அவன்.

14

...போக நுகர்ச்சி என்பது நாய் பன்றி முதலிய உடல்கள் வாயிலாகவும் நரகங்களிலும் கூட அனுபவிக்கப்படுகிறது

அத்யாத்ம ராமாயணம்:
ஸர்கம் 4, ஸ்லோகம் 50

ஒருநாள் இரவு மொட்டை மாடியில் அமர்ந்து —அந்தப் பெண்களின் பேண்ட்டீஸில் கரமைதுனம் செய்து விந்தை வெளியேற்றிய பிறகு பெரிதாக அழுதான் தர்மா. அடக்க மாட்டாமல் கண்ணீர் விட்டுக் கேவிக் கேவி அழுதான். இந்த உலகத்தில் சரி பாதி பெண்கள் இருக்கிறார்களே; தனக்கென்று ஒரு பெண் கிடைக்கவில்லையே என்று மருகி மருகி அழுதான். கிடைத்த ஒரே பெண், ஆயிரம் பெண்களுக்கு சமதையான அழகி. பேரழகி. தெருவில் அவளோடு நடந்தால் ஆயிரம் கண் விழி பிதுங்கப் பார்க்கும். அப்பேர்ப்பட்ட அழகி கிடைத்தும் அவனால் அனுபவிக்க முடியவில்லை. தன்னுடைய பிரச்சினைதான் என்ன என்றும் அவனுக்குப் புரியவில்லை. தான் ஒரு பேடி என்றால் பஸ்ஸில் மட்டும் கடப்பாரை மாதிரி குத்திக்கொண்டு நிற்கிறதே? என்னதான் பிரச்சினை?

ஒரு பெண்ணைப் புணர்ந்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகிறது. எவ்வளவு பெரிய கொடுமை என்ற தன்னிரக்கத்தில் நீண்ட நேரம் அழுதுகொண்டிருந்தான். இடையில் வந்த செலின் மட்டுமே விதிவிலக்கு. அதையும் கலவியில் சேர்த்துக் கொள்ள முடியாது. ஒருமுறைகூட இருவரும் சரிக்கு சரியாக உச்சம் தொட முடிந்ததில்லை. வாஸ்தவத்தில் அவன் தன் நாக்கை ஒரு சர்ப்பத்தைப் போல் பயன்படுத்தக் கூடியவன். அதில் அவன் ஒரு

விற்பன்னன் என்றே சொல்லலாம்.— அவனால் நீண்ட நேரம் மூச்சைக் கட்ட முடியும் என்பதால் பல உச்சங்களுக்கு அவன் உத்தரவாதம். ஆனாலும் செலின் அதை அனுமதிக்கவே இல்லை. அதனாலேய அவனுக்குத் தன் வாய் வித்தையைக் காண்பிக்கும் வாய்ப்பும் இல்லாமல் போய்விட்டது.

தர்மா பாக்கெட் அடிப்பதை நிறுத்திய கதை ஒரு அபத்த நாடகத்தைப் போன்றது. ஒருநாள் வசமாகச் சிக்கிய பர்ஸ் ஒன்றை எடுப்பதற்கு அந்தப் பாக்கெட்டில் லேசான ஒரு சர்ஜரி தேவைப்பட்டதால் ப்ளேடை எடுத்தான். பார்த்தால் ப்ளேடைச் சுற்றியிருக்கும் தாள் இருந்தது. உள்ளே ப்ளேட் இல்லை. ப்ளேட் இல்லாத கவரை எப்படி வாங்கினான்; ப்ளேட் இல்லாததை எப்படி கடைக்காரரும் கவனிக்கவில்லை; இவனும் கவனிக்கவில்லை என்று ஆச்சரியமாக இருந்தது. என்ன தோன்றியதோ, ப்ளேட் கவரை அப்படியே தூக்கிப் போட்டு விட்டு பஸ்ஸிலிருந்து இறங்கிவிட்டான்.

ஜேப்படித் தொழிலில் ஒரு சுதந்திரம் இருந்தது. நாமே ராஜா. நாமே மந்திரி. யாருக்கும் அடி பணிய வேண்டியதில்லை. விரும்பினால் தொழில் செய்யலாம். இல்லாவிட்டால் வேண்டாம். ஒரே ஆபத்துதான். மாட்டிக்கொண்டால் பயணிகளிடம் தர்ம அடி வாங்க வேண்டும். போலீஸிடம் ஒப்படைத்தால் அங்கேயும் லத்தி அடி கிடைக்கும். அடி வாங்குவது பற்றி அவனுக்குக் கவலை இல்லை. அபீன் கடத்தியபோது இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் என்று அடிக்கடி நினைத்துக்கொள்வான்.

15

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

பரிசுத்த வேதாகமம்
மத்தேயு 11:28

ஒருநாள் மதியம் ஒரு மணி இருக்கும். நல்ல வெயில். பக்கத்தில் கச்சேரி ரோட்டில் இருக்கும் அஜ்மல் பிரியாணி கடையில் பிரியாணி சாப்பிடலாம் என்று போய்க் கொண்டிருந்தான். அப்போது பக்கத்திலேயே ஒரு கிழவி எறா எறா என்று கத்திக்கொண்டே வந்தாள். இந்த நேரத்தில் யார் எறா வாங்குவார்கள் என்று யோசித்துக்கொண்டே சற்று நின்று திரும்பிப் பார்த்தான். எழுபது வயது இருக்கும். கூடையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வர அவன் அருகே நெருங்கியதும் ‘யேசப்பா ஸ்தோத்திரம்' என்று களைப்புடன் சொன்னாள்.

அவன் அந்தக் குரலைக் கேட்காததுபோல் கச்சேரி ரோட்டுக்கு நடையைக் கட்டினான்.

16

பிரம்மமே சத்யம்

பிரம்மமே ஞானம்

பிரம்மமே அனந்தம்

காலங்களிலும் எல்லா இடங்களிலும் வியாபித்துள்ளது அதுவே.

—எவன் பிரம்மத்தை ஹ்ருதயத்தின் மத்தியில் உள்ள பரம ஆகாசத்தில் உள்ளதாக அறிகிறானோ, அவன் பிரம்மத்துடன் கூடி உடனேயே அனைத்து போகங்களையும் அடைகிறான். அவன் விருப்பங்கள் பூரணமாய் நிறைவேறுகின்றன.

தைத்திரீயோபநிஷத்:
அத்தியாயம் 2, ஸ்லோகம் 1

பட்டினியிலிருந்து தப்பிக்கும் பொருட்டு அவன் கொஞ்ச காலம் கேட்டமைட்டாக இருந்தான். கேட்டமைட் என்பதற்குத் தமிழில் வார்த்தை இல்லை. அவன் பிறந்து வளர்ந்த ஊரில் கேட்டமைட்டை பையன் என்றும், ஸோடமியை குப்பி கொடுப்பது, பையன் வேலை என்றும் சொல்வார்கள். இது ஒரு வட்டார வழக்கு நாவலாக இருந்தால் அப்படியே குப்பி அல்லது பையன் வேலை என்று எழுதிவிடலாம். ஆனால் தமிழ் இலக்கியத்தை அவ்வப்போது தூர இருந்து எட்டிப் பார்க்கும் வெள்ளைக்காரர்கள் தமிழ் எழுத்தாளர்கள் அத்தனை பேரையுமே ஏதோ நாட்டுப்புறக் கலைஞர்களைப் போல் கருதி வேடிக்கை பார்ப்பதால் என்னால் இங்கே குப்பி என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியவில்லை. தமிழ் ஆர்வலர்கள் மன்னிக்கவும்.

இப்போது கதைக்கு வருவோம். குப்பி அடிப்பவன் ஸோடமைட். குப்பி கொடுப்பவன் கேட்டமைட். யோனியில் செய்வதை விட புட்டத்தில் செய்தால்

அதிக இன்பம் கிடைக்கும் என்பது உலக அளவில் குப்பி அடிப்பர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது. இதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு அவனுக்கு சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. அந்த ஆங்கிலோ இந்தியக் கிழவியிடம் ஒருமுறை முயற்சி செய்தான். உள்ளே விட்டு வெளியே எடுத்தபோது சகிக்க முடியாத துர்நாற்றம் அடித்தது. முகத்தைச் சுளித்துக்கொண்டு பார்த்த போது அவனுடைய குறியெல்லாம் ஒரே மலம். அதைச் சுத்தம் செய்யும்போது வாந்தி எடுத்துவிட்டான். உண்மையிலேயே அது ஒரு ஆச்சரியமான சம்பவம்தான். ஏனென்றால் மலம் அள்ளி, மலம் தின்னும் பன்றிகளுடனேயே வாழ்ந்த அவனுக்கு அந்த நிமிடம் வரை மல நாற்றம் என்றால் என்னவென்றே தெரிந்ததில்லை. குடிசைக்குப் பின்னால் இருக்கும் சுடுகாட்டில் பிணம் எரியும்போது மட்டும் ஏதோ ஒரு லேசான நாற்றம் வருவது போல் தெரியும். ஆனால் தொம்பங்குடிசையை அடுத்து உள்ள கொசத்—தெருக்காரர்கள் மூக்கைப் பிடித்துக்கொண்டு ஓடுவதைப் பார்த்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு அந்த ஆங்கிலோ இந்தியக் கிழவியை புட்டத்தில் செய்த போதுதான் முதல்முதலாக சகிக்க முடியாத துர்நாற்றம் என்றால் என்ன என்பதே தெரிய வந்தது. அதற்கு மேல் அவன் புட்டக் கலவியில் ஈடுபடும் ஆர்வத்தை இழந்துவிட்டான்.

சக தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்: சர்வதேச அளவில் புட்டப் புணர்ச்சியாளர்களின் எண்ணிக்கை கணிசமாகவே காணப்படுவதால் அவர்களின் அனுபவங்களைத் தொகுத்து ஆய்வு செய்து ஒரு நாவல் எழுதலாம். தலைப்பு கூட தயார். பிருஷ்டபுரம். சரியா?

ஏன் எழுதக் கூடாது? தனிமை, இருண்மை, போரின் அழிவுகள், சிறை அனுபவங்கள், காதல், காமம் என்று எத்தனையோ விஷயங்களைப் பற்றி நாவல்கள் எழுதப்படுகின்றன. அப்படி யிருக்கும் போது குப்பி அடிப்பவர்கள் மற்றும் குப்பி கொடுப்பவர்கள் பற்றி விரிவாக ஒரு நாவல் எழுதினால் என்ன? அவனைப் பொறுத்தவரை அவன் கேட்டமைட்டாக வாழ்ந்தது சில காலமே என்பதால் அதை வைத்து ஒரு சிறுகதைதான் எழுத முடியும். அதையும் ஏற்கனவே எழுதிவிட்டான். இனிமேல் எழுத ஒன்றுமில்லை. எனவேதான் இதை சக தமிழ் எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோளாக வைக்கிறேன்.

பிராமண ஜாதியில் பிறந்த ஒருவன் வேதங்களையும் கர்னாடக இசையையுமே கேட்டு வளர்ந்திருப்பான். அவனால் ஒரு ராகத்தை இன்னதென்று கண்டுகொள்ள முடியும். அவன் கனவுகள் சங்கீதத்தால் நிறைந்திருக்கும். காட்சிகளையே அவன் சங்கீதத்தால் காண்பவனாகவும் இருக்கக்கூடும். அவன் செவிகளில் வேத கோஷமே எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும்.

ஆனால் தர்மாவின் வாழ்விலோ — இவ்வளவு காலம் சங்கீதம் கேட்டும், உலக இலக்கியங்களில் மூழ்கியும் — மலமே துரத்திக் கொண்டிருந்தது. ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு கனவு வரும். இந்தக் கனவு அவனுடைய சிறு வயதிலிருந்து இன்றைய தினம் வரை அவனைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மேலே கூரை இல்லாத ஒரு பெரிய எடுப்பு கக்கூஸ். அதை கக்கூஸ் என்றுகூட சொல்ல முடியாது. தரையிலேயே ஆயிரக்கணக்கான பேர் மலம் கழித்திருக்கும் ஒரு பெரிய மைதானம். ஒரு சிறிய இடைவெளிகூட இல்லாமல் ஆயிரக்கணக்கான பேர் மலம் கழித்த இடம் எப்படி இருக்கும்? எப்படி நாற்றமெடுக்கும்? அந்த இடத்தில் அவன் மாட்டிக்கொள்கிறான். மலத்தில் விழாமல், மலத்தை மிதிக்காமல் எப்படி அங்கிருந்து வெளியே வருவது? குடலே பிடுங்கிக்கொண்டு வருவது போல் வாந்தி எடுக்கும்போது விழித்துக் கொள்வான். இன்றைக்கும் இந்தக் கனவிலிருந்து அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. ஒரு எழுத்தாளன் என்ற வகையில் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். அவன் கனவின் பயங்கரத்தை — ஆயிரக்கணக்கான பேர் மலம் கழித்த அந்த இடத்தின் துர்நாற்றத்தை எழுத்தில் கொண்டு வர முடியவில்லை.

ஆனால் ஒரு நல்ல விஷயம். கனவில்தான் இந்த மல நாற்றம் அவனைத் துரத்தியதே தவிர நிஜ வாழ்வில் அவனுக்கு ஒருபோதும் இது பிரச்சினையாக இருந்ததில்லை. சின்ன வயதில் நைனாவுடன் மலம் அள்ளப் போயிருக்கிறான். தொம்பங்குடிசை என்று பெயர் பெற்ற அந்த சேரிக்குப் பின்னால் இருக்கும் சுடுகாட்டுக் கூரையின் கீழே விற்றுக்கொண்டிருக்கும் வேலிமுட்டியை இரண்டு கிளாஸ் அடித்து விட்டுத்தான் வேலைக்குக் கிளம்புவார் நைனா. ஆனால் இவனுக்கு என்னவோ அந்த வேலிமுட்டியின் நாற்றம்தான் குடலைப் பிடுங்குவதாக இருக்குமே தவிர மலம் நாறாது. ஒவ்வொரு வீடாகப் போய், வாசலிருந்து ‘மோவ்...' என்று குரல் கொடுத்து விட்டு வீட்டின் பின் வழியே

சென்று கக்கூஸில் கிடக்கும் மலத்தை மண் போட்டு சிரட்டையின் மூலம் பிரம்புக் கூடையில் அள்ளிக் கொண்டு வந்து சிவன் கோவில் குளத்துக்குப் பக்கத்தில் இருக்கும் பீ சந்தில் நிற்கும் லாரியில் கொட்ட வேண்டும். அப்போதெல்லாம் மலம் என்ற வார்த்தை அவனுக்குத் தெரியாது. பீ தான். விதவிதமான பீ. சிவப்பு நிறம் மஞ்சள் நிறம். சாம்பல் நிறம். விதவிதமான வண்ணங்கள் விதவிதமான வடிவங்கள். ஆமாம். சில பீ கொதகொதவென்று சேற்றைப் போல் கொட்டிக் கிடக்கும்; சிலது ஆட்டாம் புழுக்கை போல்; சில பீ நாய்ப் பீயைப் போல்; சில பீ கழிச்சலாக. இந்தக் கழிச்சலை அள்ளுவதுதான் கஷ்டம். சிலருடைய பீயில் ரத்தமும் கிடக்கும். நைனாவிடம் கேட்டபோது ''பன்னிக் கறி சாப்புட்லன்னா இப்புடித்தான் ரத்தமா போவும்'' என்றார். அதிலிருந்து அவனுக்கு பன்றிக் கறியின் மீது இருந்த ஈடுபாடு அதிகமாகிவிட்டது. இந்த வேலையில் ஈடுபடும் எல்லோருமே வேலிமுட்டி சாராயத்தை அடித்துவிட்டுத்தான் செய்வார்கள். ஆண் பெண் என்று எந்த வித்தியாசமும் இருக்காது.

ஒருநாள் அந்தப் பீ லாரி வெட்டாற்றைத் தாண்டி வாஞ்சூருக்குப்— போகும்போது பாலத்திலேயே சரிந்து விட்டது. பாலம் ஒன்றுதான் அந்த ஊரை நோக்கித் தெற்கிலிருந்து வருவதற்கும் செல்வதற்கும் இருந்த ஒரே வழி. பாலத்தை அடைத்துக்கொண்டு கொட்டிக் கிடந்த மலத்தின் மேலே வாகனங்கள் சென்றதால் அன்றைய தினம் அந்த ஊரே பீ மழையில் நனைந்தது போல் ஆயிற்று. எல்லா ஜனங்களும் மூக்கைப் பிடித்துக்கொண்டு ஓங்கரித்து ஓங்கரித்து வாந்தி எடுத்தபடியும் பீ அள்ளுபவர்களை சபித்தபடியும் அலைந்தார்கள். இவன் மட்டும் எதுவுமே நடக்காதது போல் ஜாலியாக இருந்தான்.

உலக இலக்கியத்தில் சில பேர் கேட்டமைட்டாக இருந்திருக்கிறார்கள். ஃப்ரான்ஸில் ஜான் ஜெனே, மொராக்கோவில் முகமது ஷுக்ரி என்று சில பெயர்கள் ஞாபகம் வருகிறது. ஆனால் அவர்களுக்கும் இவனுக்கும் உள்ள வித்தியாசம், இவன் கேட்டமைட்டாக இருந்த காலத்திலேயே ஒரு கோடீஸ்வரனின் நண்பனாகவும் இருந்ததுதான்.

பெரிய பெரிய ரயில் நிலையங்களில் நீங்கள் பார்க்கலாம். அதாவது, நீங்கள் பயணப்படும் ரயில் இன்னும் வந்திருக்காத பட்சத்தில் காலியான

பிளாட்ஃபாரத்தில் நின்று கொண்டிருந்தால் அந்தக் காட்சியைப் பார்க்க முடியும். தண்டவாளங்களில் கிடக்கும் பீயை ஒருவர் ட்யூப் மூலமாகத் தண்ணீர் அடித்துச் சுத்தம் செய்து கொண்டிருப்பார். இதுவும் ஒருவகையில் எடுப்புக் கக்கூஸில் வேலை செய்வது மாதிரிதான். மனித மலத்தை மனிதனே சுமப்பது போன்ற அவலம் வேறு எதுவும் இல்லை என்று அவ்வப்போது மனித உரிமை ஆர்வலர்கள் பத்திரிகைகளில் எழுதுவதை தர்மா பார்த்திருக்கிறான். அதைப் பார்க்கும் போதெல்லாம் தன்னுடைய பீயை இன்னொருவனை சுமக்கச் செய்பவர்களின் வாயிலெல்லாம் பீயைக் கரைத்து ஊற்ற வேண்டும் என்று அவனுக்குத் தோன்றும். அதனால்தான் அவனுடைய டார்ச்சர் செஷன்களில் பீயைக் கரைத்து ஊற்றுவது தவிர்க்க முடியாத ஒரு சடங்காக இருந்து வந்தது.

17

Some people never go crazy. What truly horrible lives they must lead...

– Charles Bukowski

உலகத்தில் ஒருவரைப் போலவே இன்னொருவர் இருப்பதை நாம் அவ்வப்போது பார்த்திருக்கிறோம். உருவ ஒற்றுமையில் அண்ணன் தம்பிகள், அப்பா மகன்கள் சில சமயங்களில் அச்சில் வார்த்தது போல் ஒன்றாக இருப்பார்கள். சிலர் பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருப்பார்கள். சீரியஸாக சிந்திக்கும் போது புருவத்தை விரல்களால் நெருடும் பழக்கம் உங்களுக்கு இருந்தால் உங்கள் வாரிசுக்கும் அதே பழக்கம் இருக்கலாம். நடிகர்களின் வாரிசுகளுக்கு இயல்பிலேயே நடிப்புத் திறமையும், இசைக் கலைஞர்களின் வாரிசுகள் இசைக் கலைஞர்களாக மிளிர்வதையும் கண்டு வருகிறோம். நம்முடைய உடம்பில் கொண்டுவரும் ஞாபக சக்தி என்பது பல நூற்றாண்டுகளின் வரலாற்றைக் கொண்டது. ஆனால் எந்த சம்பந்தமும் இல்லாத இரு வேறு மனிதர்களுக்குள் இருக்கும் வினோதமான ஒற்றுமை வியக்கத்தக்க விஷயம் அல்லவா?

இந்த தர்மா இருக்கிறானே, அவன் ஒன்றுக்குப் போகும் போது ‘முருகா, முத்துக் குமரா, கந்தா, கடம்பா, கதிர்வேலா, ஞான பண்டிதா...' என்று ஒருவித ராகத்தோடு சப்தமாகச் சொல்லியபடிதான் போவான். இல்லாவிட்டால் அவனுக்கு வராது. சந்தேகமிருப்பவர்கள் ஒவ்வொரு திங்கட்கிழமை மதியமும் பார்க் ஷெரட்டன் வெஸ்ட்மின்ஸ்டர் பாரில் அவன் கிருஷ்ணாவை சந்திக்கச் செல்லும்போது ரெஸ்ட் ரூமில் இவ்வாறு கத்தியபடியே ஒன்றுக்குப் போவதைக் கண்டுகொள்ளலாம். ஆச்சரியம் என்னவென்றால், இன்னொருவனும் நம்முடைய தர்மாவைப் போலவே பார்க் ஷெரட்டன் வெஸ்ட்மின்ஸ்டர் பாருக்கு எதிரில்

உள்ள ரெஸ்ட் ரூமில் 'முருகா, முத்துக் குமரா, கந்தா, கடம்பா, கதிர்வேலா, ஞான பண்டிதா...' என்று சப்தமாகக் கத்தியபடியே ஒன்றுக்குப் போய்க் கொண்டிருந்தான். முதலில் தன்னை யாரோ கிண்டல் செய்கிறார்கள் என்றே நினைத்தான் தர்மா. பிறகுதான் தெரிந்தது, அந்த ஆள் இப்போதுதான் முதல் முதலாக இந்தப் பக்கம் வருகிறான் என்பது. அவனுக்கும் தர்மாவைப் பார்த்து ஆச்சரியம். அது எப்படி இரண்டு வெவ்வேறு நபர்களுக்கு இப்படி ஒரு வினோதமான பழக்கம் இருக்க முடியும்? தன்னை ஆழ்வார் என்று சொல்லி அறிமுகப் படுத்திக்கொண்ட அவனிடம் தர்மா கேட்ட முதல் கேள்வி:

"அது ஏன், ஒன்றுக்கு இருக்கும்போது இப்படி எல்லா கடவுள்களையும் அழைக்கிறீர்கள்?"

அதற்கு ஆழ்வார் நேரடியாக பதில் சொல்லாமல் "இப்படிக் கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல் எறியலாமா?" என்று கேட்டுச் சிரித்தான். அதிலிருந்து ஆழ்வாரும் தர்மாவும் இணை பிரியாத நண்பர்களாயினர். முதலில் ஆழ்வார் தன்னைப் பற்றிய விபரங்கள் எதையும் சொல்ல—வில்லை. பிறகு போகப் போக தர்மாவே தெரிந்து கொண்டான். ஆழ்வாருக்கு தமிழ்நாட்டின் எல்லா நகரங்களிலும் பிஸினஸ் இருந்தது. ஊர் ஊராக சுற்றிக் கொண்டே இருந்தான். ஒவ்வொரு ஊரிலும் ஒரு பென்ஸ் வைத்திருந்தான். அவனுக்குக் கீழே ஒரு 5000 பேர் வேலை செய்வார்கள் என்பது தர்மாவின் யூகம். சந்தித்த முதல் நாளே தர்மா தன் தொழில் பற்றிச் சொல்லிவிட்டான். அதில் அவனுக்கு ஒன்றும் கூச்சமெல்லாம் கிடையாது. ஆனால் தர்மாவின் மிகப் பெரிய ஆச்சரியம் என்னவென்றால் — அதை அவனுடைய வாழ்நாளின் ஆச்சரியம் என்று சொல்லலாம் — அவன் ஒரு கேட்டமைட் என்று சொல்லியும் ஆழ்வார் அதைப் பற்றி எதுவுமே கண்டு கொள்ளவில்லை. ஏதோ ஒரு அரசாங்க அலுவலகத்தில் குமாஸ்தா வேலை என்று சொன்னதைபோல் எடுத்துக் கொண்டான். அதுவே ஆழ்வா£ரின் மேல் அவனுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தியது. ஆனால் அதுவே சில சமயங்களில் அவனுக்கு ஆழ்வாரைப் பற்றி தூஷணையான எண்ணம் தோன்றுவதற்கும் காரணமாக இருந்தது.

வெஸ்ட்மின்ஸ்டர் பாரில் மதியம் ஒரு மணிக்கு சந்திப்பார்கள். தர்மா அதற்கு முந்தின இரண்டு தினம் சாப்பிடாமல் கொலைப் பட்டினியாக இருப்பான். அவனுடைய தொழிலில் கஸ்டமர் ஒன்றும் அவ்வளவு எளிதாக கிடைத்துவிட

மாட்டார்களே? அதிலும் அவன் ஆர்கனைஸ்ட் செக்டாரைச் சேராமல் தனியாகத் தொழில் நடத்திக்கொண்டிருந்தவன். ஆர்கனைஸ்ட் செக்டார் என்றால் பிராத்தல். அங்கேயும் பெண்களுக்குத்தான் மவுசு அதிகம்; இவனைப் போன்ற கேட்ட—மைட்டுகளுக்கு கிராக்கி கிடையாது. ஆனால் சர்ஜரி செய்துகொண்டு முழுமையான டீஜியாக இருந்தால் நல்ல வருமானம் உண்டு. இவன்தான் அப்படியும் ஆகாமல் பயந்து கொண்டு ஓடி வந்தவன் ஆயிற்றே? அதனால் கஸ்டமர் கிடைக்காத நாட்களில் பட்டினி. அழுகல் தக்காளியும் டீயும்தான் அவன் உயிரைத் தக்க வைத்துக்கொள்ள உதவிக்கொண்டிருந்தன.

தினமும் பனிரண்டு மணிக்கு ஆழ்வாருக்கு ஏதாவது பப்ளிக் பூத்திலிருந்து போன் செய்து “பார்க்கலாமா?" என்று கேட்பது அவன் வழக்கம். குடிக்கலாம் என்பதை விட, நன்றாக சாப்பிடலாம் என்பதே அவனுடைய எண்ணமாக இருக்கும். ஆழ்வார் வெளியூரில் இருந்தால் அவனுக்குக் கெட்ட நாள். உள்ளூரில் இருந்தால் நல்ல நாள். பாரில் போய் அமர்ந்ததும் “பசிக்குது, ஏதாவது சாப்பிடக் குடுங்களேன்" என்றுதான் கேட்பான் தர்மா. இதைப் படிக்கும் யாருக்காவது இதில் சந்தேகம் இருந்தால் இன்றைக்கும் பார்க் ஷெரட்டன் செஃப் சேகரை விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம். முதல் நாள் அப்படிக் கேட்டதும் சேகருக்கு ரொம்பவும் சந்தோஷம். அவருடைய செஃப் வாழ்க்கையில் இதுவரை ஒருவர் கூட அவரிடம் “பசிக்கிறது" என்று சொல்லிச் சாப்பிட்டதில்லை என்றார். ஆனால் நம் ஆழ்வார் இதையெல்லாம் பார்த்துக்கொண்டு பரப்பிரும்மம் மாதிரி உட்கார்ந்திருப்பான். தர்மா ஒரு கேட்டமைட் என்பது பற்றி எப்படி அவன் அலட்டிக்—கொள்ளவில்லையோ அதேபோல் அவனுடைய பட்டினி பற்றியும் அவன் அலட்டிக்கொள்ளவில்லை.

ஆனால் ஊர் வாய் அப்படி இல்லையே? ஆழ்வார் கோடீஸ்வரன் மட்டுமல்ல; அரசியலிலும் இன்னும் பல அதிகார மட்டத்திலும் மிகுந்த செல்வாக்கு உள்ளவன். அதனால் தர்மா அவனுடைய நெருங்கிய நண்பன் என்பது பரவலாக வெளியே தெரிந்ததால் ஆழ்வாரை தர்மாவின் புரவலன் என்றே எல்லோரும் நம்பத் தலைப்பட்டனர். மாதம் அறுபதாயிரம் ரூபாய் ஆழ்வாரிடமிருந்து தர்மாவுக்குக் கிடைக்கிறது என்று அந்த ஊரில் ஒருத்தர் பாக்கியில்லாமல் பேசிக்கொண்டனர். இதை ஒரு மந்திரியே தர்மாவிடம்

சொன்னபோது அவன் ஆச்சரியத்துக்குப் பதிலாக கோபமே அடைந்தான். அந்த மந்திரியிடம் அவன் ஒரு சம்பவத்தைச் சொன்னான்.

ஒருநாள் இரவு நேரம் கடற்கரையில் கலங்கரை விளக்கத்தின் கீழே நின்று குடித்துவிட்டு (ஜானி வாக்கர் பிளாக்) தர்மாவை அவனுடைய எலிப்பொந்தில் விடுவதற்காக தன்னுடைய காரில் அழைத்து வந்தான் ஆழ்வார். அன்றைய தினமும் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல்தான் இருந்தான் தர்மா. வெஸ்ட்மின்ஸ்டராக இருந்திருந்தாலாவது நன்றாக வயிறு புடைக்க சாப்பிட்டுக்கொண்டே குடித்திருக்கலாம். இங்கே பீச்சில் எதை சாப்பிடுவது? குடிக்கும்போது ஆழ்வார் நொறுக்குத் தீனி எதுவும் சாப்பிடுவதில்லை. சரி, யாராவது சுண்டல்கார பையன் வந்தால் சுண்டலாவது வாங்கிச் சாப்பிடலாம் என்று பார்த்தால் ஒரு பயலும் அவர்களிடம் நெருங்க மாட்டான். ஆழ்வாரை அங்கே பார்த்த உடனேயே அங்குள்ள போலீஸ் அவனைச் சுற்றி எஸ்கார்ட் போட்டு விடுவார்கள். சுண்டல்காரர்கள், பிச்சைக்—காரர்கள், திருநங்கைகள் மற்றும் போக்கிரிகள் யாரும் ஆழ்வாருக்குத் தொந்தரவு செய்துவிடக் கூடாது என்பதற்காக போலீஸ்காரர்கள் செய்யும் ஏற்பாடு அது. ஆழ்வாருக்கு இந்த பந்தாவெல்லாம் பிடிக்காது. அவன் மிகவும் எளிமையானவன். தன்னுடைய அடையாளத்தை எந்த இடத்திலும் சொல்லிக் கொள்ளாதவன். ஆனாலும் ஆழ்வாரைப் பாதுகாக்க வேண்டியது போலீஸின் கடமை ஆயிற்றே?

பந்தோபஸ்துக்கு வருவது கான்ஸ்டபிள் என்று நினைத்து விடாதீர்கள். இன்ஸ்பெக்டர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவியில் இருப்பவர்கள். முதலில் தர்மாவுக்குப் புரியவில்லை. அவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்கள் இப்படி நூறு இருநூறு லஞ்சம் வாங்குவதற்கு வந்து நிற்க மாட்டார்களே என்று ஒரே குழப்பமாக இருக்கும். பிறகு ரொம்ப நாள் கழித்துத்தான் அதன் தாத்பர்யம் புரிந்தது. ஒருநாள் ஒரு இன்ஸ்பெக்டர் தர்மாவும் ஆழ்வாரும் நின்று கொண்டிருக்கும் இடத்துக்கு —— கலங்கரை விளக்கத்துக்கு நேர் கீழே — மிகுந்த பயபக்தியுடன் வந்து தன்னுடைய டிரான்ஸ்ஃபருக்காக விண்ணப்பித்துக் கொண்டார். அடுத்த வாரம் ஆழ்வாரை சந்தித்தபோது அந்த ட்ரான்ஸ்ஃபர் விஷயம் பற்றி மறக்காமல் கேட்டான் தர்மா. அடுத்த நாளே வாங்கிக் கொடுத்துவிட்டதாகச் சொன்னான் ஆழ்வார். ‘‘அந்தக் குறிப்பிட்ட இடத்துக்கு டிரான்ஸ்ஃபர் வேண்டுமென்றால் லஞ்சப் பணம் 50 லட்சம் கொடுக்க

வேண்டும்" என்றும் சொன்னான். அது என்ன விஷயம் என்றால், இன்ஸ்பெக்டர் லெவலுக்கு மாற்றல் வேண்டுமானால் அதற்கு 15 அல்லது 20 லட்சம்தான் சந்தை நிலவரம். ஆனால் சிந்தாதிரிப்பேட்டை போன்ற பசையுள்ள இடம் என்றால் 50 லட்சம். மார்வாடிகளின் ஏரியா என்பதால் வட்டிக்கு விடுவார்கள். அதில் ஏற்படும் தாவாக்களுக்கு லோக்கல் இன்ஸ்பெக்டர்தான் பஞ்சாயத்து செய்ய வேண்டும். ரவுடிகளின் ஏரியா வேறு. எவனாவது ரவுடி மார்வாடிப் பெண்ணை காதலித்து விடுவான். அவளை விலக வேண்டுமானால் 20 லட்சம் என்று மிரட்டுவான் ரவுடி. அதற்குப் பஞ்சாயத்து பண்ண வேண்டும். இதுதான் பசை என்பது. இப்படி ஒரு இடத்துக்கு மாற்றலாகிப் போகும் இன்ஸ்பெக்டர் ஒரே வருடத்தில் கோடீஸ்வரர் ஆகிவிடுவார். இப்போது யோசித்துப் பாருங்கள், அந்தக் குறிப்பிட்ட இன்ஸ்பெக்டர் ஆழ்வாருக்கு எப்படி நன்றிக் கடன்பட்டிருப்பார் என்று. அப்போதுதான் தர்மாவுக்குப் புரிந்தது, ஆழ்வாரோடு போகும்போது போக்குவரத்து போலீஸிலிருந்து போலீஸ் அதிகாரிகள் வரை ஏன் அப்படி விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்கிறார்கள் என்று. இவ்வளவுக்கும் ஆழ்வார் அவர்களிடமிருந்து ஒரு பைசா பெற்றுக்கொள்ள மாட்டான். ஆழ்வாரின் குணம் கொடுப்பது; வாங்குவது அல்ல. அதை விடுங்கள்; நம் கதைக்கு வருவோம். இப்படியாக ஆழ்வாருக்கு போலீஸ்காரர்கள் கலங்கரை விளக்கத்தில் பந்தோபஸ்து போட்டுவிடுவதால் நஷ்டம் தர்மாவுக்குத்தான். காலையிலிருந்து வெறும் வயிற்றோடு அந்த ப்ளாக் லேபிள் ஸ்காட்ச் விஸ்கியைக் குடிக்கும் போது அவனுக்கு வயிற்றையெல்லாம் கலக்கும். அநேகமாக இந்த உலகத்திலேயே முழுப் பட்டினியாக ஸ்காட்ச் விஸ்கி குடிப்பவன் தர்மா ஒருவனாகத்தான் இருக்க முடியும். சார்ல்ஸ் ப்யூகோவ்ஸ்கி கூட பட்டினியுடன்தான் எழுதுவார்; ஆனால் அவர் குடித்தது ஸ்காட்ச் அல்ல; பியர். ஆனால் தர்மா மாட்டிக்கொண்டது விஸ்கியில். இதெல்லாம் ஸ்காட்ச் நிறுவனத்துக்கே அவமானம். என்ன செய்வது? ஆழ்வாருக்கு தர்மா ஒரு கேட்டமைட் என்பது எப்படி ஒரு செய்தியோ அதைப் போலவே தர்மா இரண்டு நாள் பட்டினி மூன்று நாள் பட்டினி என்பதும் வெறும் செய்தியாக மட்டுமே மூளையில் ஏறியது.

தர்மாவின் எலிப்பொந்து மந்தவெளி பஸ் டெப்போ அருகே இருந்தது. அங்கே கொண்டுவந்துவிடுவதற்காக தர்மாவை தன்னுடைய காரில் அழைத்துக்

கொண்டு வந்தானா? அப்போது இரவு பனிரண்டு மணி இருக்கும். ஒருநாள் பூராவும் எதுவுமே சாப்பிடாமல் வெறும் காலி வயிற்றில் விஸ்கி குடித்தால் மறுநாள் பசி ஆளையே கொன்றுவிடும். குடலே புரட்டிப் புரட்டி சுருண்டு ஊளையிட்டு உறுமும். சத்தம் வெளியிலேயே கேட்கும். குடலுக்குள் பசி சுழன்று சுழன்று அடிக்கும். அந்தக் கவலையுடன் ஆழ்வாரோடு வந்து கொண்டிருந்தபோது மந்தவெளி சிக்னல் அருகே தள்ளுவண்டியில் ஒரு அம்மா சுடச் சுட இட்லி போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஆழ்வாரிடம் காரை நிறுத்தச் சொல்லி “சாப்பிட்டுப் போகலாமே?" என்றான் தர்மா. ஆழ்வார் வர்க்கப் பாகுபாடெல்லாம் பார்க்காதவன் என்பதை நீங்கள் யூகித்திருக்கலாம். அவன் நட்சத்திர ஓட்டலில் சாப்பிடுவான். இங்கே கையேந்தி பவனிலும் சாப்பிடுவான். அதனால்தான் தர்மா காரை நிறுத்தச் சொன்னான். ஆனால் “நான் வீட்டில் சாப்பிட்டுக் கொள்கிறேன். வீட்டில் தயிர் சாதம் இருக்கும். நீ வேண்டுமானால் சாப்பிடு" என்று சொல்லி தர்மாவை இறக்கி விட அந்த முனையில் காரை நிறுத்தினான் ஆழ்வார்.

அடுத்து வரப் போவது இந்த நாவலின் முக்கியமான வசனங்களில் ஒன்று. ஏனென்றால், இந்த ஒரே வசனத்தில் மார்க்ஸூம் எங்கெல்ஸூம் கண்டுபிடித்த பொருள்முதல்வாதக் கோட்பாட்டின் சாரத்தையும், இந்த வசனம் பற்றி தர்மா என்ன நினைத்தான் என்பதில் ஒரு பெட்டி பூர்ஷ்வாவின் சிந்தனை ஓட்டத்தையும் கண்டுகொள்ளலாம்.

அந்த பென்ஸ் காரிலிருந்து தர்மா இறங்கும்போது அவன் கையில் நூறு ரூபாயை வைத்த ஆழ்வார் “hard earned moneyடா; பார்த்து செலவு செய்" என்றான். அது பற்றி யோசித்த தர்மா ‘அவன் சொல்வதும் சரிதான்; ஜேப்படித் திருட்டிலும் குப்பி கொடுப்பதிலும் வருவது easy moneyதானே?" என்று நினைத்துக்கொண்டான்.

இந்த சம்பவத்தை மந்திரியிடம் சொன்னபோது ஏதோ பெரிய ஜோக்கைக் கேட்டதுபோல் சிரிசிரி என்று சிரித்தார்.

18

“கஷ்டங்களின் மூலமும், வேதனையின் மூலமும் நான் மேலும் மேலும் கற்றுக்கொள்கிறேன். இந்த முழுப் பிரபஞ்சத்தையும் இதில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள அத்தனை விஷயங்களையும் நாம் நேசிக்க வேண்டும் என்பதை அதன் மூலம் நான் அறிந்துகொள்கிறேன். அதே சமயம் இந்த அன்பு, இந்தப் பிரபஞ்சத்தை நாமே நேரடியாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பையும் நல்கி விடுகிறது. ஆனால் அதற்கான நுழைவுச்சீட்டுதான் மிகவும் விலை உயர்ந்ததாகவும், கிடைப்பதற்கு அரிதாகவும் இருக்கிறது. ரத்தத்தையும் கண்ணீரையும் கொடுத்தே அந்த நுழைவுச்சீட்டை வாங்க வேண்டியிருக்கிறது.”

(ஜூன் 23, 1942)

An Interrupted Life: The Diaries and Letters of Etty Hillesum: 1941– 1943

அவள் பெயர் நீலாவதி. ஒரு கல்லூரியில் பி.ஏ. முதல் ஆண்டு படிக்கிறாள். ஏதோ ஒரு கிராமத்திலிருந்து சென்னைக்கு வந்து ஹாஸ்டலில் தங்கி இருக்கிறாள். தர்மாவின் முன்னாள் தோழி. அவளுக்கு ஏற்கனவே இரண்டு தோழர்கள் உண்டு. அவர்களில் முதல் தோழனான உதயாவை தர்மாவுக்கும் தெரியும். பழகுவதற்கு இனியவன். தன்னுடைய நண்பர்கள் எல்லோரையும் சரிசமானமாக நடத்தி அவர்கள் எல்லோருடனும் செக்ஸ் வைத்துக்கொள்ளும் நல்ல பழக்கம் உடையவள் நீலாவதி.

அவ்வப்போது வெஸ்ட்மின்ஸ்டர் பாருக்குப் போகும் போது அவளையும் அழைத்துச் செல்வது தர்மாவின் வழக்கம். முதல் நாள் சென்றபோது அவள் அணிந்திருந்த சுடிதார் வெளுத்துச் சாயம் போயிருந்ததைப் பார்த்து “ஏன்டி, நல்ல ட்ரெஸ் எதுவும் இல்லையா?" என்று கேட்டான் தர்மா. அதற்கு அவள் “இருப்பதிலேயே இதுதான் கொஞ்சம் சுமார்; நீ கூடத்தான் சாயம் போய்

கிழிந்து போன ஜீன்ஸைப் போட்டிருக்கிறாய். ட்ரெஸ்ஸில் என்ன இருக்கிறது?" என்றாள்.

“அப்படிச் சொல்லாதே. ட்ரெஸ்ஸில்தான் எல்லாமே இருக்கிறது. இந்த ஜீன்ஸ் கிழியாமல் இருந்தால் 2000. கிழிந்திருப்பதால் 4000 ரூ.”

அன்றைய தினமே அவளுக்கு 20,000 ரூபாய்க்கு புதிய நவநாகரீக ஆடைகளை வாங்கிக் கொடுத்தான் ஆழ்வார். இம்மாதிரி வள்ளல் குணம் யாருக்கு வரும்?

அதன் பிறகு ஏதோ கவைக்குதவாத காரணத்தால் நீலாவதியின் தொடர்பு முறிந்து போனது. (தொடர்பு என்ற வார்த்தைதான் மருவி தொடுப்பு என்று ஆகிவிட்டதோ?) தர்மாவுடன் பேசாவிட்டாலும் அவள் கிருஷ்ணாவுடனும், ஆழ்வாருடனும் பேசிக்கொண்டுதான் இருந்தாள். தர்மா அதுபற்றி எதுவும் அக்கறை கொள்ளவில்லை. அவனுடைய சுபாவம் அப்படி. ஒரு பெண்ணுடன் 12 ஆண்டுகள் வாழ்ந்தான். ஒருநாள் அவள் அவனைப் பிரிய வேண்டும் என்று சொன்னபோது எந்தப் பேச்சும் பேசாமல் வெளியேறி விட்டான். அதுபற்றி அவன் மனதில் எந்த வருத்தமும் ஏற்படவில்லை. சொல்லப் போனால் ஒரு விடுதலை உணர்வுதான் ஏற்பட்டது. 12 ஆண்டுகள் அவனோடு வாழ்ந்து, அவனுடைய குழந்தையை வயிற்றில் சுமந்து, அவனுடைய சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டு, அவனுக்கு சமைத்துப் போட்டு... அந்த உறவே அவனுக்குள் எவ்வித உணர்—வலைகளையும் எழுப்பாத போது இந்த ஜிம்கா பெண்களெல்லாம் எம்மாத்திரம்?

திடீரென்று ஒருநாள் நீலாவதி கிருஷ்ணாவுக்கு போன் செய்து உடனடியாகத் தனக்கு 20,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டிருக்கிறாள். அதற்கு அவள் கூறிய காரணம்:

அவளுடைய நண்பன் ஒருவன் அவளிடம் ஒரு டிஜிடல் கேமராவைக் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொல்லியிருக்கிறான்.

“நீயே சென்னைக்கு வந்து மூன்று மாதம்தானே ஆகிறது? உனக்கு யார் நண்பன்?”

‘‘என்னுடைய ஹாஸ்டலுக்குப் பக்கத்தில் உள்ள —பாய்ஸ் ஹாஸ்டல் பையன்.’’

‘‘உனக்கு எதற்கு டிஜிடல் கேமரா?’’

‘‘எனக்கு இல்லை; அவனுடைய மாமா லண்டனிலிருந்து வந்தவர் கொடுத்தது. அவனுடைய ஹாஸ்டலில் வைத்தால் தொலைந்துவிடும் என்று என்னிடம் கொடுத்து வைத்துக் கொள்ளச் சொன்னான்.’’

அது அவளுடைய அறையில் தொலைந்து விட்டது. அவளுடைய அறைத்தோழிதான் எடுத்திருக்க வேண்டும். எவ்வளவு கேட்டும் தான் எடுக்கவில்லை என்று கூறிவிட்டாள். இப்போது அந்தப் பையன் கேமராவுக்கான தொகை இருபதாயிரத்தைக் கேட்டு மிரட்டுகிறான். அந்தப் பையனின் சித்தப்பாவும் மிரட்டுகிறார், அதுவும் அவளுடைய ஹாஸ்டலுக்கு வந்து. அவர் ஏதோ சினிமாவில் ஸ்டண்ட் மாஸ்டராம். பார்க்கவே பயத்தை உண்டு பண்ணும் தோற்றம். ஹாஸ்டலில் இவளுடைய மானம் போகிறது. பணத்தைக் கொடுக்காவிட்டால் என்னோடு ஒரு இரவு படு என்கிறாராம்.

அந்த ஸ்டண்ட் மாஸ்டரை மிரட்டி அடக்குவதற்காக நீலா அவளுக்குத் தெரிந்த ஒரு அக்காவை ஏற்பாடு செய்திருக்கிறாள்.

‘‘அது என்ன ஒரு அக்கா? யார் அந்த அக்கா? அதுவும் ஒரு அக்காவால் ஒரு ஸ்டண்ட் மாஸ்டரை எப்படி மிரட்டி அடக்க முடியும்?’’

‘‘அந்த அக்கா போலீஸில் சப் இன்ஸ்பெக்டராக இருக்கிறார் கிருஷ்ணா. இதோ என் பக்கத்தில்தான் இருக்கிறார். உன்னோடு பேச வேண்டும் என்கிறார். பேசு.’’

‘‘ஏன் சார், இந்தப் பெண் நீலாவுக்கு என்ன செய்யலாம்? நீங்களே ஒரு வழி சொல்லுங்க.’’

‘‘நான் யோசிச்சுச் சொல்றேங்க.’’

‘‘ஏய், என்னடி இது, கதை எங்கெங்கெயோ போகுது? இந்த அக்காவை உனக்கு எப்படித் தெரியும்?’’

‘‘அதுவா, நானும் உதயாவும் எங்கள் ஊரிலிருந்து சென்னைக்கு வந்து வேலை செய்பவர்கள் யார் இருக்கிறார்கள் என்று ‘நெட்'டில் ஸெர்ச்

பண்ணினோமா; அப்படி ஃப்ரெண்டானவர் அந்த அக்கா.''

''ஓ, அந்த மாதிரி விபரமெல்லாம் கூட நெட்டில் கிடைக்குமா?''

''அது என்னவோ தெரியாது; உதயாதான் நெட்டில் மாஸ்டர் ஆயிற்றே?''

''ஓ, உன் ஊர் எது?''

''ஏய், உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன்? இருந்தாலும் உனக்கு மறதி ஜாஸ்தி. திருவாரூருக்குப் பக்கத்தில் இடும்பாவனம்தான் என் ஊர்.''

இந்தக் கதையைப் பற்றி கிருஷ்ணா தர்மாவிடமும், ஆழ்வாரிடமும் 10 டௌனிங்கில் வைத்து விரிவாக சொல்லிக் கொண்டிருந்தான். அவ்வப்போது அவர்கள் வெஸ்ட்மின்ஸ்டரை விட்டு தி.நகர் 10 டௌனிங்கும் வர ஆரம்பத்திருந்தனர்.

இம்மாதிரி தன்னிடம் வந்து மாட்டும் பெண்கள் எல்லோருமே இப்படி ஒரு போலீஸ் அக்காவையும் தங்களோடு சேர்த்துக் கொண்டு வந்து விடுகிறார்கள் என்றான் கிருஷ்ணா.

அந்தக் கதையின் விபரம்:

கிருஷ்ணாவுக்கு கபிலா என்று ஒரு தோழி. கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறாள். அவளுக்கு ஒரு நண்பன். அவனையே திருமணம் செய்துகொள்வதாகச் சொல்லியிருந்தாள். அவனும் அவளுடைய பேச்சை நம்பி தன்னுடைய மாத வருமானம் (ரூ.60,000/—) அவ்வளவையும் கபிலாவுக்கே செலவு செய்தான். ப்யூட்டி பார்லர் செல்வது, தன்னுடைய நண்பர்களுக்கு (அவளுக்கு பாய் ஃப்ரெண்ட்ஸ் அதிகம்) அவ்வப்போது பரிசுப் பொருட்கள் (ஐபாட் எட்ஸெட்ரா) தருவது, விதவிதமான மிடி, பேண்டீஸ் வாங்குவது என்று அவளுக்கும் ஏகப்பட்ட செலவுகள் இருந்தன. இப்படியே மூன்று வருடம் சுற்றி விட்டு ஒருநாள் அவனுக்கு டாட்டா காண்பித்துவிட்டாள். மூன்று வருடம் சம்பாதித்தும் அவனிடம் இப்போது சல்லிக் காசு கிடையாது. வேலைக்குப் போனால்தான் பைசா. ஆனால் அவன் வேலைக்குப் போகும் மனநிலையில் இல்லை. கிட்டத்தட்ட பைத்தியம் பிடித்தவன் போல் இருந்தான். அவளைக் கொல்ல வேண்டும் என்று வெறியாய் இருந்தது. அப்புறம்தான் கிருஷ்ணாவின்

அறிவுரையைக் கேட்டு அந்தக் கொலைவெறியிலிருந்து வெளியே வந்தான். ஆம். அவனும் கிருஷ்ணாவின் நண்பன்தான்.

அந்தக் காலகட்டத்தில் அவன் தன்னுடைய கையை பிளேட் மற்றும் கண்ணாடித் துண்டினால் கிழித்துக் கொண்டதும் உண்டு. அந்த ரத்தத்தினாலேயே கபிலாவுக்குப் பல பக்கங்கள் கொண்ட கடிதங்களையும் எழுதியிருக்கிறான்.

‘‘ ‘என் சாவுக்கு நீதான் காரணம் என்று எழுதி வைத்து விட்டுத் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்' என்று எழுதியிருக்கிறான் பார் கிருஷ்ணா; உனக்கு யாராவது போலீஸ் அதிகாரியைத் தெரியுமா? இந்த சிக்கலிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியவில்லை...’’

‘‘இவ்வளவு பிரச்சினை எதற்கு? இவன்தான் — சம்பாதிக்கிறான்; உன் மீது உயிரையே விடுகிறான்; இவனையே திருமணம் செய்து கொள்வதுதானே?’’

‘‘என்ன கிருஷ்ணா இது, என்னுடைய உயிர்த்தோழனான நீயே இப்படிப் பேசினால் நான் யாரிடம் போய் என் பிரச்சினையைச் சொல்வது? நான்தான் அடுத்த மாதம் அந்த ராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டு அமெரிக்கா போவதாக இருக்கிறேனே?’’ என்று சொல்லியபடியே அவனுடைய மடியில் தலை வைத்துப் படுத்தவளை அலறி அடித்துக்கொண்டு சமநிலைக்குக் கொண்டு வருவதற்குள் கிருஷ்ணாவுக்கு ஜன்னியே வந்துவிட்டது என்று சொல்லலாம். அதற்கப்புறம்—தான் அவள் சொன்ன அதிர்ச்சியான செய்தியே அவனுக்கு உறைத்தது.

‘‘என்னது, அடுத்த மாதம் கல்யாணமா? யாரடி அது ராமச்சந்திரன்? என்னிடம் சொல்லவே இல்லையே?’’

‘‘நீ எங்கே சொல்ல விடுகிறாய்? எப்போது கேட்டாலும் பிஸி பிஸி என்கிறாய்... உன்னிடம் கேட்காமலேயே நேரில் வந்து பார்த்துச் சொல்லி—விடலாம் என்று வந்தேன். அதுவும் முடியவில்லை. எப்போதும் உன் பக்கத்தில் அந்த செக்யூரிட்டி. (கிருஷ்ணாவின் நெருங்கிய தோழியான நப்பின்னையைத்தான் செக்யூரிட்டி என்கிறாள் கபிலா.) அவளைக் கண்டாலே எனக்கு என்னவோ மாதிரி ஆகி விடுகிறது. அதை எப்படி உனக்கு விளங்க வைப்பது என்று புரியவில்லை.’’

‘‘வேண்டாம் வேண்டாம்; விஷயத்தைச் சொல்.’’

‘‘சரி கேள்; அந்த ராமச்சந்திரனை எனக்கு மூன்று மாதமாகத் தெரியும்; அவனேதான் ப்ரொபோஸ் பண்ணினான்; இப்போது ஸ்டேட்ஸ் போகப் போகிறான்; எனக்கும் வீஸா ரெடி. இந்த நேரத்தில் இந்த ராஸ்கல் இப்படி எனக்கு டார்ச்சர் கொடுக்கிறான். என் சித்தி போலீஸ் இன்ஸ்பெக்டராக இருக்கிறாள். அவளை வைத்து இவனை அடக்க முடியுமா என்று பார்க்கிறேன்.’’

அந்த ரத்தக் கடிதங்களைக் கொண்டுவந்து கிருஷ்ணாவிடம் காண்பிப்பது கபிலாவின் வழக்கம். அவள் வந்து முறையிட்டு விட்டுப்போன கையோடு கபிலாவின் காதலனும் வந்து அவனிடம் தன்னுடைய ரத்த களரியான கையைக் காண்பித்து கொலை, தற்கொலை இந்த இரண்டில் ஏதாவது ஒன்று விரைவிலேயே நடக்கும் என்று அறிவித்துவிட்டுப் போவது வழக்கம்.

அதெல்லாம் இருக்கட்டும்; இப்போது அந்தக் கபிலா என்ன ஆனாள்? அவள் காதலன் என்ன ஆனான்? அந்த ராமச்சந்திரனோடு கபிலா ஸ்டேட்ஸ் போய்விட்டாளா?

அது இன்னொரு கதை. கபிலா இங்கேயே சென்னையில்தான் இருக்கிறாள்; ஸ்டேட்ஸ் போகவில்லை. திடீரென்று ராமச்சந்திரனையும் பிடிக்காமல் போய்விட்டது. அவள் காதலனுக்கு கைக்காயமெல்லாம் ஆறிவிட்டது; மனக்காயம் தான் ஆறவில்லை.

அதுசரி, நீலாவின் போலீஸ் அக்காவால் அந்த ஸ்டண்ட் மாஸ்டரை அடக்க முடிந்ததா?

அது சுவாரசியமான கதை. அந்தப் போலீஸ் அக்காவை வைத்து மிரட்டிய மறுநாளே ஹாஸ்டலுக்கு வந்த அந்த ஸ்டண்ட் மாஸ்டர் நீலாவின் தலைமுடியைப் பிடித்து ‘‘ஏய் அந்தப் பொம்பள போலீஸே என்னோட வப்பாட்டிடீ’’ என்று கத்தி விட்டுப் போனானாம்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஆழ்வார் ‘‘என்னிடம் அவள் சொன்ன கதை வேறு’’ என்றான்.

அவனிடம் தனக்குக் கல்லூரிக் கட்டணம் கட்டுவதற்கு 20,000ரூ வேண்டும் என்றாளாம் நீலாவதி. ஆழ்வார் ஏகப்பட்ட பிஸினஸை வெற்றிகரமாக நடத்தி வருபவன். அவனா இந்த ஜுஜுபி மேட்டருக்கெல்லாம் மாட்டுவான்?

“சரி, கட்டிவிடலாம். என்னுடைய அஸிஸ்டெண்டை பணத்துடன் உன் கல்லூரிக்கு அனுப்புகிறேன். அவருக்குக் கொஞ்சம் ‘கைட்' பண்ணு. அவரே உன் கல்லூரி அலுவலகத்தில் கட்டி, ரசீதை உன்னிடம் கொடுத்துவிடுவா£ர்.”

அதற்கு மேல் நீலாவதியிடமிருந்து ஆழ்வாருக்கு போனே வரவில்லை.

இதையெல்லாம் அதுவரை கேட்டுக் கொண்டிருந்த தர்மா “ஆமாம், எனக்கு ஒரு சந்தேகம். இதெல்லாம் நீலாவதியின் முதல் காதலன் உதயாவுக்குத் தெரியாமலா இருக்கும்?” என்றான்.

அதற்கு ஆழ்வார் “எனக்கு என்னவோ சந்தேகமா இருக்கு, அந்த உதயா இந்தப் பெண்ணை வைத்து பிஸினஸ் கிஸினஸ் பண்ணுகிறானோ என்று... ம்... கல்யாணம் ஆவதற்குள் இவள் நூறு ஓலாவது வாங்கிடுவான்னு நினைக்கிறேன்...” என்றான்.

அப்போது கிருஷ்ணா சிரித்துக்கொண்டே தர்மாவைப் பார்த்து “உன்னிடம் இதுபற்றி மூச்சுகூட விடவேண்டாம் என்று சொன்னாள்” என்றான்.

“ஏனாம்?"

“அவருக்குத் தெரிஞ்சா ரொம்ப ஆடுவாரு என்றாள்.”

“அப்படீன்னா?”

“நீ இதை வைத்துக் கதை கிதை எழுதிவிடுவாயோ என்பதைத்தான் அப்படிச் சொன்னாள் என்று நினைக்கிறேன்...” என்று சொல்லிவிட்டு நப்பின்னைக்கு எஸ்ஸெம்மெஸ் செய்ய ஆரம்பித்தான் கிருஷ்ணா.

19

அமூ தே வக்ஷோஜௌ அம்ருதரஸமாணிக்யகுதுபௌ

ஸநதேஹஸ்பந்தோ நகபதிபதாகே மநஸி ந:/

பர்வதராஜனான ஹிமவானைப் பிரஸித்தப்படுத்துகின்ற விஷயத்தில் த்வஜ படம் போல உள்ள ஹே பர தேவதையே! உன்னுடைய இந்த இரண்டு ஸ்தனங்களும் அதி மதுரமான அம்ருதத்தால் நிரப்பப்பட்ட மாணிக்க ரத்னத்தினால் ஆன குடுக்கைகளாக இருக்கின்றன. எங்கள் மனதில் இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் சந்தேகத்துக்கு இடமில்லை.

ஆதி சங்கரர்:

ஸௌந்தர்ய லஹரீ: ஸ்லோகம் 73

நான் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அவன் எங்கள் பள்ளி ஆசிரியரின் மகன். ஒன்பதாம் வகுப்பில் இருந்த அவன் என்னை ஒருநாள் யாரும் இல்லாத நேரத்தில் சுவரில் அழுத்தி முத்தமிட்டான். நான் பயந்து போய் அழுதேன். ஆனால் யாரிடமும் சொல்லவில்லை. சொன்னால் நம்புவார்களா என்று தெரியவில்லை. என்னையே திட்டினால் என்ன செய்வது என்ற பயம். நான்கு ஐந்து மாதங்கள் இந்த வதை தொடர்ந்து கொண்டிருந்தது. போகப் போக என்னுடைய ஸ்கர்ட்டுக்குள் எல்லாம் கை விட்டு என்னென்னவோ செய்கிறான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. யாரிடம் சொல்வது என்றும் தெரியவில்லை. அவனை என்ன செய்வது, எப்படி இதிலிருந்து தப்புவது எதுவும் புரியவில்லை. எனக்கு மட்டும்தான் இப்படி நடக்கிறதா, அல்லது, எல்லா மாணவிகளுக்கும் நடக்கிறதா? அப்படித் தெரியவில்லையே? அவர்களெல்லாம் பயமே இல்லாமல் எப்போதும் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கிறார்களே? இதனால் எனக்குப் படிப்பிலும் கவனம் செலுத்த

முடியவில்லை. எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். டீச்சர் கேட்பதே காதில் விழுவதில்லை — ‘என்னடி, பகலிலேயே தூக்கமா?’ என்று கேட்டு தலையிலேயே நச்சென்று கொட்டுகிறாள். வகுப்பில் எல்லோரும் கொல்லென்று சிரிக்கிறார்கள். அடிக்கடி இப்படி நடக்கிறது. நல்லவேளையாக நான் ஐந்தாம் வகுப்பு மாறும்போது, மாணவிகளுக்கென்று தனியாகப் பள்ளிக்கூடம் கட்டப்பட்டு எங்களை அங்கே மாற்றிவிடுகிறார்கள். அந்தப் பையனிடமிருந்து எனக்கு விடுதலை. ஆனால் தெருப்பையன்களின் தொல்லை ஆரம்பித்து—விடுகிறது. என்னைத் தனியாக அழைத்துக்கொண்டுபோய் அவர்களுடைய ஆணுறுப்பால் என்னுடைய பெண்ணுறுப்பில் தேய்க்கிறான்கள். அந்த நாய்களின் அசிங்கமான விரல்கள் என் உடம்பு பூராவும் ஊர்கின்றன. எனக்கும் வேறு வழியில்லை. அம்மாவும் அப்பாவும் வரும்வரை எங்கள் வீடு பூட்டியிருக்கும். பள்ளிக்கூடப் பையை வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டு அம்மாவோ அப்பாவோ அண்ணனோ வரும்வரை நான் அந்தத் தெருவில்தான் அலைந்து கொண்டிருக்க வேண்டும். இப்போது ஏன் இதெல்லாம் ஞாபகம் வருகிறது என்று புரியவில்லை. என் கைகால்கள் நடுங்குகின்றன. பேச முடியவில்லை. அப்படியே வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்து—விடுகிறேன். பிரக்ஞை வந்து பார்த்தால் நான்கு மணி நேரம் ஆகிவிடுகிறது. நான்கு மணி நேரம் எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் எதையோ பார்த்துக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? எனக்குள் என்ன ஆகிக்கொண்டிருக்கிறது? உன் நினைவால் எனக்கு சித்தப்பிரமை ஆகிக்கொண்டிருக்கிறதா? திடீரென்று எனக்கு பத்து வயதுச் சிறுமியாகி விட்டது போல் —இருக்கிறது. என் தெருப் பையன்கள் என்னைக் கெடுக்கும்போது எப்படி பயந்து நடுங்குவேனோ அதே பயம் என் தேகத்துக்குள் ஊடுருவுகிறது. நான் தளர்ந்து போகிறேன். பயம் என் ரத்தத்தில் புகுந்து ஓடுவது தெரிகிறது. எலும்பு மஜ்ஜைக்குள் போய் தங்கிவிட்டது இந்த பயம்.

நான் பார்த்த எல்லா ஆண்களுமே இப்படித்தான் செய்தார்கள். அம்மாவின் உறவினர்கள், அப்பாவின் நண்பர்கள், அண்ணனின் நண்பர்கள், தெருவில் இருந்த பையன்கள் என்று அத்தனை ஆண் நாய்களும் என் பெருத்த முலைகளையும் குறியையும் தடவித் தடவிப் பார்த்தன. அதெல்லாம் தவறான ஸ்பரிசம் என்றுகூட அப்போது எனக்குத் தெரிந்து இருக்கவில்லை. இதை என் பெற்றோரிடம் சொல்லியிருக்—கலாம். பயம் என்னைத் தடுத்தது. என்னிடம் ஏதாவது தவறு இருந்தால்? அவர்கள் வேறு தங்கள் குழந்தைகளின் நல்வாழ்விற்காக பணத்தைத் தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள்.

நான் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போது ஒரு நாள் பள்ளிக்கூடம் செல்வதற்காக பஸ்ஸில் அமர்ந்திருக்கிறேன். ஜன்னல் ஓர இருக்கை. அப்போது ஒருவன் பஸ்ஸிலிருந்து இறங்கினான். இறங்கியவன் என் இருக்கையின் பக்கம் வந்து என் முலைகளைக் கசக்கிவிட்டு ஓடிவிட்டான். பஸ்ஸில் இருந்த அத்தனை பேரும் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கூட அவனைப் பிடித்து உதைக்க முன் வரவில்லை. அந்தக் கணத்தை இப்போதும் என்னால் மறக்க முடியவில்லை. அந்தக் கணமே பஸ்ஸிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்போல் இருந்தது. தரை பிளந்து என்னை உள்வாங்கிக் கொள்ளாதா என்று இருந்தது. பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் நரகமாக இருந்தது. நான் ஒன்றும் பெரிய அழகி அல்ல. ஆனால் என் வயதுக்கு எனக்கு இருந்த முலைகள் பெரியவை. அந்த முலைகளை நான் வெறுத்தேன். அவைகளை அறுத்துப் போட்டுவிட வேண்டும்போல் இருந்தது. அப்படிச் செய்துவிட்டால் இந்தத் தினசரி சித்ரவதை இருக்காது. பள்ளிக்கூடம் செல்வதற்கு சைக்கிள் வாங்கிக் கொடுக்கும்படி அம்மா அப்பாவிடம் கேட்டதற்குத் திட்டும் அடியும்தான் கிடைத்தது. ஒரு சிறுமியாக நான் படும் அவஸ்தைகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பஸ்ஸில் செல்லும் எல்லா சிறுமிகளுக்கும் இப்படித்தான் நடந்துகொண்டிருக்கிறது என்பதை நான் புரிந்துகொண்டேன். அதனால்தான் அவர்கள் பதுங்கிப் பதுங்கிச் செல்கிறார்கள். அதனால்தான் அவர்களின் நடவடிக்கைகளில் ஒரு பணிவும் அடக்கமும் தென்படுகின்றன. இதெல்லாம் நம் ஒருத்திக்குத்தான் நடக்கிறது; காரணம் நம்மிடம் ஏதோ தவறு இருக்கிறது என்றே அத்தனை சிறுமிகளும் நினைத்தோம்.

காலப்போக்கில்தான் எனக்குத் தெரிந்தது, என்னைப் பாதுகாத்துக்கொள்ள என்னைத் தவிர வேறு யாரும் இல்லை என்று. இந்த எண்ணம் வந்தவுடன் நான் வேறு ஆளாக மாறினேன். யாராவது என்னை இடித்தால் என் ஹீல்ஸ் செருப்புகளால் அவர்களின் கால்களை பலம் கொண்ட மட்டும் நசுக்கினேன். கையில் குண்டூசி வைத்துக் கொண்டு அப்படி இடிக்கும் ஆண்குறிகளைக் குத்தினேன். எனக்கு மட்டுமல்ல; பஸ்ஸில் எந்தப் பெண்ணுக்கு இப்படி நடந்தாலும் அவர்களின் சார்பாக இந்த அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினேன்.

இப்போது நினைத்துப் பார்க்கும் போது, என் குடும்பத்தில் மிகவும் மரியாதைக்குரியவர்களாகக் கருதப்பட்டவர்கள் கூட என்னிடம் இந்தக் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது ஞாபகம் வருகிறது. இந்தியாவில் ஒரு பெண்ணாக வாழ்வது அவ்வளவு சுலபம் அல்ல. இங்கே பெண்களை ஒரு டில்டோவைப் போலவே கையாள்கிறார்கள்.

20

Hamlet : I did love you once.

Ophelia : Indeed, my lord, you made me believe so.

Hamlet : You should not have believ'd me, for virtue cannot so

inoculate our old stock but we shall relish of it. I lov'd you not.

Ophelia : I was the more deceiv'd.

Hamlet : Get thee to a nunn'ry, why woulds't thou be a breeder of

sinners?

Hamlet Act 3, Scene 1.

செ லினுக்குப் பிறகு அதே போல் வந்து சேர்ந்தாள் நேஹா. தில்லிக்காரி. வழக்கம் போல் அவனுடைய எழுத்தினால் வசீகரிக்கப்பட்டு வந்தவள். அப்படியே ஒரு வாசகியாக மட்டுமே இருந்திருக்கக் கூடாதா? அதென்னவோ தெரியவில்லை, மிதாஸ் தொட்டால் பொன்னாவதைப் போல் இந்தப் பெண்களெல்லாம் அவன் தொட்டால் வசியமாகி விடுகிறார்கள். அதைத் தொடர்ந்து ஒரே காதல் கடிதங்கள். வெறித்தனமான அன்பிலும் பிரியத்திலும் தோய்ந்த சில காரியங்கள். அதிகம் போனால் ஒரு வருடம். அதோடு ரயில் விபத்துக்—குள்ளாகிவிடும். இப்படி எல்லா பெண்களும் சொல்லி வைத்ததுபோல் ஒரே மாதிரி இருப்பதில் மிகவும் சலிப்படைந்தான் தர்மா. ஆனால் நேஹா கொஞ்சம் வித்தியாசமாக இருந்தாள். அவளிடம் பொஸஸிவ்னஸ் என்பது மருந்துக்குக் கூட இல்லை. ஒருமுறை அவளுடைய

தோழி ஒருத்தியைக் கூட்டிவந்து ‘த்ரீஸம்’கூட நடத்தினார்கள். அவனுக்கு யாராவது சிநேகிதிகள் இருந்தால் “என்ன, அவளை முடிச்சிட்டியா? இன்னும் இல்லியா, என்னடா ஸ்லோ கோட்சாக இருக்கே? சிக்கிரம் முடிடா” என்பாள். பேச ஆரம்பிக்கும்போதே “என்ன, போன வாரம் யாரையாவது போட்டியா? என்னது? இல்லையா? நீ வேஸ்ட்” என்பாள்.

ஒருமுறை அவள் வேலை நிமித்தமாக ஃபிரான்ஸ் சென்றிருந்தபோது அவளைப் போலவே நாமும் கேட்கலாம் என்று நினைத்து “அங்கே யாராவது கிடைத்தானா உனக்கு?” என்று கேட்டபோது சளைக்காமல் பதில் சொன்னாள். “அதான்டா பார்க்கிறேன். இங்க கறுப்பனுங்க நிறைய இருக்கானுங்க... அவனுங்களுக்கு ‘அது' ரொம்பப் பெரிசுன்னும் தெரியும். ஆனா எனக்கு ஒருத்தனும் மாட்ட மாட்டேங்குறான். நம்மளா போய் கேட்க முடியாதுல்ல?”

மூன்று மாதம் ஃபிரான்ஸில் தங்கியும் வர்ஜினாகவே திரும்பிய அவளிடம் அதுபற்றி மேலும் விசாரித்துத் தெரிந்து கொண்டது என்னவென்றால், அங்கே உள்ள கறுப்பர்கள் பெரும்பாலும் வட ஆஃப்ரிக்க தேசங்களிலிருந்து வந்து அகதிகள். படிக்காதவர்கள். நம் ஊர் சேரி மக்களைப் போன்றவர்கள். என்னதான் சாமான் பெரிது என்றாலும் ‘க்ளாஸ்' என்று ஒன்று இருக்கிறதல்லவா? அது இல்லையென்றால் டில்டோவே போதுமே, ஆண்கள் எதற்கு? செக்ஸ் என்பது சாமானைப் பொறுத்த விஷயம் அல்ல. அதில் முக்கியமாகச் செயல்படுவது மனம்.

இன்னும் பெரிதாக லெக்சர் கொடுத்தாள். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. “மனம் கினமெல்லாம் புரிகிறது என்றாலும் வாழ்—நாள் பூராவும் கலவிக்குப் பெண் இல்லாத கபோதியாக வாழும் எனக்குத் தேவை ஒரு அழகிய யோனிதான்” என்றான் தர்மா.

“போடா முட்டாள்; தலகாணியை அடுக்கி செய். அது அதைவிட நன்றாக இருக்கும்” என்றாள்.

அதையும் முயற்சி செய்திருக்கிறான். தலையணைகளை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி செய்யும் முறை. யாரும் கற்பிக்கவில்லை. அவனுடைய சுய

செக்ஸ் பரிசோதனைகளில் அதுவும் ஒன்று. இதற்குத்தான் சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை என்கிறார்களோ? ஆனால் அதுவுமே ஒரு தனிமை உணர்வையும் விரக்தியையும் எரிச்சலையுமே உண்டு பண்ணியது. அதுசரி, இந்தத் தலையணை மேட்டரெல்லாம் இவளுக்கு எப்படித் தெரியும்?

''இதுவரை சுமார் 40 பேரைப் போட்டிருக்கிறேன்'' என்றாள்.

முதல்முதலாக ஒரு பெண்ணிடமிருந்து இதுபோன்ற வார்த்தைகளை செவி மடுக்கிறான். ஆனால் இவ்வளவெல்லாம் பேசியும் கொஞ்ச நாளில் பத்தாம் கிளாஸ் படிக்கும் சமத்துப் பெண் மாதிரி ஆகிப் போனாள். உன்னை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது; உன் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் போல் இருக்கிறது; இத்யாதி, இத்யாதி. ஒரு நாளில் பத்து மெயில்கள் அனுப்புவாள். இவ்வளவுக்கும் அவன் எந்த மெயிலுக்கும் பதில் எழுதுவதில்லை. அதெல்லாம் அவனுக்கு அலுத்துவிட்டது. எத்தனை காலத்துக்குத்தான் வார்த்தையிலேயே புணர்ந்து கொண்டிருப்பது? No more words... இப்படிக் கடிதம் எழுதுவது, போனில் மணிக்கணக்காக கடலை போடுவது, ஒரு நாளைக்கு நூறு எஸ்ஸெம்மெஸ் கொடுப்பது – இதிலெல்லாம் அவனுக்கு ஆர்வம் போய்விட்டது. அவளிடமிருந்து வந்த ஓராயிரம் கடிதங்களில் ஒருசில இவை:

''இந்த மெயில் உனக்கு வரும் பல நூறு மெயில்களில் ஒன்றாகக்கூட இருக்கும்... உனக்கு இருக்கும் பல தோழிகளில் நானும் ஒருத்தியாக இருக்கலாம்... ஆனால் எனக்கு ஏற்பட்டிருக்கும் முதல் அனுபவம் நீ... இதுவரை எதற்காகவும் நான் இவ்வளவு ஆசைப்பட்டதில்லை... ஏங்கியதும் இல்லை. இது காதலா, காமமா, நட்பா என்ற கேள்வியைக் கேட்டுக் கேட்டே எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கிறது.

உன் நினைவை ஒதுக்கவும் முடியவில்லை; சுமக்கவும் முடியவில்லை. தமிழ்ப் புத்தகங்களே அதிகம் படித்திருக்காத நான் இப்போது உன் புத்தகங்களை மட்டுமே படித்துக் கொண்டிருக்கிறேன். உன் புத்தகங்களைப் படிக்கும் போது உன்னோடு பேசிக்கொண்டிருப்பது போல் இருக்கிறது. அநேகமாக கொஞ்சம் நாளில் சட்டையைக் கிழித்துக் கொண்டு அலையப் போகிறேன் என்று நினைக்கிறேன்.

உன்னை நேரடியாகத் தெரியாமல் உன் நாவலைப் படித்திருந்தால் கொஞ்சமும் எனக்கு அது பிடித்திருக்காது. ஆனால், உன்னிடம் பேசிய பிறகு உன்னுடைய ஒவ்வொரு எழுத்தும் எனக்கு ஒவ்வொரு விதமாக அர்த்தமாகிக்கொண்டே போகிறது. காதலையும், காமத்தையும் இதை விட அழகாக யாராலும் சொல்ல முடியுமா? காதல், காமம் இரண்டும் வயது, உறவு, இடம் எல்லாவற்றையும் தாண்டியது என்று சொல்லுவேன்... அதை உன்னுடைய வாழ்க்கையிலும் எழுத்திலும் பார்க்கும் போது உன் மேல் எனக்கு இன்னும் ஈடுபாடு அதிகமாகத்—தான் ஆகிறது. எல்லாப் பெண்களிடமும் இதே வசனத்தைக் கேட்டுக் கேட்டு உனக்கு சலித்தே போயிருக்கும்.

பயங்கரமான திமிர் பிடித்தவள் என்று என்னைத் திட்டுவார்கள். ஆனால் இன்று உன்னிடம் இப்படிக் கெஞ்சிக் கொண்டிருக்கிறேன். நூறு முறை உன் இணையதளத்தைத் திறந்து பார்க்கிறேன். மெயில் பாக்ஸை ஆயிரம் தடவை அமுக்கி விட்டேன். உன்னிடமிருந்து ஒரு எஸ்.எம்.எஸ். வராதா என்று எத்தனை முறை போனைப் பார்க்கிறேன் தெரியுமா? நீ ரொம்ப பிஸி என்று தெரியும். இருந்தாலும் எனக்காக ஒரு இரண்டு நொடி ஒதுக்கியிருக்க மாட்டாயா என்ற நினைப்பிலேயே மனம் ஏங்கிப் போகிறது. ஆண்களையே மதிக்காத நான் இன்று உன்னுடைய ஒரு வார்த்தைக்காக ஒவ்வொரு நிமிஷமும் காத்துக் கொண்டிருக்கிறேன். இதை டைப் பண்ணும்போது கூட 'ஏன் இவனிடம் போய் இப்படிக் கெஞ்சிக்கொண்டிருக்கிறாய்?' என்று என் ஈகோ என்னிடம் கேட்கிறது.

To love and to be loved is a wonderful feeling... அது இப்போது எனக்குப் புரிகிறது...

இப்போது எனக்கு இருக்கும் ஒரே நினைவு உன்னை எப்படிப் பார்ப்பது என்பதுதான். உன்னை ஒரு தங்கத் தட்டிலே வைத்துத் தாங்க வேண்டும் Trust me... I will go any far to do that...

வாழ்க்கையில் எதாவது குறை இருப்பவர்கள்தான் இப்படிச் செய்வார்—கள். ஆனால் எனக்கு எல்லாமே இருக்கிறது. அதைக் கொஞ்சம் உன்னோடு

பகிர்ந்து கொள்ள வேண்டும். காரணம் கேட்காதே... என்னால் உன்னிடம் இனிமேல் பொய் சொல்ல முடியாது...

இன்னும் ஆபீஸ் வேலை ஒன்றுகூட செய்யவில்லை. இவ்வளவு நேரம் இதைப் பொறுமையாகப் படித்ததற்கு நன்றி... உன்னிடமிருந்து நான் எதிர்பார்ப்பதும் ஒன்றுமில்லை... அதிக பட்சம் ஒரு மெயில்; அவ்வளவுதான்.

நீ இந்த மெயிலைத் திருப்பிப் படித்தாலும் நான் சொல்ல வந்த வாக்கியம் இருக்காது. ஆனால் அந்த உணர்வு கட்டாயம் இருக்கும். ஒரு படைப்பாளிக்கு அது நன்றாகவே புரியும். ஆகவே இதை இங்கே முடிக்கிறேன். மீண்டும் தொடரும் என்ற நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும்...''

''உன்னை என்னிடம் காணவில்லை. நீ ஏதோ தொலை தேசத்தில் இருப்பதுபோல் உணர்கிறேன். என் நினைவுகள் உன்னைச் சென்று அடைய முடியாமல் என்னிடம் திரும்பு கின்றன. உன்னைத் தொட முடியாமல் திரும்பும் நினைவுகள் என் கால்களில் உயிர் விடுகின்றன. அவை உயிர் பெற வேண்டுமானால் உன் சுவாசம் வேண்டும்; அவை மீண்டும் மலர வேண்டுமானால் உன் ஸ்பரிசம் வேண்டும்; உன் ஒரு பார்வையாவது வேண்டும் அவை மீண்டும் என்னுள் கரைய. வா, வந்து உன் மந்திரத்தால், மடிந்து கொண்டிருக்கும் என் நினைவுகளைப் புதுப்பித்துக் கொடு.''

''உன்னைக் கொன்றாலும் தகும். என்னை இப்படி நீ கொல்லும்போது உன்னைக் கொல்வது தவறில்லை, என்ன, நான் ஒரு அகிம்சைவாதி என்பதால் உயிர்க்கொலை தவறென்று உன்னை உயிருடன் விடுகிறேன்.''

''உன்னைச் சந்திக்காமலே இருந்திருக்கலாமோ? உன்னால் நான் இழக்கப் போவது என்னவெல்லாம் என்று தெரிந்தும் என் மனம் என் சொல் கேட்க மறுக்கிறது. நீ என்னை ஆழ்நிலை மயக்கத்தில் வைத்து வசியம் செய்து உன் ஏவல் தேவதையாய் மாற்றிவிட்டாய் . நான் என்னைக் காத்துக்கொள்ள உன்னைக் கொன்றாலும் தகும்.''

''நீண்ட நாள் கழித்து உன் குரல் கேட்டவுடனே என் கண்கள் கலங்கிவிட்டன. ஏனென்று தெரியவில்லை. உன்னை ரொம்ப ரொம்ப மிஸ் பண்ணுகிறேன். ஏன்டா இந்த சிலந்தி வலையில் விழுந்தோம் என்று இருக்கிறது. ஒரு புதிய விளையாட்டைக் கற்றுக் கொடுத்தாய். ஆனால் அந்த விளையாட்டின்

கட்டங்களிலிருந்து எப்படி வெளியே வருவது என்பதை நீ கற்றுக் கொடுக்கவில்லை. அபிமன்யுவின் சக்கர வியூகம் போல் தெரிகிறது. என்னைச் சுற்றியிருக்கும் எல்லாமே என்னைக் கொன்றுவிடும் போல் இருக்கிறது. நீ காட்டிய இந்தப் புது உலகம் ஒரு அக்டோபஸைப் போல் என்னை நெருக்குகிறது. என்னை விடுதலை செய்.''

''கவிதை எழுதுவதற்கு ஒரு தனித்துவமான மனநிலை வேண்டும். எதன் மீதாவது அபரிமிதமான காதல், காமம், ஏக்கம் என்று ஏதாவது ஒன்று இருக்க வேண்டும். அந்த வகையில் நான் சீக்கிரம் கவிதையோ அல்லது கவிதை மாதிரி ஒன்றோ எழுத ஆரம்பித்துவிடுவேன் என்று நினைக்கிறேன். இந்தக் கொடுமைக்கு மற்றவர்களை ஆளாக்கி விடாதே.''

''அது என்னவோ தெரியவில்லை. ஏதோ இதுதான் என்னுடைய முதல் உறவு, முதல் காதல் என்பதைப் போன்ற ஒரு புத்துணர்ச்சியும் சந்தோஷமும் கிறக்கமும் பரவுகிறது. இந்த வயதில் இப்படி வரும் விடலைப் பருவத்து உணர்வுகளை நினைத்தால் சிரிப்பு வருகிறது.''

''என்னைச் சுற்றியுள்ள உலகை இதுவரை பார்த்த முறையில் அல்லாமல் வேறு விதமாகப் பார்க்கக் கற்பித்த உனக்கு எப்போதும் நன்றி சொல்லிக்கொண்டே இருக்கிறேன்...''

''உன்னைத் தேடுவதிலும் ஒரு சுகம் இருக்கிறது. தேடும் விஷயம்— கிடைக்கும்போது அதன் சுகமும் தனிதானே? உன் குரல் கேட்கும்போது, உன்னைத் தேடிய களைப்பெல்லாம் போய்விடுகிறது. பார், எனக்கு எத்தனை வேலை இருந்தாலும் உன்னைச் சுற்றியே என் மனம் வட்டமடித்துக் கொண்டிருக்கிறது. நீ என்ன மேஜிக் செய்தாயோ, எவ்வளவு வேலை இருந்தாலும் அரை மணிக்கு ஒருமுறை உனக்கு ஒரு மெயில் அனுப்பிவிடுகிறேன்...''

''நான் ஒரு அழகான கனவுலகத்தில் இருக்கிறேன். அதில் நீயும் நானும் மட்டும்தான் இருக்கிறோம். அங்கே காதலும், காமும் மட்டும்தான் இருக்கிறது. சிரிப்பும், சிணுங்கலும், அயராத புணர்ச்சியினால் ஏற்படும் வலியின் சத்தமும் மட்டும்தான் கேட்கிறது. வேறு எதுவும் அந்த உலகத்தில் கிடையாது. சாப்பாடு கிடையாது; தூக்கம் கிடையாது; துணிமணிகள் கிடையாது; மனிதர்கள்

கிடையாது; நாள் காட்டி கிடையாது; கடிகாரம் கிடையாது; வேறு எதுவுமே அங்கில்லை. அந்த உலகம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறது; அது என் வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் கொண்டாட்டமாக்குகிறது. இது உனக்குப் புரியுமா என்று தெரியவில்லை. அந்த உலகத்தின் கடவுள் நீ; அதை எனக்கு சிருஷ்டித்துக் கொடுத்தது நீ; அதை இயங்க வைத்தது நீ; அதைத் தகர்க்கும் சக்தி உடையவனும் நீயே; அதனாலேயே நீ கவனமாக இருக்க வேண்டும். அந்த உலகம் தகர்ந்தால் நானும் தகர்வேன்; அதை கவனத்தில் கொள். உன்னை நேசிக்க மட்டுமே எனக்குத் தெரியும். உன் மீது கோபப்படவோ, எரிச்சல் அடையவோ எனக்குத் தெரியாது.''

"I like your energy and passion towards writing. அப்படியே கட்டிப் பிடித்து ஒரு முத்தம் கொடுக்கலாம் போல் தோன்றுகிறது. இப்போதெல்லாம் உன்னை நினைத்தாலே உன் முத்தமும் கலவியும்தான் ஞாபகம் வருகிறது. திரும்பத் திரும்ப உன் முத்தம் வேண்டும். The most passionate kisses, that run deep inside the soul sweetie, the ones that you gave. I miss them a lot. என்னருகில் இல்லாத குறைக்கு உன் புத்தகங்கள்தான் ஒரே ஆறுதல். உன்னைப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது; ஆனால் எப்போது என்றுதான் தெரியவில்லை. இதை நான் டைப் செய்து கொண்டிருக்கும்போது இரவு மணி 3.30. தூங்க வேண்டும் என்று முயற்சி செய்தேன் முடியவில்லை. இந்த நேரத்திலும் நீ எழுதிக்கொண்டுதான் இருப்பாய் என்று நினைக்கிறேன். அப்படி நீ எழுதும்போது நான் உன்னருகில் இருந்து மெதுவாக உன் தலையைக் கோதிவிட வேண்டும்போல் இருக்கிறது. ஆனால் ஒரு நல்ல விஷயம்; அப்படிச் செய்வது உன் கவனத்தைத் திருப்பாது. எதுவுமே நடக்காதது போல் நீ எழுதிக்கொண்டிருப்பாய். இதையெல்லாம் நான் வெறும் கற்பனையில்தான் காண வேண்டியிருக்கிறது.''

''என்னை விட உனக்கு ஒரு நல்ல, அழகான பெண் கிடைக்க வேண்டும். நான் உனக்குத் தகுதி இல்லை. கிருஷ்ணா உன்னைப் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்குப் பேரழகியான ஒரு பெண் உனக்குக் கிடைக்க வேண்டும்.''

''உன் கவிதைகளைப் படித்தேன். அற்புதம். அந்த வார்த்தை போதுமா என்று தெரியவில்லை. உணர்ச்சிகளின் பிரவாகம். திரும்பத் திரும்பப் படித்தேன்.

அதிலிருந்து வெளியே வர முடியவில்லை.''

''ஏய், நீ என்னை என்ன செய்துவிட்டாய்? தலைக்கு மேல் எனக்கு வேலை இருக்கிறது. ஆனால் நான் உனக்கு மெயில் அனுப்பிக்கொண்டிருக்கிறேன். அதுவும் ஒவ்வொரு 20 நிமிடத்துக்கும்.

ஏன் என்னுடைய சிந்தனை முழுவதையும் அபகரித்துக் கொண்டாய்?

என்னுடைய கடிகாரத்தின் ஒவ்வொரு நிமிடத்தையும் ஏன் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிறாய்?

ஏன் —என்னை இப்படிப் பைத்தியமாக்கிவிட்டாய்?

உன்னையும் என்னையும் பிரிக்கும் இந்த தூரம் என்னைக் கொல்கிறது...''

''இந்த உலகமே என் பக்கத்தில் இருந்தாலும் நீ இல்லாதது என்னைக் கொல்கிறது. உன்னோடு பேசாமல், உனக்கு எழுதாமல் என்னால் இருக்கவே முடியவில்லை. அதிலும் கொடுமை, உன்னிடமிருந்து எந்த பதிலும் வராமல் இருப்பது. இப்படி உன்னைத் தொந்தரவு செய்வதற்காக நான் மிகவும் வருத்தமடைகிறேன். உன் வாழ்வில் குறுக்கிட்டுக்கொண்டிருக்கும் எண்ணற்ற பெண்களில் நான் ஒருத்தி என்று —எனக்கு நன்றாகவே தெரிந்தாலும் என் மனதின் ஏதோ ஒரு மூலையில் நானும் ஒரு பெண்ணாகத்தானே இருக்கிறேன்? 'உன்னிடமிருந்து எனக்கு எதுவுமே வேண்டாம்; உனக்குத் தருவதற்காக மட்டுமே உன் வாழ்வில் நான் வந்திருக்கிறேன்' என்று அடிக்கடி நான் சொன்னாலும் இன்று என் மனம் எனக்குச் சொல்கிறது, நான் உன்னிடம் அப்படிச் சொன்னது பொய் என்று. ஏனென்றால், உன்னிடமிருந்து பதில் வராதது எனக்கு மிகப் பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறதே?''

''செல்லமே, என் வாழ்வில் நடந்த மிகப் பெரிய அற்புதம் நீ. எந்தக் காரணத்துக்காகவும் நான் இதை இழக்க விரும்பவில்லை. நீ எனக்கு எப்போதும் எந்தக் காலத்திலும் வேண்டும். என்னோடு இரு. நான் உனக்கு சொர்க்கத்தைத் தருகிறேன்.

நாளை என்ற நாளுக்காக ஒவ்வொரு நொடியும் பரபரப்புடன் காத்திருக்கிறேன். உன்னைப் பார்க்க வேண்டும். உன் அணைப்பில் நான் கரைய வேண்டும். உன்னை முத்தமிட வேண்டும். உன்னை நான் உணர வேண்டும். உன்னோடு

நான் இருக்கப் போகும் ஒவ்வொரு நொடியையும் வாழ்நாள் முழுவதும் என் நினைவுகளில் சேமித்து வைப்பேன்...''

''இதை நீ படிக்கும்போது உன்னுடைய வழக்கமான எழுத்து உலகத்துக்குச் சென்றிருப்பாய். இரண்டு நாளும் எப்படிப் போனதென்றே தெரியவில்லை. உன்னோடு இருந்த ஒவ்வொரு நிமிடமும் என்னால் எப்போதுமே மறக்க முடியாதது. இப்போது மீண்டும் ஒரு வெறுமையை உணர்கிறேன். எல்லாம் இருந்தும் ஏதோ ஒன்று இல்லாதது போல் இருக்கிறது. உனக்கு எப்படி இருந்தது என்று தெரியவில்லை. I was absolutely enjoying every moment.

நீ செலினையும் மற்ற பெண்களையும் எப்படி உன்னுடைய நாக்கு மற்றும் விரல்களைக் கொண்டு பரவசப்படுத்தியிருப்பாய் என்று நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்தேன். நீ மற்ற பெண்களோடு சல்லாபம் கொண்டிருப்பது போல் கற்பனை செய்து பார்த்தேன். It was ecstatic. அந்த நினைவே எனக்குப் பரவசமாக இருந்தது.

வெளிப்படையாகச் சொன்னால், உன்னை பலவந்தப்படுத்தியது போல் உணர்ந்தேன். ஆனால் ஏன் அப்படிச் செய்தேன் என்றால், பின்னால் வருத்தப்படுவதை விட கிடைக்கும்போதே சுயநலமாக இருந்துவிடலாம் என்றுதான். I am getting accustomed to your quiteness and non responsiveness which I believe is your way, so it be.''

''உனக்கு என்னைப் பற்றி ஏற்கனவே தெரியும். இருந்தாலும் சொல்கிறேன். நீ செலின் பற்றியும் மற்ற பெண்களைப் பற்றியும் சொல்லும்போது எனக்குப் பொறாமை உணர்வு ஏற்படவில்லை. ஆனால் கிருஷ்ணா பற்றிச் சொன்னபோது பொறாமைப்பட்டேன். ஏனென்று தெரியவில்லை. நான் எப்போதெல்லாம் உனக்கு ஏதாவது காரியம் செய்கிறேனோ அப்போதெல்லாம் அந்த சனியன் பிடித்தவன் அதைவிட நன்றாகச் செய்துவிடுகிறான். அவனோடு ஒரு ரகசிய யுத்தம் செய்வது போல் இருக்கிறது எனக்கு. அவனிடமிருந்து உன்னைப் பிரிக்க வேண்டும்.''

''உன் கண்களைப் பார்த்த பிறகு என்னால் எதுவுமே பேச முடியவில்லை. உன்னுடைய முத்தங்களை ஒரு பெட்டகத்தில் போட்டு அடைத்துக்கொள்ள

முடியும் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்? You are a damn great kisser. Most sensuous and terrific kisses. Missing you badly.''

''எனக்கு எப்போதும் expressive–ஆக இருக்கப் பிடிக்கும். கோபம், சந்தோஷம் எதுவாக இருந்தாலும். ஆனால் உன்னிடம் நான் கொண்டுள்ள காதல், பாசம், அன்பு, நேசம் எதையுமே முழுதாகக் காட்ட முடியவில்லையோ என்று தோன்றுகிறது. Do you feel the passion I have for you?''

''இப்போது மதிய உணவு சாப்பிடும் போதுதான் கவனித்தேன் எனது உள்ளங்கையில் உன் பெயரை எழுதி இருக்கிறேன் என்று. என்னையும் அறியாமல் அலுவலக வேலையின் இடையில் உன் பெயரை எழுதி இருக்கிறேன், சிறு பிள்ளை போலே. எனக்கே என்னைப் பார்த்தால் சிரிப்பு வருகிறது. இப்படியா ஒருத்தி தன் நிலை மறந்து இருப்பாள் என்று. இதை என்னவென்று சொல்வது?

அப்புறம் என் பெயர் ராமசேஷன் முடித்தேன். My god, what a work! Simply amazing.

Love is compatibility, togetherness, being accepted for what you are. This is the best way to define love I guess..

The man is genius.''

இன்னும் இதுபோல் 500 கடிதங்கள் இருக்கும். எல்லாமே ஆங்கிலத்தில் எழுதப்பட்டவை. அதையெல்லாம் இங்கே மொழிபெயர்க்கும் பொறுமை எனக்கு இல்லை. இந்த நாவலை முடிக்க வேண்டிய கெடுவும் நெருங்கிவிட்டது. இன்னும் இரண்டே நாட்களில் இதை முடித்தாக வேண்டும். எப்போதும் போல் கிருஷ்ணாவின் சித்ரவதை துவங்கி –விட்டது. இந்தப் பக்கம் வரை டைப் செய்ய ஒரு வாரம் ஆகியிருக்கிறது. இன்னும் பத்து இருபது பக்கங்கள் இருக்கலாம். தெரியவில்லை. நான் கதையை நடத்திச் செல்லவில்லை. கதைதான் என்னை நடத்திச் செல்கிறது. எப்படியிருந்தாலும் சரி. நேற்று கிருஷ்ணாவைப் பார்த்தபோது ''ஒரு வாரத்தில் நாவல் எழுத முடியுமானால் நானும் நாவல் எழுதலாம் போலிருக்கிறதே?'' என்று கேட்டான். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் சிரித்தேன். பிறகு சொன்னேன். ''ஒருவன் செத்து விடாமல் சித்ரவதை செய்ய வேண்டும்; வதையின் முடிவில் அவனுடைய

ஞாபகம் என்ற பெட்டியை அவன் நிரந்தரமாகத் தொலைத்திருக்க வேண்டும். அந்த மனிதன் தன் அடையாளத்தை இழந்து வெறும் ஜடமாகி இருக்க வேண்டும். அது உனக்கு சாத்தியமானால் இந்த நாவலை ஒரு வாரத்தில் உன்னால் எழுத முடியும்.''

மனித வாழ்வின் இருண்ட பக்கங்களைப் பற்றி உனக்குக் தெரியுமானால் நீ இதை எழுதலாம். தர்மாவின் வதைக் கொட்டடியில் நடந்த இன்னொரு சம்பவத்தை இங்கே எழுதத் தூண்டுகிறான் கிருஷ்ணா. அதை நான் எழுத வேண்டாம் என்று இருந்தேன். ஆனால் எழுத வைத்து விட்டான் கிருஷ்ணா. நாய் பாஸ்கருக்கு மனிதர்களை விட நாய்கள்தான் உயிர். அவனுடைய செயிண்ட் பெர்னார்ட் நாயோடு ஒரு க்ரேட் டேனும் வளர்க்கிறான். செயிண்ட் பெர்னார்டுக்கு அவன் கில்லர் என்று பெயர் வைத்திருந்தாலும் அது செயிண்ட் பெர்னார்ட் நாய்களுக்கு மட்டுமே உரிய பண்போடு ஒரு ஞானியைப் போல் நடந்து கொள்ளும். ஆனால் அவனுடைய க்ரேட் டேன் ஒரு குழந்தை. மூன்றரை அடி உயரமும் ஏழு அடிக்கு மேல் நீளமும் இருந்தாலும் குழந்தையாகத்தான் பழகும். பெயர் ரௌடி. ரௌடி என்று அழைத்தால் வாலைக் குழைத்துக்கொண்டு வந்து பக்கத்தில் நின்று பாவமாக நம்மைப் பார்க்கும். பாஸ்கரின் பண்ணையில் சுற்றி வரும் ஐந்து நாய்களில் ரௌடி மட்டும்தான் குழந்தை. அதைப் போய் அந்தப் பக்கத்தைச் சேர்ந்த ஒரு பையன் கல்லால் அடித்து காயப்படுத்திவிட்டான். பண்ணையைச் சுற்றி மதில் சுவர். வாசல் கேட்டில் காவலாளி. இருந்தும் அந்தப் பையன் மதில் சுவரின் பக்கத்திலிருந்த மரத்தின் மேல் ஏறி பெரிய கல்லால் அடித்து ரௌடியின் கண் அருகே காயம்.

———அந்தச் சிறுவனுக்கு பத்து வயது இருக்கும். அவனையும் அவனுடைய தகப்பனையும் பண்ணைக்கு அழைத்து வந்து மிரட்டி அனுப்பினான் நாய் பாஸ்கர். ஆனால் அந்தப் பையனின் கொழுப்பு அடங்கவில்லை. காவலாளி விரட்ட விரட்ட மீண்டும் மீண்டும் வந்து ரௌடியை அடித்துக் கொண்டிருந்தான். ரௌடி மட்டும்தான் அடி வாங்கிக் கொண்டிருந்தது. மற்ற நாய்கள் குலைத்துவிட்டு ஓடி விடும்; அவைகளுக்குத் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரிந்திருந்தது. ரௌடி அப்படி அல்ல. புத்தி கம்மி. அருகில் போனால் அடி விழும் என்று தெரியாமல் சுவரின் அருகே போய்

நின்றுகொண்டு பையனைக் குலைத்திருக்கிறது. பையன் இந்த முறை உடைந்த பாட்டிலால் அடித்திருக்கிறான். பட்ட இடத்திலேயே பட்டு காயம் பெரிதாகி முகமே கோரமாகிவிட்டது. கொஞ்சம் தள்ளிப்பட்டிருந்தால் ஒரு கண் போயிருக்கும்.

''என்ன தல செய்யலாம்?'' என்று கவலையுடன் தர்மாவைக் கேட்டான் பாஸ்கர். அப்பனை உதைத்தால் சரியாக வராது. பையனை உதைத்தால் செத்து விடுவான். என்ன செய்யலாம்?

''அந்தக் கவலையை என்னிடம் விடு'' என்று சொல்லி விட்டு பொடியனைப் பிடித்துக்கொண்டு வந்து பச்சை மிளகாயைக் கடித்துக் கடித்துத் தின்னச் செய்தான் தர்மா. ஒரு நாள் பூராவும் கட்டிப் போட்டு பச்சை மிளகாய் வைத்தியம் தொடர்ந்தது. கடிக்கவில்லையானால் கண்ணுக்கு அருகே தேய்ப்பான் தர்மா. உடனே வாய்க்குள் போகும் மிளகாய். அதற்கு மேல் பயல் எந்த நாய் பக்கமாவது போவானா? எதற்குச் சொல்கிறேன் என்றால், கிருஷ்ணா போன்ற ஒருவனால் ஒரு பத்து வயதுப் பையனுக்கு இம்மாதிரி பச்சை மிளகாய் வைத்தியம் செய்ய முடியுமா என்று கேட்பதற்காகத்தான்.

சரி, நாம் நேஹாவின் கதைக்கு வருவோம். ஒரு கட்டத்துக்கு மேல் நேஹாவின் கடிதங்களுக்கு பதில் எழுதுவதை நிறுத்தி விட்டான் தர்மா. காரணம் என்னவென்று அவனாலேயே அனுமானிக்க முடியவில்லை. தன் எழுத்துக்குக் குறுக்கே எது வந்தாலும், அதனால் எவ்வளவு ஆதாயம் வந்தாலும் அதை வெட்டிவிட்டு நகர்ந்து விடுவது அவன் பழக்கம். அதுகூட காரணமாக இருக்கலாம். ஒரு பெண்ணுக்குத் தன்னுடைய நட்பு தீராத உபத்திரவமாகப் போனால் தன்னையும் அது பாதிக்கும் என்று அவன் நினைத்திருக்கலாம். சரியாகத் தெரியவில்லை. அவன் பதில் போடுவதை நிறுத்தியதும் அவளிடமிருந்து ஒரு கடிதப் புயலே கிளம்பி வந்தது. அதில் ஒரு சிலதை மட்டும் இங்கே மொழிபெயர்த்துத் தருகிறேன்.

''கடந்த சில நாட்களில் எத்தனை மாற்றங்கள்... எல்லாமே மாறிவிட்டது. உலகமே இத்தனை வித்தியாசமானதா என்று தோன்றுகிறது. எதையுமே அதிகம் யோசிக்காமல், சிரிப்பும் சந்தோஷமுமாக மட்டுமே இருந்த நான் இன்று எல்லாவற்றைப் பற்றியும் யோசித்து யோசித்து மண்டை வெடித்து விடும்

போல் இருக்கிறது. ஒவ்வொரு நொடியும் கனமானதாக இருக்கிறது. You have taken away my sunshine, my breathe, my innocence, my smile, my wings, my day, my night. my dreams, my sleep, my hunger, my emotions. I am left lifeless. My actions have no meaning, my activities have no reactions, my world has suddenly become silent. I can't hear the birds, I can't feel the wind. I can't smell the rain. Am I still alive?"

"உன் நினைவினால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் இருக்கிறது. இரண்டு மணி நேரம் என் லேப்டாப்பையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் பார்த்துக் கொள்."

"உன்னிடமிருந்து மெயில் வராவிட்டால் என் மனதில் பல ஆயிரம் எண்ணங்கள் துரத்துகின்றன. இந்த மன நிலையை எப்படி எதிர்கொள்வது என்று தெரியவில்லை; இந்த இரவை எப்படிக் கழிக்கப் போகிறேன் என்று தெரியவில்லை. இந்த வலியை என்னால் தாங்க முடியவில்லை. உன்னிடமிருந்து கடிதம் வரும் வரை இந்த வலி அப்படியேதான் இருக்கும். The pain and helplessness I am going through is like walking on mid afternoon, naked, on a desert."

"காத்திருந்து காத்திருந்து ஆவியாகி விடுவேனோ என்று தோன்றுகிறது...."

"அழுகை வருகிறது. இதுவரை அழுததில்லை. இதுதான் முதல்அழுகை. இதை எப்படி எதிர்கொள்வது என்று தெரியவில்லை. ஆனால் உனக்கு முன்னே அழக் கூடாது என்று மட்டும் ஒரு வைராக்கியம் பிறக்கிறது."

"உன்னிடமிருந்து எந்தத் தகவலும் இல்லாமல் இருப்பது எவ்வளவு வேதனையான விஷயம் தெரியுமா? இதற்குக் காரணம் நான் உன் மேல் வைத்திருக்கும் அளவு கடந்த நட்பு, பாசம், அன்பு, காதல். I need you desperately. I need our love, affection and care for next three decades minimum. I need i spend the lost moments with you. I need next 30 years for that. Be with me, I need you."

"உன் மீது இருப்பது காதலா, காமமா, நட்பா என்றெல்லாம் எனக்குத் தெரியாது; ஆனால் ஒன்று மட்டும் தெரியும்; அதை இன்று உணர்ந்தேன்; நீ

இல்லாமல் என் நாட்கள் இனி செல்லாது என்று. You are stuck like a date on my life's calendar. Its meaningless without you. I need you...''

''உன் பிரிவினால் நிகழ்வது துயரமல்ல; எதிர்பாராத ஒரு வெளி, சற்று முன் காலி செய்யப்பட்ட வீடு போல...''

''Missing you... என்றுகூட சொல்ல முடியவில்லை. கிடைக்கும் என்ற விஷயத்தைத்தானே 'மிஸ்' பண்ண முடியும்? நமக்கு உரிமை இல்லாத விஷயத்தை?''

''நீ தொலைந்தபோது, என்னை மறந்து, என் நிலை மறந்து, என் பயம், என் மொழி, என் குணம், என் உணர்வு, என் உணவு, என் உறக்கம், என் சிரிப்பு, என் அழுகை, என் கோபம், என் காதல், என் காமம் எல்லாவற்றையும் மறந்து, என் சுற்றமும், உறவும் மறந்து, மழையும், வெயிலும் மறந்து உன் நினைவை மட்டுமே என்னுள் வைத்தேன். உன்னைத் தேட மனமில்லை; தொலைத்தது நான் என்பதால். என்னிடமே வந்துவிடு... என் உயிருள் உன்னை வைத்துப் பொதிந்து கொள்வேன், இனியும் தொலையாமல் இருக்க. Will you?''

''மௌனத்தின் வலி மறுதலிப்பின் வலியை விடக் கொடுமையானது.''

எதற்கும் பதில் எழுதாமல் இருந்தான் அவன். ஒரு கட்டத்தில் அவளிடமிருந்து வந்த கடிதங்களின் தொனி மாறியது.

''என்னைப் பேய் பிடித்துவிட்டது.''

''நான் உண்பதில்லை; உறங்குவதில்லை.''

''உன்னைக் கொல்லாமல் விட மாட்டேன்.''

''உன்னை வெட்டி வெட்டி வெட்டி வெட்டிப் போடுவேன்...''

''இரண்டு பேரும் தற்கொலை செய்துகொள்ளலாம் வா.''

''எத்தனை பேரை இப்படி ஆக்கியிருக்கிறாய்?''

''என்னை சிறு வயதில் கெடுத்த பையன்களெல்லாம் நீ அனுப்பியவர்கள்தானே?''

“என் சாமான் உனக்குப் பிடிக்கவில்லைதானே?”

“நக்குடா, நக்குடா, நக்குடா... டேய் பாஸ்டர்ட்...”

“உன்னை ரொம்பத் திட்டுகிறேன், இல்லையா?”

“டேய் பாஸ்டர்ட், இனிமேல் உன்னைத் திட்ட மாட்டேன். உன்னை இனிமேல் நினைக்கவே மாட்டேன்... போடா போ..."

உபமன்யு சட்டர்ஜி

சாரு நிவேதிதா

ஆழ்வார்

நரகத்திலிருந்து ஒரு குரல்

பிருஷ்டபுரம்

ரோரி ஸ்டுவர்ட்

சௌந்தர்ய லஹரி

ஜி.வி. தேசானி

டேய் நீ ஒரு பொறுக்கி

எனக்கு விஷம் கொடுத்து விட்டாய்

கஞ்சா அடிக்கலாம் வா

என் புண்டையை நக்குடா நாயே

கோபி கிருஷ்ணன்

அராத்து

தேவ்டியா பையா

நீ என்னை எங்கோ இழுத்துக்கொண்டு சென்று என்னைக் —கட்டிப் போடுகிறாய் நான் நிர்வாணமாய் இருக்கிறேன்

ஐயோ என்னை விட்டுவிடுங்கள்

இனிமேல் தர்மாவை நான் திட்ட மாட்டேன்

யாரோ என் பிறப்புறுப்பில் கோணி ஊசியால் தைக்கிறான்

தர்மா தான் தைக்கிறான்

வலியில் செத்துவிடுவேன் போலிருக்கிறது

உங்கள் எல்லோரையும் கொன்று போடுவேன்

தெரியாமல் சொல்லி விட்டேன் என்னை விட்டு விடுங்கள் நீங்கள் என்ன சொன்னாலும் செய்கிறேன். I will suck your balls தயவு செய்துவிட்டு விடுங்கள் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன் உங்கள் காலில் விழுந்து கேட்கிறேன் நான் என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் அதையெல்லாம் உங்கள் அடிமையைப் போல் செய்கிறேன் தயவு செய்யுங்கள்

நான் பனிக்கட்டியில் விழுந்துவிட்டேன்

காபி என்னைத் தடுக்கி விட்டுவிட்டது

கிருஷ்ணா நீயாவது சொல் என்னை விட்டு விடச் சொல் உன்னைப் பெற்றவள் கேட்கிறேன்

பனிக்குடத்திலிருந்து பின் நவீனத்துவம் விமானத்தைத் தவற விட்டு விட்டது

ஜனாதிபதி

கைலி

ஓட்டை

ஓட்டையில் நமஸ்காரம் செய்யாதே

ஓம் ஸ்ரீ மகாதேவா

தேவசகாய குமார்

நாய் ஏன் விழுந்தது

நரி குலைக்கும்

யானை

நேற்று

நான் சொல்லவில்லையே

சிங்கம் கடித்துவிட்டது

நான் நேற்று வருவேன் நீயும் நேற்று வா மறக்காமல் வராதே

கலி∴போர்னியாவில் செக்ஸ் ஷோ பார்த்துக் கொண்டிருக்கும்போது ஆடு மாதிரி கத்தினாயா வேண்டாம் செக்ஸ் ஷோவில் யாராவது என்னை நக்கினானா என்று பார்த்தாயா

மை டியர் மரை கழன்றுவிட்டது உனக்கு

ப்ளீஸ் என் புண்டை வலிக்கிறது அங்கே தையல் போடுவதை நிறுத்துகிறாயா

உன்னை பள்ளிக்கூடம் போகவில்லையா நீ

பன்றிக் காதுகளை உன் குழந்தைகளுக்குக் கொடு

உனக்கு நான் குழந்தை பெற்றுக் கொடுக்கிறேன்

தையல் போடுவதை நிறுத்து பாவம் இல்லையா நான் —

டேய் தேவடியாள் மகனே இது என்ன கரண்ட் ஷாக் எல்லாம் கொடுக்கிறாய் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்

ஆனால் பத்து மணி நேரத்துக்கு 8.5 டிகிரி ∴பாரன்ஹீட்டில் அந்தக் காதுகளை வேக விடு

கிருஷ்ணா நீ பேகனே பாரோ டட் டட் டட் டட் டட் டட்டி டட்டி டட்டி

தன் வீடிருக்க அசல் வீடு போகாதே போகாதே

போகாதே என் கணவா

I beg you da ப்ளீஸ்

என் யோனி கிழிந்து நாக்கு போடுவது தெரியவில்லையா உனக்கு

அதோ பார் அந்தப் பல்லி உன்னை நோக்கி நகைக்கிறது

புலி கனைக்கிறது

பேய்ச்சுரைத் தோட்டமடா நண்பா

என்னை மனநலக் காப்பகத்தில் போடப் போகிறார்களாம் மடையர்கள் ஷாதராவில் இருக்கும் மனநலக் காப்பகத்தைப் பற்றி நான் ஒரு ஆய்வுக் கட்டுரையே எழுதி இருக்கிறேனே என்னிடமா வாலாட்டுகிறாய் உன் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன்

என் பெயர் ஆதவன்

ஷாதராவுக்கு யமுனை நதியைக் கடக்க வேண்டும் என்று உனக்குத் தெரியுமா எனக்கா பைத்தியம் யமுனையாற்றிலே ஈரக் காற்றிலே பாட்டை முழுசாகப் பாடத் தெரியுமா உனக்கு எனக்குத் தெரியும்

தர்மா எழுதியிருக்கிறான் ஒரு கதை அவன் ரொம்பப் பாவம் ரொம்பப் பட்டினி கிடந்திருக்கிறான் அப்படி ஒருமுறை அவன் பட்டினி கிடக்கும் போது விந்து வங்கிக்குப் போய் விந்து விற்றுக் காசு வாங்கி சாப்பிட அறைக்குள் தனியாகக் கைமுட்டி அடித்துப் பார் தெரியும் உனக்கு டேய் லூசு உன் கதையைத் தாண்டா சொல்லிக்கொண்டு இருக்கிறேன் அப்படி இருக்கும் போது நீயே என் சாமானைத் தைத்தால் நல்லதா கெட்டதா சொல் நல்லது வந்து தாழம்பூ வாசம் அடிக்கும் பாட்டி சொல்லி இருக்கிறாள் அந்தப் பணிப்பெண் சார் சார் என்று வாசல் கதவை தண்ணியே வராதே யார் யாரையோ நினைத்துப் பார்க்கிறான் ம்ஹூம் வரவில்லை நீயே அடித்திருக்கிறேன் கைதான் ஒழிய அந்த ஒட்டகச்சிவிங்கிக்கு என்ன பிரச்சினையோ ஊம்பியாவது எடுக்கிறேண்டா

டேய் ப்ளீஸ் அங்கே தையல் போடாதடா

ஐடிஓ அருகில் நிற்கிறேன்

போ

மண்டி ஹவுஸில் கனாட் ப்ளேஸ் அடித்துவிட்டான் ஒரே ரத்தம்

என்னைப் பைத்தியம் என்று சொல்கிறார்களே நானா பைத்தியம் நாளையே நான் ஒரு புத்தகம்

நாளை நான் படித்த புத்தகத்தில் பாண்டவர்களின் பேரனான ராஜா ஜனமேஜயனுக்கு மஹாபாரதத்தைக் கதைக்கும் ஆசிரியர் வைஷம்பாயன முனிவர் யுதிஷ்டிரர் ஹஸ்தினாபுரத்தை ராஜ்ய பரிபாலனம்

தவழ்ந்து சென்றுகொண்டிருக்கிறேன்

நீ என்னைக் கொன்றுவிட்டாயா

ஏன் என்னை சித்ரவதை செய்வதிலேயே ஆர்வம் காட்டுகிறாய்

என்னை ஏன் உற்றுப் பார்க்கிறாய்

ஒரு பாம்பு என் உடம்பின் மீது ஊர்கிறது என் உடல் சிலிர்க்கிறது பயமாகவும் இருக்கிறது அந்தப் பாம்பை எடுத்து விடுங்களேன் ப்ளீஸ்

ஏன் அந்த மணியை விடாமல் அடித்துக் கொண்டிருக்கிறாய் காதுகள் செவிடாகி விடும்போல் இருக்கிறது

Cacophony of cultural philistines

எனக்குப் பைத்தியம் இல்லை என்பதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேள் ஒரு கணவன் ஒரு கணவி கணவிக்கு ஒரு காதலன் காதலன் அடிக்கடி தன் வீட்டுக்கு வந்து போவது கணவனுக்குத் தெரியும் ஒரு கட்டத்தில் காதலன் அவளைப் பார்க்க வருவதை நிறுத்திவிடுகிறான் இவள் அவனிடம் போய் காலில் விழுந்து கெஞ்சுகிறாள் அவனோ எட்டி உதைக்கிறான் என் பெயர் நேஹா எனக்கு எந்தப் பைத்தியமும் இல்லை பிடித்திருந்தால் இவ்வளவு கோர்வையாக யாராலும் எழுத முடியுமா ஒரே கஷ்டம் தர்மா என் யோனியை ஊசி நூலால் தைத்துக் கொண்டிருக்கும் போது அந்த வலியைத் தாங்கிக்கொண்டு சொல்ல வேண்டியிருக்கிறது மீண்டும் மீண்டும் போய் அவன் காலில் விழுகிறாள் அவள் அவனோ விடாமல் அவளை எட்டி எட்டி உதைக்கிறான் இப்போதுதான் கணவனின் ரோல் வருகிறது தன் கணவியைப் பார்த்து கணவன் சொல்கிறான் கண்ணே உனக்கு என்ன வேண்டும் கேள் கொண்டுவந்து தருகிறேன் அந்தக் கச்சடா நாயின் தலை வேண்டும் என்கிறாள் கணவி உடனே அந்தக் காதலனின் தலையைக் கொய்துகொண்டு வந்து தன் கணவியின் காலடியில் போட்டுவிட்டு ஜெயிலுக்குப் போய்விடுகிறான் கணவன் இப்பொது அந்தப் பெண் வேறொரு கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாள் இப்போதைய அவள் காதலன் யார் தெரியுமா முந்தைய காதலனின் தம்பி இது தர்மாவே எனக்கு சொன்ன கதை.

நேஹா ப்ளீஸ் தர்மாவை விட்டு விடு

நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடி வா

ஆதி பகவான் முதலாளி உலகு

ஒரு நாளும் ஓதாமல் இருக்க வேண்டாம் ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

தாடையின் நடுவில் முலைக்காம்பைப் போன்ற உள்நாக்கிலிருந்து தொடங்கி எங்கே தலை மயிர்களின் வேர் பிரிகின்றதோ மற்றும் கபாலத்தைப் பிளக்கிறதோ அதுவே இந்திரயோனி என்று கூறப் படுகிறது இதுவே இந்திராணி என்ற பெயர் வந்த காரணம்

ஆகாயம் சரீரம்

சத்யம் ஆத்மா

இவ்வளவு கெஞ்சுகிறேனே என் யோனியைத் தைப்பதை நிறுத்திவிடு தர்மா உன் காலில் விழுகிறேன்

தர்மாவை ஒன்றும் செய்யாதீர்கள் அவனுக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்ன என்னோடு படுக்க வேண்டுமா ஓகே நோ ப்ராப்ளம் அவனுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன் ஆனால் ஒரே ஒரு முறைதான் படுக்கலாம் ம்ஹூம் முடியாது அவனுக்கு அது பிடிக்காது ஓ படுத்தால்தான் அவனை விடுவீர்களா சரி படுக்கிறேன் ஆனால் அவனிடம் இதை நான் சொல்லி விடுவேன் எதையுமே அவனிடம் நான் மறைத்ததில்லை

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே குண்டி கொடுத்தோர்

You are mine, mine, I go shouting it to the afternoon's wind... Bravo! Pablo Neruda!

ஸில்வியா ப்ளாத்

என்னை மனநலக் காப்பகத்தில் போடாதீர்கள் போட்டால் உங்கள் அத்தனை பேரையும் கடித்தே கொன்றுவிடுவேன். Sodium Pentathol—ஐக் கொடுத்தாலும் என்னிடமிருந்து உண்மையை வரவழைக்க முடியாது

என்னுடைய இந்த நிலைக்கு யார் காரணம் என்பதைச் சொல்ல முடியாது

ஏன் நான் நன்றாகத்தானே இருக்கிறேன்

இப்போதெல்லாம் யாருக்கும் அக்கார அடிசில் செய்யவே தெரியவில்லை குறித்துக் கொள்ளுங்கள்

தேரே பினா ஜிந்தகி சே கோயி ஷிக்வா தொ நஹின்.

The man who mistook his wife for a hat – Oliver Sacks படித்துப் பார்

மரணத்தைக் குறித்து ஏன் இந்த பீதி மலரைப் போலவும் மலையைப் போலவும் காற்றைப் போலவும் கடலைப் போலவும் ஆகாசத்தைப் போலவும் நட்சத்திரங்களைப் போலவும் நிலத்தைப் போலவும் நிலவைப் போலவும் மரணமும் கடவுளால் நமக்கு வழங்கப்பட்ட வரம் மரணம் கொண்டாட்டத்திற்குரியது மரணம் போற்றுதலுக்குரியது எவ்வளவு கோர்வையாகப் பேசுகிறேன் பாருங்கள் எனக்குப் போய் பைத்தியம் என்கிறார்கள் என்னை ஷாதரா மனநலக் காப்பகத்தில் போட்டால் உங்கள் கொட்டையைக் கடித்து சாகடித்து விடுவேன்.

How to make Bailey's hot shot Put Irish Cream in large glass and microwave on HIGH power for half a minute or so – While that's going rim the shot glasses with sugar – Pour heated Bailey's into shot glasses and serve immediately. ஹாட் சாக்லேட்டில் ஒரு ஷாட் பெயிலிஸ் ஐரிஷ் கிரீம் விட்டு ஜன்னலருகில் அமர்ந்து சாயந்தர மலைகளைப் பார்த்தபடியே குடித்துக் கொண்டிருக்கிறேன் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் –டேய் தர்மா தயவு செய்து என் யோனியைத் தைப்பதை நிறுத்து வலியில் துடித்துக் கொண்டிருக்கிறேன்

இரவில் நடந்து கொண்டிருக்கிறேன் ஒரு இஞ்ச் அளவுக்குப் பனி விழுந்து கிடக்கிறது

இன்று மதியம் போன narrow gauage steam engine train ride மறக்க முடியாத அனுபவம். it was an overwhelming experience நேற்றைய பனி அப்படியே இருந்தது மலைகளிலும் மரங்களிலும் குளக்கரையில் இருந்த படகுகளிலும்... வாவ்...

கண்ணாடி வழியாகத் தெரிந்த ராபின் பறவை

இலைகள் உதிர்ந்த ஒற்றை மரத்தின் கீழ் யாரோ யார் நினைவாகவோ விட்டுச் சென்ற பூங்கொத்து

ரயிலுக்குக் கையசைக்கும் குழந்தைகளை ஒன்றும் செய்து விடாதே தர்மா —

இப்போது நீங்கள் என்னை மனநலக் காப்பகத்துக்கு இட்டுச் செல்லும் நேரத்திலும் தர்மாவின் நினைவில் என் மனம் தளும்புகிறது ஐ லவ் யூடா பாஸ்டர்ட்

Cardiff கோட்டையின் மேலே என் கொடி பறக்குது

சூன்யத்திலிருந்து வந்தேன் சூன்யத்துக்கே செல்கிறேன் மண்ணிலிருந்து வந்தேன் மண்ணுக்கே செல்கிறேன்

நீ அந்தப் பெண்ணோடு இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறாயோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது நீ கதீட்ரல் சாலையின் பக்கம் சென்றாலே அந்தக் கல்லூரிக்குத்தான் செல்கிறாயோ என்று சந்தேகமாக இருக்கிறது இப்படிச் சந்தேகப்படுவதைப் பற்றி எனக்கே அவமானமாகவும் இருக்கிறது நான் இப்படிப்பட்டவள் இல்லை உன் மீதான அளப்பரிய காதலே என்னை இப்படி ஆக்கி விட்டது அவளால்தான் என்னை இப்படிக் கைவிட்டு விட்டாயோ அவளால்தான் நான் இப்படிப் பைத்தியமாகி விட்டேனோ அவளைக் கொல்லாமல் விட மாட்டேன் பெஹன் சூத்

இப்போதெல்லாம் நீ ஏன் கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டாய் தர்மா அதுசரி காதலைக் கொன்றுவிட்டு அது பற்றிக் கதை எழுதும் உன்னால் எப்படிக் கவிதை எழுத முடியும்

சவக்கிடங்கை பார்த்திருக்கிறாயா தர்மா அந்த சவக்கிடங்குக் காப்பா—ளர்கள் அங்கே வரும் உடல்களை விறகுக் கட்டைகளைப் போல் எடுத்துத் தூக்கி எறிவார்கள் அதிலேயே புழங்கிப் புழங்கி அப்படியே மரத்து விடும் அதேபோல் நீயும் புத்தகங்களுடனேயே பழகிப் பழகி ஒருமாதிரி மரத்துப் போய் விட்டாய் என்று நினைக்கிறேன்

இதோடு எத்தனை தடவை சொல்லிவிட்டேன் என் யோனியைத் தைப்பதை நிறுத்து நிறுத்து என்று குருதி வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது நான் செத்துக் கொண்டிருக்கிறேன்

இப்படியே ஒரு முப்பது பக்கங்களுக்கு ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் சென்றது அந்தக் கடிதம். கடிதமா அது? அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா அல்லது நடிக்கிறாளா? ஒரு கட்டத்தில் தர்மா இது பற்றி யோசிப்பதையே விட்டு விட்டான். பெண்கள் தன் எழுத்துக்குக் கச்சாப் பொருளாகப் பயன்படும் வரைதான் அவனுடைய கவனம். அதற்கு மேல் அவர்களுக்கும் அவனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

இரண்டு ஆண்டுகள் சென்று நேஹா பற்றி ஷ்யாம் என்பவன் தர்மாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

அந்தக் கடிதம்:

அன்புள்ள தர்மா,

நான் ஷ்யாம். நேஹாவின் நண்பன். நேஹா இறந்து சில மாதங்கள் ஆகின்றன. இதை உங்களுக்கு எழுதலாமா வேண்டாமா என்று குழம்பினேன். இப்போதும் குழப்பம் தீரவில்லை. இருந்தாலும் மனம் சொல்வதைக் கேட்டு விடலாம் என்று துணிந்து எழுதிவிட்டேன். நான் இங்கே தில்லியில் உள்ள ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் பணியாற்றுகிறேன். உங்களோடு பழகுவதற்கு முன்னால் நான் நேஹாவின் நெருக்கமான நண்பனாக இருந்தேன். என்னவோ தெரியவில்லை, உங்களோடு பழக ஆரம்பித்த பிறகு அவள் என்னைத் தவிர்க்க ஆரம்பித்தாள். தவிர்ப்பது என்றால்...

அதை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. தேக சம்பந்தத்தைத் தவிர்த்தாள். அவள் அப்படிப்பட்ட மதிப்பீடுகள் கொண்டவளும் இல்லை. ஆனால் உங்களைப் பார்த்த பிறகு அவளுக்குள் ஏதோ ஏற்பட்டிருக்கிறது. சந்திப்போம் பேசுவோம். ஆனால் அதற்கு மேல் எதுவும் நடக்காது. மீறிக் கேட்டால் “வேண்டாம்; அது பற்றிப் பேசாதே” என்று தவிர்த்து விடுவாள். மிக மிக வெளிப்படையான பெண்ணாக இருந்த அந்தப் பழைய நேஹா அல்ல இவள். ஆனால் நாங்கள் எப்போது சந்தித்தாலும் உங்களைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருப்பாள்.

ஒரு கட்டத்தில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒருநாள் தூக்க மாத்திரைகளைப் போட்டுக்கொண்டு தற்கொலைக்கு முயற்சி செய்திருக்கிறாள். எக்கச்சக்கமாக சாப்பிட்டிருக்க வேண்டும் என்றார் டாக்டர். “காதல்

தோல்வியாக இருக்க வேண்டும்; யார் என்று கண்டு பிடியுங்கள்; அவர் வந்து பேசினால் சரி பண்ணி விடலாம்'' என்றார். ரகசியமாக என்னிடம் மட்டுமே சொன்னார். ஆனால் அவள் அதை யூகித்துவிட்டாள். அப்போது அவள் மூளை நன்றாக வேலை செய்தது. ''தர்மாவின் பெயரைச் சொன்னால் உன்னை சும்மா விட மாட்டேன்'' என்றாள். அதை அவள் சொன்னபோது என் உடல் பயத்தில் நடுங்கியது. அப்போது அவள் முகம் ஒரு கொலைகாரியின் முகத்தைப் போல் இருந்தது. அதன்பிறகு எல்லாம் சடுதியில் நடந்து முடிந்தன. ஷாதரா மனநலக் காப்பகத்தில் அவளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் அந்த சிகிச்சையை அவள் மனம் ஏற்க மறுத்தது. மிகக் கடுமையான ஸ்கீஸோஃப்ரீனிக் நோயாளியாக மாறினாள். ஏதேதோ சம்பந்தமில்லாமல் பேசினாள். பற்களைக் கடித்துக் கடித்து ரத்தம் வழியும். புதிய ஆட்களைக் கண்டால் ''உன்னைக் கொல்லுவேன்'' என்று கத்திக்கொண்டே அவர்கள் மீது பாய்ந்தாள். அவளுக்குத் தன்னையே யார் என்று தெரியவில்லை என்று நினைக்கிறேன். தனியாக இருந்தால் தற்கொலை முயற்சிதான். ஒரு கட்டத்தில் அவள் சங்கிலியால் பிணைக்கப்பட்டாள். யாருக்குமே அந்தக் கொடுமை நடக்கக் கூடாது. அப்போதும் உங்களைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை. தைரியம் இல்லை. உங்களைப் பற்றி வெளியே சொல்லக் கூடாது என்று சொன்னபோது அவளுடைய கண்களும் முகமும் எப்படி இருந்தன என்பதை என்னால் மறக்கவே முடியாது.

ஒருநாள் அவளுடைய இரும்புக் கட்டிலின் தகரப் பகுதியைப் பிய்த்தெடுத்து தன் மணிக்கட்டைக் கிழித்துக்கொண்டு தற்கொலை செய்து கொண்டாள். எப்படி சாக வேண்டும் என்ற நுட்பம் தெரிந்தவள் எப்படி மனநோயாளியாக இருந்திருக்க முடியும்? குழப்பமாக இருக்கிறது.

இதை நான் உங்களுக்கு எழுதும் காரணம், அவள் தன் உயிரினும் மேலாக நேசித்த ஒருவருக்கு அவளுடைய மரணச் செய்தி தெரிய வேண்டும் என்பதற்காகத்தான்.

—அன்புடன்,

ஷ்யாம்.

21

ம ரணத்தைப் பற்றிப் பேசாத தத்துவவாதியோ, தீர்க்கதரிசியோ கிடையாது. ‘மரணத்தைப் புரிந்து கொள்வதென்பது புலியின் தலையில் அமர்ந்து கொண்டு அதன் வாலைப் பிடிப்பது போல' என்கிறது ஜென்.

மரணம் என்பது ஜனனத்தோடு மட்டுமே ஒப்பிடக்கூடிய ஒரு நிகழ்வு. சொல்லப் போனால் ஜனனமும் மரணமும் ஒன்றுதான். ஏனென்றால் ஜனனம் என்பது ஆரம்பமோ மரணம் என்பது முடிவோ அல்ல. வார்த்தைகளால் விளக்குவதற்குப் பெரிதும் சிரமமான ஒரு மாபெரும் தொடர் நிகழ்வின் இரண்டு குறிப்பிட்ட புள்ளிகள்தான் ஜனனமும் மரணமும்.

ஒரு நதி சமுத்திரத்தில் கலக்கிறது. அப்படியானால் அது அந்த நதியின் மரணமா? நதியானது அதன் ஒரு வடிவத்தை மாற்றிக்கொண்டு இன்னொரு வடிவமாக மாறுகிறதே ஒழிய அது முற்றிலுமாக மறைவதில்லை. சமுத்திரத்தில் நதி இருக்கிறது. ஆனால் அது நம் கட்புலனுக்குத் தெரிவதில்லை என்பது போலவே மரணமும். ஆரம்பமும் முடிவும் இல்லாத இந்த அண்டப் பெருவெளியில் ஒரு பிண்டம் தன்னைப் பிணைத்துக்கொள்கிறது.

இந்த சராசரத்தில் நான் ஒரு தூசு. நானே இந்த சராசரம்: நான் வேறு, அது வேறு அல்ல; நானே அது.

எண்பது வயதுக்கு மேல் மரணம் சம்பவிப்பதற்கும் பாதி வழியிலேயே புட்டுக்கொள்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதுதான். மரணத்தைப் பற்றி நினைக்கும்போது கிருஷ்ணாவின் நினைப்பும் தவிர்க்க முடியாமலே வருகிறது. தர்மா தற்கொலை செய்துகொண்டான் என்று ஒரு வதந்தி பரவியபோது அதை இரவு பதினோரு மணி அளவில் கேள்விப்பட்ட —கிருஷ்ணா அன்று இரவு பூராவும் பல நண்பர்களுக்கும் போன் போட்டுக் கவலையுடன் கேட்டு அவர்களை உறங்க விடாமல் செய்திருக்கிறான்.

‘‘ஏன் கிருஷ்ணா, எனக்கே போன் போட்டுக் கேட்டிருக்கலாமே?" என்றான் தர்மா.

‘‘கேட்டிருக்கலாம் தர்மா. ஆனால், யோசித்துப் பார். நீ உயிரோடு இருக்கிறாயா இல்லை, செத்து விட்டாயா என்று ஒருவரை நடுராத்திரியில் போன் போட்டுக் கேட்டால் எப்படி இருக்கும்?’’

ஜென் குரு டோகோவிடம் அவருடைய சீடர் ஸென்ஜென் இதே கேள்வியைத்தான் கேட்டார். டோகோவும் ஸென்ஜெனும் ஒரு மரண வீட்டுக்கு துக்கம் விசாரிக்கச் சென்றனர். பிரேதத்தைப் பார்த்து ஸென்ஜென் ‘‘இவர் செத்து விட்டாரா? அல்லது, உயிரோடு இருக்கிறாரா?" என்று கேட்டார். அதற்கு டோகோ, ‘‘அவர் செத்து விட்டார் என்றும் சொல்ல மாட்டேன்; உயிரோடு இருக்கிறார் என்றும் சொல்ல மாட்டேன்" என்று பதிலிறுத்தார்.

‘‘ஏன் சொல்ல மாட்டீர்கள் குருவே?’’ என்று கேட்கிறார் ஸென்ஜென்.

அவர்களது மடாலயத்துக்குத் திரும்பும் வழியில் ‘‘இப்போதே சொல்லுங்கள் குருவே, அவர் உயிரோடு இருக்கிறாரா? செத்து—விட்டாரா? சொல்லாவிட்டால் உங்களை அடித்து விடுவேன்’’ என்று திரும்பவும் கேட்கிறார் ஸென்ஜென்.

‘‘நீ என்னை அடித்தாலும் சரி; சொல்ல மாட்டேன்.’’

பிறகு டோகோ இறந்துவிடுகிறார். அப்போது ஸெகிஸோ என்ற குருவிடம் சென்று அதே கேள்வியைக் கேட்கிறார் ஸென்ஜென். அதற்கு ஸெகிஸோ ‘‘அவர் இறந்து விட்டார் என்றும் சொல்ல மாட்டேன்; உயிரோடு இருக்கிறார் என்றும் சொல்ல மாட்டேன்’’ என்கிறார்.

‘‘ஏன் சொல்ல மாட்டீர்கள் குருவே?"

‘‘நான் சொல்ல மாட்டேன்; நான் சொல்ல மாட்டேன்.’’

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் ஸென்ஜெனுக்கு அவர் தேடிக்கொண்டிருந்த புதிருக்கு விடையும் ஞானமும் கிட்டியது.

பிறகு ஸென்ஜென் ஒரு குருவாகப் பிரபலடைந்தார். அவரை அணுகிய துறவி ஒருவர் ‘‘நான் உங்களுக்கு மிக அருகாமையில் இருந்தும் உங்கள் முகத்தைப் பார்க்க முடியாமல் இந்தச் சாளரம் மறைக்கிறதே; ஏன் அப்படி?’’ என்று வினவுகிறார்.

‘‘உன் பெற்றோர் மூலமாக நீ பிறப்பதற்கு முன்னால் உன் முகம் எவ்வாறாக இருந்தது என்று உனக்குத் தெரியுமா?"

இந்தச் சீடன் சொல்வதைக் கேளுங்கள். சாளரம் எப்படி என் முகத்தை மறைக்க முடியும்? சாளரம் என்ன சுவரா?

ஒரு சாளரத்தினால் என் முகத்தை மட்டுமல்ல; வேறு எதையுமே மறைக்க முடியாது என்று உங்களுக்குத் தெரியாதா?

நீ என்னைப் பார்க்கிறாய். அதே சமயம் பார்க்காமல் இருக்கிறாய்.

இந்தப் பிரபஞ்சத்தை எதுவுமே மறைக்கவில்லை...’’

ஒருமுறை ஸென்ஜெனிடம் வந்த சீடன் ஒருவன் ‘‘நான் ஜனனத்தைப் பற்றியும் மரணத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள வந்திருக்கிறேன்’’ என்று சொல்ல, ‘‘இங்கே ஜனனமும் இல்லை; மரணமும் இல்லை’’ என்று கூறி அவனை அடித்து விரட்டிவிடுகிறார்.

ஜென் குரு ஹக்கூயினிடம் வந்த ஒரு சீடன் ‘‘நாம் செத்த பிறகு என்ன ஆகிறோம்?’’ என்று கேட்கிறான்.

‘‘தெரியாது."

‘‘தெரியாது என்றால் என்ன அர்த்தம்? நீங்கள் ஒரு ஜென் குருதானே?’’

‘‘ஜென் குருதான்; ஆனால் நான் இன்னும் சாகவில்லை.’’

22

In my youth's years, she loved me, I am sure.
The flute of seven pipes she gave in my tenure
And harked to me with smile

Muse: Alexander Pushkin

தர்மாவின் ஒரு நாவலில் ம்யூஸ் என்று ஒரு பெண் வருவாள். சுவாரசி—யமான பெண். தர்மா எப்போதுமே தன்னுடைய வாழ்க் கையைத்தான் நாவலாகவும், சிறுகதையாகவும், கவிதையாகவும்— ஏன் அரசியல் கட்டுரை—யாகவும் கூட — எழுதுவதால் இந்த ம்யூஸ் என்ற கதாபாத்திரம் அவனுடைய வாழ்வில் சம்பந்தப்பட்ட நிஜமான பெண்தான் என்றே முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

அவளைத் தற்செயலாக சந்திக்க நேர்ந்தது பற்றி அதே நாவலின் இன்னொரு பெண் பாத்திரமான சாந்தினி தர்மாவுக்குக் கடிதம் எழுதினாள். அவளுடைய இயற்பெயர் நிஷா. வயது முப்பது இருக்கும். முகத்தில் லேசான பருவின் வடுக்கள். நல்ல அழகி. பளபளக்கும் கண்கள். வசீகரமான புன்னகை. அவள்தான் உன்னுடைய ம்யூஸாக இருக்க வேண்டும். அவளுக்கு சமஸ்க்ருதம் நன்றாகத் தெரியுமா? வாரணாசி சமஸ்கிருதப் பல்கலைக்கழகம் நடத்திய ஒரு செமினாரில் சந்தித்தேன். சாங்கியம் என்பதை நவீன விஞ்ஞானத்துடன் ஒப்பிட்டு அழகாக அரைமணிநேரம் உரையாற்றினாள். வந்திருந்த வெள்ளைக்—காரர் களெல்லாம் அசந்துவிட்டார்கள். ஜீன்ஸும் சிறிய குர்த்தாவும் அணிந்திருந்தாள். அருமையான உவமைகள். லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களையும் கிழக்கு ஐரோப்பியக் கலாசாரத்தையும் உள்ளே இழுத்துப் போட்டுப் பேசினாள். பாரதியாரையும் விடவில்லை.

அவளிடம் பலரும் என்னென்னவோ கேட்டார்கள் எல்லாவற்றுக்கும் சிரித்துக்கொண்டே ஒரே பதில்தான்: நான் என்னைப் பற்றி எவ்வளவு கூறினாலும் உங்களால் புரிந்துகொள்ள முடியாது. இயற்கையுடன் சேர்ந்து வாழ்ந்து பாருங்கள், அப்போது எல்லாவற்றையும் புரிந்து கொள்வீர்கள். எனக்கு சந்தேகம் வந்து நான் போய் கேட்டேன், “நீங்கள் தர்மாவின் நண்பர்தானே?” என்று.

அழகாகச் சிரித்து என் தலையை மெல்லத் தட்டி விட்டுச் சென்று—விட்டாள். அவள் அதற்குப் பிறகு கர்நாடகாவிலுள்ள ஏதோ ஒரு ஆர்கானிக் ஃபார்ம் போக இருந்தாள். அங்கே ஒரு சர்வதேசக் கருத்தரங்கு இருக்கிறதாம். சென்னையில்தான் இருந்தாளாம். கடைசியில் அவளுடைய குடும்ப சொத்து கிடைத்ததை விற்றுவிட்டு பெங்களூர் பக்கம் ஒரு ஆர்கானிக் ஃபாமிங் அண்ட் ஸ்டடி சென்டர் நடத்துகிறாளாம். அங்கு ஏதோ ஒரு ஆதிவாசிப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகவும் இருக்கிறாள். நிச்சயமாக அவள் உன்னுடைய ம்யூஸாகத்தான் இருக்க வேண்டும். உன்னைப் பற்றிப் பேசியபோது அவள் சிரித்த சிரிப்பில் கொஞ்சம் அன்பும் ஒரு ஒளியும் இருந்தது. அவள்தானே தர்மா?

அந்த செமினாரில் இருந்த புத்திஜீவிகள் அத்தனை பேரையும் தன் விவாதங்களினால் கவர்ந்துவிட்டாள். இப்படி ஒரு அறிவாளி உன் காதலியாக இருந்தாள் என்றால் உன்னைப் பார்த்துப் பலரும் பொறாமை கொண்டிருப்பார்களே? எப்படி சமாளித்தாய்?

உன்னுடைய நாவலின் அடியோட்டமாக இருந்த ரகசியப் பெண்ணை நேரில் சந்திக்க நேர்ந்தது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

நான் அடுத்த அடுத்த வாரம் அவளுடைய பண்ணைக்குப் போக இருக்கிறேன்.

23

Grant that no mighty foes, unknown, malevolent, unhallowed tread us to the ground. With thine assistance, Hero, may we pass through all the waters that are rushing down.

– Rig Veda: Book 7, Hymn 32:27

நாய் பாஸ்கரிடம் ஒரு நல்ல குணம் என்னவென்றால் அவன் கொலை செய்வான்; கை காலை எடுக்க வேண்டும் என்றால் எடுப்பான். ஆனால் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளைக் கடத்திக்கொண்டு வந்து பணம் பறிப்பது போன்ற வேலைகளில் ஒருபோதும் ஈடுபட மாட்டான். இது அவனே தர்மாவிடம் சொன்னது. "எல்லாத் தொழிலுக்கும் ஒரு தர்மம் இருக்கிறது. எனக்கு எவன் மீதும் விரோதமில்லை. கசாப்புக் கடையில் ஆடு வெட்டுபவன் அந்த ஆட்டை விரோதத்தின் பேரிலா வெட்டுகிறான்? கஸ்டமர் கேட்கிறான்; இவன் வெட்டுகிறான்; அவ்வளவுதான்" என்பது நாய் பாஸ்கர் அடிக்கடி சொல்லும் வசனம்.

அவனுடைய கோஷ்டி ஒரு குருகுலம் மாதிரி. ஆறு ஏழு ஆண்டுகள் கூடவே இருந்து தொழிலைக் கற்றுக்கொண்டு, சுயமாக செய்யக் கிளம்பி விடுவார்கள். ஆனால் அவனிடம் இருந்த காடை குணா என்பவன் மட்டும் இரண்டே வருடத்தில் இவனிடமிருந்து பிரிந்து போய் தனியாகத் தொழில் நடத்தத் தொடங்கினான். பிரிந்தது மட்டும் அல்லாமல் நாய் பாஸ்கரிடமிருந்த ஐந்து பேரை மூளைச்சலவை செய்து தன்னோடு கூட்டிக் கொண்டு போய் விட்டான். அதுவும் தவிர, கொலை, கை கால் எடுப்பது என்பதையெல்லாம் ஓரம் கட்டிவிட்டு பள்ளிக்கூடப் பிள்ளைகளைக் கடத்துவது, வழிப்பறி, வயதானவர்கள் வசிக்கும் பங்களாக்களைக் கொள்ளை அடிப்பது போன்ற

'ஈனமான' (நாய் பாஸ்கரின் வார்த்தை) வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான்.

காடை குணா, நாய் பாஸ்கர் இரண்டு பேருக்குமே தலைமையகம் சிந்தாதிரிப்பேட்டைதான். சுலபமாக பணம் பண்ணுவதற்காகத் தன்னுடைய கோஷ்டியில் பார்ப்பதற்கு சுமாராக இருந்த ஒருவனைத் தோது செய்து அங்கேயிருந்த ஒரு மார்வாடிப் பெண்ணைக் 'காதலிக்க' வைத்திருக்கிறான் காடை குணா. இரண்டு மாத முயற்சிக்குப் பிறகு பெண் இவனுடைய வலையில் விழுந்து விட்டாள். அவளைக் கடத்திக்—கொண்டு காடை குணாவின் வீட்டுக்கு வந்து விட்டான் அவன். ஓரிரு தினங்களிலேயே அவளுக்குத் தன்னுடைய நிலைமை புரிந்து—விடுகிறது. இதற்கிடையில் பெண்ணின் தகப்பன் போலீஸில் புகார் செய்தான்.

''போலீஸோ உன் தகப்பனோ அல்லது வேறு யாரோ உன்னிடம் வந்து கேட்டால் 'நான் இவரை விரும்பித்தான் இங்கே வந்திருக்கிறேன்; நானும் இவரும் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம்' என்று நீ சொல்ல வேண்டும். இல்லையானால் உன் அப்பா, அம்மா, தம்பி மூன்று பேரையும் கொன்று விடுவோம்'' என்று அந்தப் பெண்ணை மிரட்டி வைத்துவிட்டான் காடை குணா. போலீஸ்காரர்கள் வந்து கேட்டார்கள். சொல்லச் சொன்னதை சொன்னாள். போலீஸுக்கு இதெல்லாம் வழக்கமான நாடகம். மாமூல் வந்து விடும் என்பதால் அவர்கள் அதைக் கேட்டு விட்டுப் போய் கேஸை மூடி விட்டார்கள். அவள் இருந்த வீட்டுக்கு வந்து அழுது புரண்ட அம்மா அப்பாவிடமும் அதையே சொல்லிவிட்டாள் மகள். ஆனால் சில தினங்களிலேயே ஏன் அப்படிச் சொன்னோம் என்று ஆகி விட்டது அவளுக்கு. அந்த கோஷ்டியிலிருந்த அத்தனை பேரும் மாற்றி, மாற்றி வந்து அவளைச் சிதைத்துவிட்டுப் போனார்கள்.

இதற்கிடையில் அந்த மார்வாடியைச் சந்தித்த ஒரு மத்திய வயது மதிக்கத்தக்க ஆள் ''இந்தப் பொறுக்கிப் பயலுங்களே இப்படித்தான் சேட்டு. போன மாசம்கூட திருவான்மியூர்லேர்ந்து ஒரு பொண்ணைக் கடத்திக்கிட்டு வந்து இருபது லட்சம் குடுத்து மீட்டாங்க... எல்லாம் இந்த காட குண கேங்கு... எனக்கு இந்தப் பயலுவள நல்லாத் தெரியும்... பொடியனுங்களா இருக்கும்போது நம்மகிட்ட பாக்ஸிங் கத்துக்க வருவானுங்க... நைனா

நைனான்னு நல்ல மரியாதை... இப்புடி பொறுக்கித் தறுதலைங்களா போவும்னு தெரிஞ்சிருந்தா நம்ம வித்தையைக் கத்துக் குடுத்துருக்க மாட்டேன்'' என்று சொல்லி 25 லட்சம் கொடுத்தால் காடை குணாவிடம் சொல்லி பெண்ணை மீட்டுத் தருவதாகச் சொன்னான்.

பத்து லட்சத்திலிருந்து ஆரம்பித்து இருபது லட்சம் வரை பேரம் பேசியும் படியவில்லை. ஒரு பைசா கூட குறைத்துக் கொள்வதாக இல்லை.

''எனக்கு ஒரு பைசா வேணாம் சேட்டு. என்னை உனக்குத் தெரியாது. போன வருஷம் உன்கிட்டதான் ரெண்டு லட்சம் கடன வாங்கி என் பொண்ணு கல்யாணத்தை நடத்தினேன். அந்த நன்றிக்கடனுக்காக இதை செய்யுறேன். உன் பொண்ணு என் பொண்ணு மாதிரி.''

அதற்கு மேல் பேரம் பேசாமல் காசைக் கொடுத்தான் மார்வாடி. அடுத்த கணமே பெண்ணை கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் பெண்ணைப் பார்த்ததும் குடும்பமே பதறியது. சிதைந்து உருக்குலைந்து போயிருந்தாள் குழந்தை. நடந்தது எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லியிருப்பாள் போலிருக்கிறது. மறுநாளே குழந்தையும் அவள் தம்பியும் மனைவியும் விஷத்தைக் குடித்துத் தற்கொலை செய்துகொண்டார்கள்.

அவருக்கு இனிமேல் யார் இருக்கிறார்கள்? செத்து விடலாம் என்று தோன்றியது.. ஆனால் தன் குடும்பமே அழிந்ததற்குக் ——காரணமாக இருந்த காடை குணாவைப் பழி வாங்காமல் சாகலாமா? எப்படிப் பழி வாங்குவது என்று தெரியவில்லை. போலீஸும் ரவுடியும் கூட்டணி. காடை குணா என்றால் ஏரியாவே நடுங்குகிறது. யோசித்து யோசித்துப் பார்த்ததில் —ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது. வட இந்தியா போய் தன் பூர்வீக சொத்தையெல்லாம் விற்றுக்கொண்டு வந்து —நாய் பாஸ்கரைப் பார்த்தார் மார்வாடி. ஆனால் நாய் பாஸ்கரை சுலபத்தில் சம்மதிக்க வைக்க முடியவில்லை. காடை குணா எவ்வளவு மோசமான ஆளாக இருந்தாலும் அவனைக் கொல்வதில் ஆபத்து இருக்கிறது. கோஷ்டிப் பூசலால் இங்கே எத்தனையோ கொலைகள் நடந்திருக்கின்றன. ''போலீஸால் செத்ததை விட கோஷ்டிப் பூசலில் செத்த ரவுடிகளே அதிகம்'' என்றான் நாய் பாஸ்கர்.

தன் பெண்ணுக்கு நடந்த கொடுமையைச் சொல்லி நாய் பாஸ்கரின் காலில் விழுந்தார் அந்த மார்வாடி. ‘‘இந்த ஒரு கோடியையும் வைத்துக் கொள்ளுங்கள். அவனைக் கொல்லக் கூடாது. என் மகள் அனுபவித்ததை அவன் அனுபவிக்க வேண்டும். என் குடும்பமே போய்விட்டது. இனிமேல் என்னிடம் ஒரு பைசா கிடையாது. அவனைப் பழி வாங்கிவிட்டால் நான் காசி, ராமேஸ்வரம் என்று போய் விடுவேன். சாகும் வரை எனக்கு இனிமேல் எதுவுமே இல்லை; யாருமே இல்லை. இனிமேல் நான் ஒரு பிச்சைக்காரன். ஆனால் காடை குணாவைப் பழி வாங்க வேண்டும். நாய் பாஸ்கர், நீதான் என் பகவான்; நீதான் என் மாலிக்...’’

‘‘என்ன ‘கேங்க் வார்' வந்தாலும் பரவாயில்லை பாஸ்கர்; காடையை டார்ச்சர் செய்யத்தான் வேண்டும்’’ என்றான் தர்மா.

‘‘நீ சாகத் தயாரா தல?’’

‘‘தயார். மாஸ்க் இல்லாமயே டார்ச்சர் பண்றேன். நடப்பது நடக்கட்டும்...’’

24

இந்த்ரியானாம் ஹி சரதாம் யன்மனோந்நு வித்தியதே/

ததஸ்ய ஹரதி ப்ரஞாம் வாயுர் நாவம் இவாம்பஸி//

இந்திரியங்கள் சலிக்கையில் ஒருவனுடைய மனமும் அவற்றைப் பின்பற்றிச் செல்லுமாயின், அம்மனம் கடலில் தோணியைக் காற்று மோதுவது போலே அறிவை மோதுகின்றது.

பகவத் கீதை: அத் 2:67

நாய் பாஸ்கரின் பண்ணையில் உள்ள கொட்டடிக்குக் கொண்டு வரப்பட்டான் காடை குணா. உயிரோடு விடுவதா அல்லது டார்ச்சர் செய்து கொன்றுவிடுவதா? இரண்டுக்கும் வெவ்வேறு டார்ச்சர் இருக்கிறது. உயிரோடு வெளியே விட வேண்டும் என்றால் வெளிக்காயம் இருக்கக் கூடாது. கொன்றுவிடலாம் என்றால் நகத்தைப் பிடுங்குவது, கண்களில் சிகரெட்டால் சுடுவது, உடம்பு பூராவும் கத்தியால் கீறுவது, பற்களைப் பிடுங்குவது, கொதிக்கும் எண்ணெயை ஊற்றுவது என்று பல வழிகள் உள்ளன.

உயிரோடு விடலாம் என்றான் பாஸ்கர். அப்படியானால் வெளிக்காயம் இல்லாமல் அவனுடைய மனதைக் கொல்ல வேண்டும். சுய நினைவையும் பிரக்ஞையையும் அழிக்க வேண்டும். அதற்குத் தகுந்தாற்போல் டார்ச்சர் வழிமுறைகளைக் கையாள வேண்டும்.

மூன்று உதவியாளர்கள் வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொண்டான் தர்மா. வாயில் துணியை வைத்து அடைத்துக் விட்டு அவனுடைய ஆடைகளைக் களைந்து ஒரு தூணில் கட்டினான். தன்னுடைய ஆடையையும் களைந்துவிட்டு Richard Strasussஇன் Fire Famine ஆப்பராவை ஓட விட்டான். முகத்தை மூடவில்லை. முதலில் காடைக்கு மொட்டை அடிக்கப்பட்டது. பிறகு

அவனுடைய ஆண்மையிலும் தலையிலும் மாறி மாறி அவ்வப்போது கரண்ட் ஷாக் கொடுக்கப்பட்டது. காயம் ஏற்பட்டு விடாமல் கொடுக்க வேண்டும். அதற்காக லேசான மின்சாரமே பயன்படுத்தப்பட்டது. ஒரு மணிக்கு ஒரு முறை வாய்க்கட்டை அவிழ்த்து மூத்திரத்தையும் மலக் கரைசலையும் குடிக்கக் கொடுத்தான் தர்மா. கட்டை அவிழ்த்ததும் கத்தினால் உடனே சிகரெட்டை அவன் கண்களின் அருகே கொண்டு போனான்.

‘‘கத்தாதே; கத்தினால் சுடுவேன்.’’

‘‘கத்தாதே; கத்தினால் சுடுவேன்.’’

‘‘கத்தாதே; கத்தினால் சுடுவேன்.’’

கத்துவதை நிறுத்தும் வரை கண்களின் பக்கத்தில் எரியும் சிகரெட்டை வைத்து வைத்துக் காட்டினான்.

வழக்கம் போல் தர்மா தன்னுடைய வாடிக்கையாளர்களிடம் பேசுவது போல் காடையிடம் பேசவில்லை. திருடன் போலீஸ் விளையாட்டு நடக்கவில்லை.

எல்லாவற்றையும் அடுத்த அறையிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த நாய் பாஸ்கர் உதவியாளனை விட்டு ‘‘தர்மாவிடம் கொஞ்சம் பேச வேண்டும்; ஆடையைப் போட்டுக்கொள்ளச் சொல்’’ என்று சொல்லி அனுப்பினான்.

‘‘பரவாயில்லை; வரச் சொல்."

‘‘என்னால் எந்த ட்ரெஸ்ஸும் போடாமலே வாழ முடியும் பாஸ்கர். யாரும் அதை ஒத்துக்கொள்ள மாட்டார்களே என்றுதான் போட்டுக்கொள்கிறேன்" என்று விளக்கம் சொன்னான்.

‘‘ஒன்னைப் பத்தி தெரியும் தல... டார்ச்சர் செய்யும்போது. ஏன் இந்த மியூசிக்க கேக்குறே?" என்று கேட்டான் பாஸ்கர்.

‘‘அப்படியா ஒரு கதை சொல்கிறேன், கேள்’’

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு ம்யூனிச் என்ற ஒரு நகரத்திலே நடந்த கதை. அங்கே அப்போது ஒரு சடங்கு வழக்கத்தில் இருந்தது. வீட்டிலுள்ள நெருப்பையெல்லாம் அணைத்துவிட்டு ஊர் நடுவே தீ மூட்டி அதில் குளிர் காய்ந்தால் கால்நடைகளுக்கு எந்த வியாதியும் வராது என்று நம்பிக்கை.

அந்த அக்கினி விழா நடந்து கொண்டிருந்தது அங்கே. அப்போது அந்த நகரத்தில் ஒரு கவிஞன் இருந்தான். அவன் அந்த ஊரின் தலைவராக இருந்தவரின் பெண்ணைக் காதலித்தான். ஒருநாள் ஒரு பொது இடத்தில் வைத்து அவளை முத்தமிட்டான். அவளுக்கு அது அவமானமாகப் போனது. அவனைப் பழி வாங்க வேண்டும் என்று திட்டமிட்டாள்.

‘‘கொஞ்சம் பொறு" என்று சொல்லிவிட்டு காடையை ஒரு பீப்பாயில் நிற்கச் செய்து அதில் அவன் இடுப்பு வரை தண்ணீரை நிரப்பி அதில் விட்டுவிட்டு கரண்ட் ஷாக் கொடுக்கச் செய்தான்.

காடை மயக்கமடைந்தால் குழாயின் மூலம் முகத்தில் தண்ணீரைப் பீய்ச்சி பிரக்ஞை நிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

‘‘அந்தப் பெண் அன்று இரவு கவிஞனைத் தன் மாளிகைக்கு வரச் சொன்னாள். 'நான் மாடியில் இருப்பேன். கீழே ஒரு பெரிய கூடை தொங்கும். நீ நள்ளிரவு நேரத்தில் வந்து அந்தக் கூடையில் அமர்ந்து கொள். நான் மேலேயிருந்து கூடையை இழுத்துக் கொள்கிறேன். நாம் இருவரும் இன்பம் துய்ப்போம்' என்றாள்.

கவிஞன் வந்து கூடையில் அமர்ந்ததும் பாதி வரை மேலே விட்டு அப்படியே அவன் தொங்கும் நிலையில் கயிறைக் கட்டிவிட்டாள். ஊர் மக்களை அழைத்து அவனைப் பார்க்கச் செய்தாள். கீழே குழுமி விட்ட மக்கள் அவனைப் பார்த்து கெக்கலி கொட்டிச் சிரித்தார்கள். கோபமடைந்த கவிஞன் தன் கவித்திறத்தால் அந்த ஊரின் அக்கினியை முழுமையாக அணைத்துவிட்டான். என்ன முயன்றும் அவர்களால் தீயை மூட்டவே முடியவில்லை. தீயில்லாமல் மனிதர்கள் வாழ்வது எப்படி?

நகர மக்கள் திரண்டு வந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டார்கள். 'ஒரு மேட்டுக்குடி கன்னிப் பெண்ணை எனக்குக் காணிக்கை ஆக்கினால் மீண்டும் தீ மூளும்' என்றான் கவிஞன்.

நகரத் தலைவரின் மகளிடம் முறையிட்டு அவளைக் கவிஞனிடம் அனுப்பினார்கள் மக்கள். இருவரும் புணர்ந்த போது அந்தப் பெண்ணின் தேகத்தில் எழுந்த காமாக்னியால் அந்த ஊரின் அக்கினிக்கு மீண்டும் உயிர் வந்தது...’’

பல நாட்கள் தொடர்ந்தது டார்ச்சர். 24 மணி நேரமும் காடையின் பக்கத்தில் ஆள் போட்டு அவனைத் தூங்காமல் பார்த்துக் கொண்டார்கள். தொடர்ந்து அவன் காதுகளில் ஒயர் மூலம் 180 டெஸிபலுக்கு அதிகமான சத்தங்களைக் கேட்கச் செய்து காதுகள் முழுமையாக செவிடாக்கப்பட்டன. ஸ்பீக்கர் செட்டிலிருந்து ஒயரை எடுத்து அவனுடைய காதுகளில் செருகி இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தூங்கினால் முகத்தில் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. ஒரு மாத மாயிற்று அவனைப் பைத்தியமாக்க.

25

மரணத்தைக் கண்டு நான் ஏன் அஞ்ச வேண்டும்? மரணம் என்ன, நம்முடைய எதிரியா? வாழ்க்கையின் ஒரு அங்கமே மரணம். வாழ்க்கையைப் போன்றே மரணத்தையும் கொண்டாட வேண்டும். மரணம் ஒரு மலரைப் போன்றது. உண்மையில் மரணத்துக்கும் வாழ்வுக்கும் வித்தியாசமே கிடையாது. நம்முடைய ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்துளியும், ஒவ்வொரு சுவாசமும் நம்மை மரணத்தை நோக்கியே இழுத்துக்கொண்டு செல்கிறது.

ஒரு காலத்தில் வாஜஷ்ரவாசன் என்று ஒருவன் இருந்தான். பிரபஞ்ச சக்தியைப் பெறுவதற்காக அவன் ஒரு யாகம் வளர்த்து, தன்னிடமிருந்த அத்தனை மாடுகளையும் பலி கொடுத்தான். ஆனாலும் அவனுடைய பலி ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதைப் பார்த்து வருந்தியபோது, அவனுடைய எட்டு வயது மகன் நசிகேதன் ‘‘என்னைப் பலி கொடுங்கள் தந்தையே’’ என்றான்.

‘‘மரணத்தை எதிர்கொள்பவர்களில் நான் முதல் மனிதனோ கடைசி மனிதனோ அல்ல; அப்படியிருக்கும்போது நான் ஏன் மரணத்தைக் கண்டு அஞ்ச வேண்டும்? மனிதர்கள் புற்களைப் போல் முளைக்கிறார்கள். புற்களைப் போலவே சாகிறார்கள்; மீண்டும் புற்களைப் போலவே முளைக்கிறார்கள்" என்று யோசிக்கிறான் நசிகேதன்.

நசிகேதன் பலியிடப்படுகிறான். எமலோகம் செல்லும் நசிகேதன் உடனடியாக எமனைச் சந்திக்க முடியவில்லை.

எமன் வெளியூர் சென்றிருக்கிறான்.

எமனுக்காக மூன்று பகல்களும், மூன்று இரவுகளும் அரண்மனை வாசலிலேயே உணவின்றி, தண்ணீரின்றிக் காத்திருக்கிறான் நசிகேதன். ஊர்

திரும்பிய எமன் வாசலில் நின்று கொண்டிருக்கும் சிறுவனைப் பார்த்து ‘‘நீ இங்கே வர வேண்டிய நாள் இன்னும் வரவில்லையே? எப்படி நீ இங்கே வந்தாய்?" என்று கேட்க, தன் கதையைக் கூறுகிறான் நசிகேதன்.

தான் அழைக்காமலேயே தன்னுடைய விருந்தினனாக வந்த ஒரு சிறுவனை மூன்று தினங்கள் இப்படிப் பட்டினி போட்டுவிட்டது பற்றிக் குற்ற உணர்வு கொள்ளும் எமன், ‘‘போய் சாப்பிட்டு ஓய்வு எடுத்து விட்டு இரவு விருந்துக்கு வா; பேசுவோம்" என்று சொல்லி அனுப்புகிறான்.

இரவு சூழ்கிறது.

‘‘என்னுடைய இடத்தில் நீ மூன்று தினங்கள் உணவும் தண்ணீரும் கொள்ளாமல் பொறுமையாகக் காத்திருந்தாய். அதனால் உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன், கேள்’’ என்கிறான் எமன்.

‘‘என் தந்தைக்கு அமைதியைத் தாருங்கள், தர்மராஜா!’’

‘‘ததாஸ்து."

‘‘இந்த எமலோகத்தில் வசிப்பவர்களிடையே பசி, தாகம், துக்கம் எதையுமே என்னால் காண முடியவில்லை. இவர்களுக்கு மரணம் பற்றிய பயமும் இல்லை. எனக்கும் இதே போல் பசியும், தாகமும், துக்கமும் இல்லாத வாழ்வை அருளித் தாருங்கள்."

பசி, தாகம், துக்கம் மூன்றையும் போக்கும் வல்லமையுள்ள தீயை உண்டாக்கும் மந்திரம் அவனுக்குக் கற்பிக்கப்பட்டது. ‘‘அது மட்டுமல்ல நசிகேதா! இனிமேல் அந்தத் தீ உன்னுடைய பெயராலேயே அழைக்கப்படும்.’’

‘‘மரணத்துக்குப் பிறகு என்ன நடக்கிறது? விளக்கித் தாருங்கள் பிரபு."

‘கடவுள்களுக்கே சரியாகத் தெரியாத அந்த விஷயத்தை இந்தப் பாலகன் எப்படிப் புரிந்து கொள்வான்?' என நினைக்கும் எமன், ‘‘இந்த உலகத்திலுள்ள அத்தனை இன்பங்களையும் உனக்குத் தருகிறேன்; எத்தனை ஆண்டுகள் நீ வாழ விரும்புகிறாயோ அத்தனை ஆண்டுகள் வாழ்வதற்கும் வரம் தருகிறேன். அது மட்டுமல்லாமல், இந்த உலகத்துக்கே உன்னை ராஜாவாக்குகிறேன். இந்த உலகின் பொக்கிஷங்கள் அனைத்தும் உன் காலடியில் கிடக்கச்

செய்கிறேன். ஆனால் மரணத்தைப் பற்றி மட்டும் என்னிடம் கேட்காதே'' என்கிறான் எமன்.

‘‘பிரபு! நீங்கள் சொல்லும் எல்லா இன்பங்களுமே அநித்திய மானவை அல்லவா? எத்தனை செல்வம் இருந்தாலும் அதனால் மனிதனுக்குத் திருப்தி உண்டாகுமா? உங்களைச் சந்தித்த பிறகும் ஒரு மனிதனுக்குப் பொருள் மீது ஆசை ஏற்படுமா? அதனால் எனக்கு இந்த லௌகீக சந்தோஷங்கள் எதுவும் வேண்டாம். எனக்கு மரணத்தைப் பற்றிச் சொல்லுங்கள்.''

நசிகேதன் தனது தேடலில் மிக உறுதியாக இருப்பதைக் கண்டு எமன் பேச ஆரம்பிக்கிறான்.

‘‘இரண்டு வழிகள் இருக்கின்றன நசிகேதா. ஒன்று, மனம் புத்தி என்ற இரண்டினாலும் பிரும்மத்தை உனக்குள் உணர்வது. இரண்டாவது, மனம் புத்தி ஆகியவற்றைத் தவிர்த்த மீதி மூன்று சக்கரங்களுக்கு அடிமையாகி ஜனனம் மரணம் என்ற வட்டச் சுழற்சியில் மாட்டிக் கொள்வது.

ஒரு மனிதன் சாகும்போது ஆத்மா அழிவதில்லை; உடல் மட்டுமே அழிகிறது."

‘‘இரண்டும் ஒன்றே அல்லவா?''

ஒரு தேரில் பயணி ஒருவன் அமர்ந்திருப்பது போலவே ஆத்மா இந்த உடலில் அமர்ந்திருக்கிறது. ஐம்புலன்கள் கூட ஆத்மா அல்ல. அவை தேரின் குதிரைகளைப் போன்றவை. அவ்வளவுதான். அந்த ஐந்து குதிரைகளும் மனம் என்ற ஒன்றினால் செலுத்தப்படுகிறது. குதிரைகள் தறிகெட்டுப் போனால் தேர் விழுந்து விடும்.

ஆத்மாவுக்கு ஜனனமோ மரணமோ கிடையாது. எப்படி ஆலின் விதையில் ப்ராக்ருதமான ஆலமரம் உறைகிறதோ அவ்வாறே இந்த தேகத்தில் உறைந்திருக்கிறது ஆத்மா.

மலர்களும் மலைகளும் காற்றும் கடலும் ஆகாசமும் நட்சத்திரங்களும் நிலமும் நீருமாக எல்லாமாக இருக்கிறது ஆத்மா எனப்படும் பிரும்மம். அந்த பிரும்மமே

அஹம் பிரும்மாஸ்மி.

இதை உனது புத்தியால் நீ அறிந்து கொள்ள முடியாது.

எவனுடைய ஹ்ருதயம் எல்லா ஆசைகளையும் துறக்கிறதோ அவனே நித்தியத்துவத்தை அடைகிறான். அவனே மரணத்திலிருந்து விடுதலை அடைகிறான்... அதுவே பிரம்ம ஞானம்!"

26

ஒருவனும் கிரியை செய்யக் கூடாத இராக்காலம் வருகிறது.

பரிசுத்த வேதாகமம்: யோவான்: 9:4

நாவலை முடித்து கிருஷ்ணாவுக்கு அனுப்பினேன். ‘‘என்ன சாரு, நாவலில் ஒரு முடிவே இல்லையே? உதாரணமாக, அந்த இன்ஸ்பெக்டர் பையன் என்ன ஆனான்? அவனை உள்டார்ச்சர் செய்யாமல் ஆண்குறியை சிதைத்தார்களே? வெளியே விடுவதாக இருந்தால் உள்காயம் மட்டும்தானே ஆக வேண்டும்? கோணி ஊசியால் தைத்தால் அவன் ஆண்குறி அழுகிப் போய் இருக்குமே? லாஜிக் இடிக்கிறதே? தர்மா என்ன ஆனான்? நாய் பாஸ்கர் என்ன ஆனான்?'' என்று என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினான்.

அதெல்லாம் ஒரு லாஜிக்கும் இடிக்கவில்லை. அந்தப் பையனை காசுக்காக டார்ச்சர் செய்யவில்லை. ஒரு கொலைவெறியில் செய்தார்கள். அவனுடைய ஆண்குறி அழுகிவிட்டது. சர்ஜரியின் மூலம் அகற்றப்பட்டது. இல்லாவிட்டால் ஆள் செத்திருப்பான். அவனைத் திருப்பி அனுப்பும்போது அவன் ஒரு நடைப்—பிணமாகத்தான் போனான். அந்த இன்ஸ்பெக்டரால் எதுவும் செய்ய முடியவில்லை. ஏதோ ஒரு லஞ்சக் கேஸில் பிடிபட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டான் இன்ஸ்பெக்டர். அவன் மனை—விக்குப் பைத்தியம் பிடித்தது. இயற்கையின் விதியில் ஏதோ ஒரு சமநிலைப்படுத்தும் தன்மை இருக்கிறது கிருஷ்ணா, சரியாகப் புரியவில்லை .

சரி, உனக்காக இந்த நாவலுக்கு ஒரு முடிவைச் சொல்லலாம். புரட்சியாளர்கள் சிலர் கடைசி காலத்தில் பக்திமான்களாக —மாறுவதில்லையா? அதேபோல் தர்மா ஒரு மிடில் க்ளாஸ் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு முழு நேர எழுத்தாளனாக மாறினான். இந்த மிடில் க்ளாஸ் சாகரத்தில் மூழ்குவது இருக்கிறதே, அதுவும் ஒரு சித்ரவதைதான். ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், கேள். தர்மா ஒரு அரசாங்க

அலுவலகத்தில் சில காலம் குமாஸ்தாவாக இருந்தான். அப்போது அவனுடைய சக ஊழியன் ஒருத்தன் சொன்ன சம்பவம் இது. ஒருநாள் அவனுடைய மனைவி குளியலறையிலிருந்து இவனைக் கூப்பிட்டு இருக்கிறாள். கதவை லேசாகத் திறந்து “அடுப்பில் வெந்நீர் இருக்கிறது; மறந்துவிட்டேன். கொஞ்சம் அதை எடுத்துக் கொண்டு வந்து இங்கே வைங்களேன்" என்று சொல்கிறாள். இவனும் பிடிதுணியால் வெந்நீரை எடுத்து வந்து குளியலறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போய் பச்சைத் தண்ணீரில் ஊற்றுகிறான். அதற்குள் அந்தப் பெண் கதவின் இடுக்கினுள் சென்று ஒளிந்து கொள்கிறாள்.

அது மட்டுமல்லாமல் “சே சே... என்ன அசிங்கம் இது? சீக்கிரம் வெளில போங்க... நான் உங்களை வெளியிலதானே வைக்க சொன்னேன்?” என்று லஜ்ஜையுடன் கத்தவும் செய்தாளாம்.

இவ்வளவுக்கும் அவன் அவளுடன் இரண்டு குழந்தை பெற்றவன். “உன் மனைவியை நீ நிர்வாணமாகப் பார்த்ததே இல்லையா?” என்று கேட்டான் தர்மா.

“சான்ஸே இல்லை, அதெல்லாம் கும்மிருட்டில் நடக்கும் விஷயம்."

“அப்படியானால் ஓரல் செக்ஸ்?"

“அடி வாங்குவே நீ..."

“இல்ல, புரியுற மாதிரி சொல்லு."

“அதெல்லாம் பண்ணினா நான் அடிக்கடி தேவுடியாகிட்ட போய்ட்டு வர்றவன்னு சொல்லி உடனடியா டைவர்ஸ் வாங்கிடுவாடா... நீ ஆளை விடு...”

ஒரு கட்டத்தில் தர்மாவும் இதேபோல் மீனா என்ற ஒரு மிடில் க்ளாஸ் பெண்ணைப் பார்த்து மணந்து கொண்டான். திருமணமான புதிதில் அவன் ஒரு கட்டெறும்பை நசுக்கிவிட்டான். ஏதோ ஒரு கொலையே நடந்த மாதிரி மிரண்டு போனாள் மீனா. “என்னடி இது?” என்று கேட்டதற்கு ‘இப்படியெல்லாம் உயிர்களைக் கொல்லக் கூடாது' என்று சொல்லி ஒரு மணி நேரம் லெக்சர் கொடுத்தாள்.

“சரி, கட்டெறும்பைக் கடிக்க விடலாம்ங்கிறியா?"

“அப்படி ஒன்னும் சொல்லல... ஒரு பேப்பரை எடுத்துப் போட்டீங்கன்னா அதுமேல அது ஏறும்..... அப்படியே வெளியே கொண்டு போய் போட்டுடலாம், வெரி ஸிம்பிள்."

“சரி, பாம்பு வந்தா?”

“பாம்பு மாதிரி நல்ல ஜீவனே வேற எதுவும் கிடையாது. எங்க அம்மாவே பாம்பு வளத்தாங்க... உள்ள வராதேன்னு சொன்னா அது பாட்டுக்க போய்டும்... நம்ம அத பயமுறுத்துனாதான் அது கடிக்கும். பாம்பைக் கண்டாலே அடிக்கணும்னு மனுசங்க தடியைத் தூக்கித் தூக்கி அதுங்களுக்கும் மனுச வாடைன்னாலே பயம் வந்துடுது... அந்த பயத்தை அதுக்கு நாம் கொடுக்கலேன்னா பாம்பு நம்மள ஒன்னுமே செய்யாது...”

“சரி, அப்படீன்னா எனக்கு எதுக்கு நான்வெஜ் சமைச்சுக் குடுக்குறே... அதுவும் பாவம்தானே?”

“அதுவும் தப்புதான்... ஆனா நீங்களா மாறினாதான் உண்டு. யார் சொல்லியும் மாறக் கூடாது. அதோட இன்னொன்னும் இருக்கு... நாம் எல்லாருமே அம்மாவோட ரத்தத்தைப் பாலா குடிச்சு வந்தவங்கதானே?”

எல்லாவற்றுக்கும் தயாராக பதில் வைத்திருப்பவர்களைக் கண்டு தர்மா எப்போதும் பயம் கொள்ளுவான். அந்த பயத்தோடு, அவ்வப்போது பாம்பு பல்லி எல்லாம் பற்றிப் பாடமும் கேட்டபடி வாழ்ந்து–கொண்டிருந்த போது ஒருநாள் அவனுக்கு ஒரு போன் வந்தது.

“தல எப்படி இருக்கே?”

“நல்லா இருக்கேன்... யாரு நீங்க?”

“என்னா தல... நம்மள மறந்துட்டே... ஆனா அதுவும் நல்லதுதான். நானும் பழசையெல்லாம் மறந்துட்டு லைஃப்ல செட்டில் ஆயிட்டேன்... என்னா தல, இன்னமா புரில? நான் நாய் பாஸ்கர் பேசுறேன்... மேரேஜ் ஆய்டுச்சு.... ஒரு பொண் கொழந்தை... இங்கே பெஸண்ட் நகர்ல வீடு... சின்னதா பிஸினஸ் பண்ணிக்கிட்டு இருக்கேன்... ஒரு எஞ்சினியரிங் காலேஜும் வச்சிருக்கேன்...”

“ஓ பாஸ்கரா... எப்படி இருக்கே... விஷயத்தைக் கேக்கவே நல்லா இருக்கே... ஒருநாள் சந்திப்போமே?”

“அவசியம் தல... இப்போல்லாம் குடிக்கிறதைக் கூட நிறுத்திட்—டேன்... இந்த சிகரெட்டைத்தான் விட முடியல... இருக்கட்டும் தல... உன்கிட்ட ஒரு முக்கியமான உதவி கேட்டுத்தான் போன் பண்ணினேன்...”

“சொல்லு பாஸ்கர்...”

“சினிமாவுல ஒரு வில்லன் கேரக்டருக்கு சிபார்சு பண்ணு தல... ஒனக்குத்தான் சினிமாவுல நெறயா ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்கலாம்ல?”

“இருக்காங்க... அது சரி... நாமதான் வில்லனாவே வாழ்ந்துட்டம்ல... அப்புறம் எதுக்கு வில்லன் மாதிரி நடிக்கணும்——?”

“ஜோக் அடிக்காத தல... நீ இன்னும் மாறவே இல்லை. நமக்குக் கொஞ்சம் சான்ஸ் வாங்கிக் குடு தல... ஒன்னக் கடவுளா வச்சுக் கும்புடுவேன்...”

எப்போதும் சேர்ந்தே இருக்கும் ஒரே பெயரைக் கொண்ட இரண்டு பட்சிகள் ஒரு விருட்சத்தின் கிளையில் அருகருகே அமர்ந்திருக்கின்றன. ஒரு பட்சி அந்த விருட்சத்தின் இனிய சுவையுடைய கனியைப் புசிக்கிறது, மற்றொரு பட்சி அதைப் புசிக்காமல் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஸ்வேதாஸ்வதர உபநிஷத்

அத்யாயம் 4, ஸ்லோகம் 6

சாரு நிவேதிதா

18.12.1953—இல் திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள இடும்பாவனம் என்ற ஊரில் பிறந்தார். வளர்ந்ததும் பள்ளிப் படிப்பும் நாகூரில். கல்லூரிப் படிப்பு காரைக்கால், தஞ்சாவூர், திருச்சி. கல்லூரிப் படிப்பை முடிக்கவில்லை. சென்னையில் ஒரு ஆண்டு சிறைத்துறையில் எழுத்தர் பணி. 1978—இலிருந்து 1990 வரை தில்லி நிர்வாகம் — சிவில் சப்ளைஸ் துறையில் ஸ்டெனோ. பின்னர் பனிரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு அஞ்சல் துறையில் பணி. 2002—இலிருந்து முழுநேர எழுத்து.

இகனாமிக் டைம்ஸ் நாளிதழின் அகில இந்தியப் பதிப்பில், 2001 — 2010 என்ற பத்தாண்டுகளின் சாதனையாளர் பட்டியலில் தமிழகத்திலிருந்து இடம் பெற்ற இரண்டு பேர்களில் ஒருவர் சாரு நிவேதிதா.

இவரது நாவல் ‘ஸீரோ டிகிரி’ Jan Michalski சர்வதேசப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஹார்ப்பர் காலின்ஸ் தொகுத்த, இந்தியாவின் ஐம்பது முக்கிய புத்தகங்களில் ஒன்றாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் இவர் எழுதும் கட்டுரைகள் சர்வதேச அளவில் கவனம் பெற்றவை. லண்டனிலிருந்து வெளியாகும் PS Publication—இன் Exotic Gothic தொகுதியில் இவரது Diabolically Yours என்ற பேய்க்கதை ஆங்கிலத்தில் வெளியாகி உள்ளது. தற்சமயம் லண்டனிலிருந்து வெளிவரும் ArtReview Asia என்ற பத்திரிகையில் தொடர் கட்டுரை எழுதி வருகிறார்.

இவரது எழுத்தை ஆங்கில விமர்சகர்கள் விளதிமீர் நபக்கோவ், வில்லியம் பர்ரோஸ், கேத்தி ஆக்கர் போன்ற எழுத்தாளர்களோடு ஒப்பிடுகிறார்கள். உலகின் முக்கியமான transgressive வகை எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார் சாரு நிவேதிதா. தற்போது சென்னையில் வசிக்கிறார்.